Registered as a Newspaper
பக்கம் -20 விலை 12/=

# தமிழ் அலை

வாரமலர் TAMILALAI
அலை - 01 ஞாயிற்றுக்கிழமை, 22-02-2004 ஓசை -46



## போர் நிறுத்த உடன்படிக்கை

## இரண்டாண்டு பூர்த்தி

## அஸ்தமனமாகும் உதயசூரியன்

## விழ விழ எழுவோம் விடுதலை பெறுவோம்

தமிழ் பேசும் மக்களின் உணர்வலை

தமிழ் அலை
வாரமலர் Tamilalai
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொ. பே,
தொலைநகல் } 065.2226110
E-MAIL. tamilalai32@yahoo.com.
www.tamilalai.net
22.02.2004

## வேட்பாளர் பட்டியலில் பெண்கள் சமத்துவம் வேண்டும்

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான தமிழ் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்பட்டி யல் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

மட்டக்ளப்பு மாவட்ட த்தில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பி னர்களான ஞா.கிருஷ்ணப்பிள்ளை, ரி.தங்கவடிவேல் ஆகி இருவரும் இம்முறை வேட்பாள பட்டியலில் இடம் பெறவில்லை.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் மட்டும் இடம் பெற்றுள்ளார். எட்டு வேட்பா ளர் கொண்ட இப்பட்டியலில் இரு ஊடகவியலாளர்களுக் கும் ஒரு பெண் வேட்பாளரு க்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை. சிறப்பம்சமாகும்.

கடந்த காலங்களில் மட்டக் களப்பு மாவட்டத்தில் பெண் வேட்பாளர்கள் நிறுத்த ப்படாமையினால் பெண் சமு தாய மத்தியிலே பெரும் குறைபாடாகக் காணப்பட்டது. பெண்களுக்கான சமத்துவம் அதிகரிக்கப்பட்டு வரும் சூழ்நிலையில் நாடாளுமன்ற த்திலும் பெண்களின் எண்ணிக் கையை அதிகரிக்கும் வகையில் இப்பட்டியல் தயாரிக்கப்பட்டிருப்பது. குறித்து பெண்கள் அமைப்புக்கள் பாராட்டு தெரிவித்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தை முன்னுதாரணமாகக் கொண்டு தமிழர் தாயகமான வடக்கு கிழக்கின் ஏனைய மாவட்டங்களிலும் பெண வேட்பாளர்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பதே அனை வரது அவா.

இவை ஒருபுறமிருக்க. தமிழ் தேசிய கூட்டமைப் புக்குள் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீடம் காட்டும் சில முரண்பாடான தன்மைகள் காரணமாக கடந்த பொதுத் தேர்தலில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ் கூட்டமைப்பு இம்முறை போட்டியிட முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது. பழம் பெரும் கட்சி யான தமிழரசுக் கட்சியின் சின்னமான வீடு சின்னத்தில் போட்டியிட போகின்றன.

எனவே அனைத்து தமிழ் மக்களும் ஓர் அணியில் நின்று தமிழ் தேசிய கூட்டமைப்பை வெற்றி பெறச் செய வோம்.

### இன்றைய நாள்

சூரி: காலை 06.31 மாலை 06.17
ராகு: பி.ப. 04.48 மாலை: 06.16
எம: ந.ப: 12.23 பி.ப 01.52
தெய்: மு.கூ. மு.ப.11.25 ந.ப. 12.23
நஷ- தியா: பி.இ. 12.53 பி.இ. 02.30
திதி: பி.ப. 02.38வரை துவிதியை
நஷ: பி.ப. 03.00வரை பூரட்டாதி
சு.யோகம்: பி.ப. 03.00 சித்தம்,
பின்னர் அமிர்தம்
சிராத்தம்: மாசிமாத பூ. துவிதியை
பிறந்ததின வழிபாடு: பூரட்டாதி

# மட்டக்களப்பில் அதிகபட்சமான ஆசனங்களை தமிழ்தேசிய முன்னணி எவ்வாறு கைப்பற்றலாம்

ஸ்ரீநேசன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகளாக தமிழ்த்தேசிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசிய முன்னணி, ஏனைய தமிழ்க்குழுக்கள் என்பவற்றைக் கடந்த காலங்களில் கண்டோம். தற்போதைய நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி, தேசிய ஐக்கிய முன்னணி (பேரியல் தலைமை) போன்ற கட்சிகளை உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் இத்தேர்தலில் போட்டியிடக்கூடிய நிலைமையுள்ளது. எது எப்படியாக இருந்தாலும், மட்டக்களப்பு மாவட்ட வாக்குகள் தமிழர், முஸ்லிம் என்ற இனரீதியாகவே அளிக்கப்படக் கூடிய சூழ்நிலையுள்ளது. அந்தவகையில் எதிர்வரும் தேர்தலில் கணிசமான பெருமளவு தமிழ் வாக்குகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும், முஸ்லிம் வாக்குகள் ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ், ஐ.ம.க.சு கூட்டணிக்கும் (SLFP+ JVP + NCIA.....) அளிக்கப்படக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு. அதேவேளை ஐ.தே.மு இல் தலைமை வேட்பாளராக அலிசாகிர் மௌலானா போட்டியிடக்கூடிய வாய்ப்புகள் உள்ளதால் அக்கட்சிக்கும் முஸ்லிம் வாக்குகள் கணிசமானவை அளிக்கப்படலாம்.

மட்டக்களப்பிலுள்ள வாக்காளர் தொகையின் அடிப்படையில் நோக்கும் போது இனரீதியாக 4தமிழ்ப் பிரதிநிதிகளும், ஒரு முஸ்லிம் பிரதிநிதியும் தெரிவு செய்யப்படக் கூடிய வாய்ப்புண்டு. 2001வாக்கெடுப்பின்படி மொத்த (மட்டக்களப்பு) வாக்காளர் தொகை 280,000 முஸ்லிம் வாக்காளர் 65,366 இதன்படி தமிழர்: முஸ்லிம் பிரதிநிதித்துவம் 4:1 என்ற அடிப்படையில் அமைய வேண்டும்.

1989ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் 4தமிழ் பிரதிநிதிகளும், ஒரு முஸ்லிம் பிரதிநிதியுமே தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் 1994, 2000, 2001களில் தமிழர் தரப்பினர் முறையான தேர்தல் வியூகத்தை அமைக்காததால் 3 பிரதிநிதிகளையே பெற முடிந்தது. மேலும் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் வாக்களிப்புக்களில் ஏற்பட்டுள்ள இடையூறுகளாலும், தமிழர்கள் தமது வாக்கினை அளிப்பதில் காட்டிய கரிசனையின்மையாலும் தமிழர்கள் 3 பிரதிநிதிகளையே பெற முடிந்தது. ஆனால் எதிர்வரும் ஏப்ரல் 2ல் நடைபெறவுள்ள தேர்தலில் தமிழ்க் கட்சிகளும், தமிழ வாக்காளர்களும் சாதுரியமான முறையில் நடந்து கொண்டால் 4பிரதிநிதிகளைப் பெற வாய்ப்புண்டு.

மட்டக்களப்பில் தமிழர்களின் வெகுவான ஆதரவைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது. (த.ஐ.வி+ அ.இ.த.கா+ த.ஈ.வி.க +ஈ.பி.ஆர்.எல்.எவ்.) சுமார் 80,000 வாக்குகளில் இருந்து 125 000 வாக்குகள் வரை பெற்றாலும் 3 ஆசனங்களையே கைப்பற்றக் கூடியதாகவே விகிதாசாரப் பிரதிநிதித்துவம் உள்ளது. ஆயின் 130,000 இற்கு அதிகமான வாக்குக்களை த.தே.கூட்டமைப்பு பெற்றால் மட்டுமே 4ஆசனங்களைக் கைப்பற்ற வாய்ப்புண்டு ஆனால் 105,000-115,000 வாக்குக்களைத் தமிழர்கள் அளிக்கின்ற போதிலும் 4 ஆசனங்களைக் கைப்பற்ற வேண்டுமாயின் மட்டக்களப்பு மாவட்டத்தில் த.தே. கூட்டமைப்பின் சார்பாக இரண்டு அணிகள் நிறுத்தப்பட வேண்டும். அவ்விரு அணிகளில் பிரதான அணி இரு தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டும், மற்றைய அணி ஒரு தொகுதியை அடிப்படையாகக் கொண்டு தமிழர்களின் வாக்குரிமைகளை பெறக்கூடிய விதத்தில் தேர்தல் பிரசாரங்கள், நடவடிக்கைகள் அமைய வேண்டும் (மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா, பட்டிருப்பு, மட்டக்களப்பு ஆகிய தொகுதிகள் உள்ளன என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளவும்) அவ்வாறான நிலையில் தமிழர் சார்பாக பிரதான அணி 75000-80,000 வாக்குரிமைகளை பெறுமிடத்து மூன்று ஆசனங்களைப் பெற முடியும் அதே வேளை மற்றைய அணி 30,000-35,000 வாக்குக்களைப் பெற்று ஒரு ஆசனத்தினைப் பெற முடியும். ஆனால் தமிழர் விரோதப் போக்குடைய, பேரினவாதக் கட்சிகளுடன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொடர்புடைய கட்சிகளை தமிழர்களின் இரண்டாவது அணியாகக் கொள்ள முடியாது. மேலதிக விளக்கத்திற்காக அட்டவணையிலுள்ள விளக்கத்தினை கவனத்தில் கொக.

மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற ஆசனங்கள்- 05

| கட்சிகள் | பெற்றவாக்குகள் | போனஸ் சீற் | 1ம்சுற்று ஆசனம் | மீதிவாக்கு | 2ம் சுற்று ஆசனம் | மொத்த ஆசனம் |
|---|---|---|---|---|---|---|
| A | 130,000 / (51 000) | 1 | 2 | 28,000 | 1 | 04 |
| B | 28,000 / 51 000 | — | 0 | 28,000 | 1 | 01 |
| C | 27,000 / 51 000 | — | 0 | 27,000 | — | — |
| D | 19,000 / 51 000 | — | 0 | 19,000 | — | — |
| E<br>F | 4000<br>2000 } 6000 | — | — | — | — | — |
| மொத்தம் | 210,000 | 1 | 2 | | 1 | 05 |

(அட்டவணை- 01)

வெட்டுப்புள்ளி வாக்கு $\frac{5}{100}$ X 210,000 = 10500

தொடர்புடைய வாக்கு= 210,000 - (4000 + 2000) = 204000

முடிவான எண் = $\frac{204000}{5-1}$ = $\frac{204000}{4}$ = 51000

குறிப்பு:- த.தே.கூட்டமைப்பினை கட்சி 'A' எனக் கொண்டால் சுமார் 130,000 வாக்குகளைப் பெறும் பட்சத்திலேயே 04 ஆசனங்களைப் பெறுவதற்குச் சாத்தியமுள்ளது. மேற்படி மாதிரிப் புள்ளி விபரங்களின் படி த.தே.கூட்டமைப்பு 130,000ஐ விடவும் குறைவான வாக்குகளைப் பெறும் வேளையில் 4ஆசனங்களுக்கான சாத்தியங்கள் குறைவடையலாம். தமிழர் தரப்பு சார்பாக இரு அணிகளை நிறுத்தும் போது குறைந்தளவு வாக்களிப்பாக இருந்தாலும் (சுமார் 105,000) 4 ஆசனங்களைக் கைபற்ற முடியும் என்பதற்கான புள்ளி விபரம் கீழ்வரும் அட்டவணையில் உள்ளவாறு அமையலாம்

| கட்சிகள் | பெற்றவாக்குகள் | போனஸ் ஆசனம் | 1ம்சுற்று ஆசனம் | மீதிவாக்கு | 2ம் சுற்று ஆசனம் | மொத்த ஆசனம் |
|---|---|---|---|---|---|---|
| A1- | 75000 / 45000 | 1 | 1 | 30,000 | 1 | 03 |
| A2- | 30000 / 45000 | — | 0 | 30,000 | 1 | 01 |
| B | 28000 / 45000 | — | 0 | 28,000 | 1 | 01 |
| C | 27000 / 45000 | — | 0 | 27,000 | — | — |
| D | 20000 / 45000 | — | 0 | 20,000 | — | — |
| E<br>F | 3000<br>2000 } 5000 | — | — | — | — | — |
| மொத்தம் | 185,000 | 01 | 01 | — | 03 | 05 |

வெட்டுப்புள்ளி வாக்கு= $\frac{5}{100}$ X 185,000 = 9250

தொடர்புடைய வாக்கு= 185,000 - 5000 = 180,000

முடிவான எண்= $\frac{180,000}{5-1}$ = $\frac{180,000}{4}$ = 45000

குறிப்பு:- கட்சிகள் A1, A2 தமிழ்த் தேசியக் கூட்மைப்பு சார்பான இரு அணிகள் எனக் கொள்ளவும். மேற்படி அட்டவணைக்குரிய புள்ளிவிபரப்படி 105,000 இலும் சற்றுக் குறைவான வாக்குகளை A1, A2 அணிகள் பெற்றாலும் இரண்டும் சேர்ந்து 04 ஆசனங்களைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் A1, A2 அணிகளின் வாக்குகளை 3.1 ஆசன விகிதத்தைப் பெறக்கூடிய விதத்தில் நிர்ணயிக்க வேண்டிய தேவையும் உள்ளது.

மட்டக்களப்பில் கூடுதலான 4 பா.ம. ஆசனங்களைப் பெற வேண்டும் எனக் கருதும் தமிழர் தரப்பினர் இரண்டு விடயங்களில் தமது கவனத்தைச் செலுத்தவேண்டும்.

1) அட்டவணை1ல் குறிப்பிட்டவாறு த.தே. கூட்டமைப்பில் ஒரே அணியாக நிறுத்தி 130,000 ஐ விட கூடுதலான வாக்குகளைப் பெறுவதற்கு பரவலாக முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

2) குறைந்த பட்சமான 105,000 வாக்குகளுடன் 4 ஆசனங்களைப் பெற வேண்டுமாயின் நுணுக்கமான திட்டமிடலுடன் த.தே.கூட்டமைப்பு சார்பாக அட்டவணை 2ல் உள்ளவாறு இரு அணிகளை நிறுத்த வேண்டும். தேர்தல் விபரங்களைத் திட்டமிடுவதற்கு இக் கட்டுரை ஓர் ஆலோசனையாகக் கொள்வீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

# அம்பாறையில் உயிர்க் கொலை நாள் விழவிழ எழுவோம், விடுதலை பெறுவோம்

அம்பாறை மாவட்டத்தில் தமிழின உயிர்க் கொலை நாள் கடந்த வியாழக்கிழமை உணர்வு பூர்வமாக அனுஷ்ரிக்கப்பட்டது.

கடந்த 19.02.1986அன்று உடும்பன்குளத்தில் அப்பாவித் தமிழ் மக்களை வெட்டி மனித வேட்டை யாடிய இனவாத அரக்கர்களின் கோரக்கொலையின் 18வது ஆண்டினை முன்னிட்டு நடத்தப்பட்ட தமிழின உயிர்க்கொலைநாள் நிகழ்வில் ''விழ விழ எழுவோம் விடுதலை பெறுவோம்" என்ற கோரிக்கை வலியுறுத்தப்பட்டது. பலதரப்பட்ட உணர்வாளர்கள் உரை நிகழ்த்தினர்.

# தன்னாட்சி அதிகார சபையை முன்வைக்கும் கூட்டமைப்பு


தன்னாட்சி அதிகாரசபையை முன் வைத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இம்முறை தேர்தல் களத்தில் குதித்துள்ளது. விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளருக்கும் தமிழ்க் கூட்டமைப்பு பிரதிநிதிகளுக்குமிடை யில் கடந்த செவ்வாய்க் கிழமை கிளிநொச்சி சமாதானச் செயலகத்தில் சந்திப்பு நடைபெற்ற போது மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

கடந்த பொதுத் தேர்தலில் திம்புக் கோட்பாட்டை அடிப்படையாக வைத்து தமிழ் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிட்டது. இம்முறை தமி ழீழ விடுதலைப்புலிகளின் தன்னாட்சி அதிகார சபையை முன்நிலைப்படுத்தி போட்டியிட போவதாக முடிவு செய்தனர்.

### மட் மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியல

01. ஜோசப் பரராசசிங்கம்
02. இராஜன் சத்தியமூர்த்தி
03. தன்மன்பிள்ளை கனகசபை
04. கிங்ஸ்சிலி இராசநாயகம்
05. அரியநேத்திரன் பாக்கியசெல்வம்
06. சேனாதிராசா ஜெயானந்தமூர்த்தி
07. செல்வி. கதிர்காமர் தங்கேஸ்வரி
08. சுப்பிரமணியம் அரசரெத்தினம்

# தமிழ் கூட்டமைப்புடன் சந்திரசேகரன் இணைந்தார்



தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இணைந்து கொண்டார்

புதன் கிழமை வன்னிக்கு விஜயம் மேற்கொண்ட சந்திரசேகரன் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலக அரசியற் துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வனை சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் இந்த முடிவினை அறிவித்தார்.

# முஸ்லிம் கட்சிகள் — ஒன்றிணைவதிலும் இழுபறி!

முஸ்லிம் கட்சிகள் ஒரே குடையின் கீழ் போட்டியிடுவதிலும் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மரச்சின்னத்தின் கீழ் இதர முஸ்லிம் கட்சிகளை ஓரணி திரட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது. போரியல் அணி, அதாவுல்லா அணி, ஹக்கீம் அணி இவ்வாறு ஒவ்வொரு கோணத்தில் இக்கட்சிகள் நிற்பதால் ஒன்றிணைப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

# மட் மாவட்டத்தில் தமிழ் வேட்பாளருக்கு தட்டுப்பாடு ஐ.தே.க- சுதந்திரக்கூட்டு கலக்கம்

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சி சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டு முன்னணி ஆகிய கட்சிகளில் தமிழ் வேட்பாளர்களை நிறுத்துவதற்கு தட்டுப்பாடு நிலவுவதாக அக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பேரினவாதக் கட்சிகளின் கீழ் தமிழர்கள் தேர்தலில் போட்டியிடக்கூடாது என மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய இந்த தட்டுப்பாடு நிலவுகிறது. இரு மாவட்டங்களிலும் முழுக்க முழுக்க முஸ்லிம்களை வேட்பாளராக நிறுத்துவதா எனக் கட்சிகள் ஆலோசித்து வருகின்றனவாம். இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தமிழ் அமைப்பாளர்கள். முன்னாள் வேட்பாளர்களுடன் சிறிகோத்தா தொடர்பு கொண்டு எப்படியாவது தேர்தலில் போட்டியிட முயற்சி செய்யுங்கள் என அழுத்தம் கொடுப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்சியின் காசுக்கும், கதிரைக்கும் ஆசைப்பட்டால் மக்கள் பெரும் மன்றம் விடுத்திருக்கும் எச்சரிக்கையானது ஆபத்தாக முடியும் என இவர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.




# உதய சூரியன் மறையும் அபாயம் கூட்டமைப்புக்கு சின்னம் வீடு

தமிழ் தேசிய கூட்டமைப்பு பெரும்பாலும் வீடு சின்னத்தில் போட்டியிடும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் வி.ஆனந்தசங்கரி தமிழர் விடுதலைக்



கூட்டணியின் சக பிரதிநிதிகளுடன் முரண்பட்டு நிற்பதால் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுவது கடினமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### போடியார் பொறிவெடி




# புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் வாக்களிப்பு நிலையங்கள் வேண்டும்

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென தமிழ்மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். கடந்த பொதுத் தேர்தலின் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படவில்லை. மாறாக கொத்தணி அடிப்படையில் படையினர் கட்டுப் பாட்டுப் பகுதியில் வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்ட போதும் வாக்களிப்புக்குச் சென்ற மக்களை பிரதான நுளைவாயிலில் வைத்து படையினர் தடுத்து நிறுத்தியதால் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் மேலும் ஒரு தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை தமிழ் மக்கள் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே,இம்முறை போர் ஓய்வு நிலை காணப்படுவதால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் எனப் படுவான்கரை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அலிசாஹிர் தேசியப்பட்டியலில்?

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா இம்முறை தேசியப்பட்டியலில் இடம் பெறலாம் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐ.தே.க. கட்சியில் போட்டியிட தமிழ் வேட்பாளர்கள் மறுத்து வருவதாலும் முஸ்லிம்களின் வாக்குகளைச் சிதறடிக்கா வண்ணம் ஒரு பிரதிநிதித்துவத்தையாவது கொண்டு வரும் முயற்சியாகவும் இவ்வாறு தேசியப்பட்டியலில் இடம் பெறப் போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அமைச்சர் ரவி கருணாநாயக்க 500 மில்லியன் நட்டஈடு

பொதுஜன ஐக்கிய மக்கள் முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறு ப்பினர் மகிந்த அமரவீர, ஜெகத் புஸ்பகுமார மற்றும் முன்னாள் ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹெண்டுநிதி ஆகியோருக்கே இந்த நட்டஈடு கோரும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுயாதீன தொலைக்காட்சியில் ஒளிபரப்பட்ட துலாவ நிகழ்ச்சியில் கலந்துகொண்ட இந்த மூன்று பேருக்கும் எதிராகவே நஷ்ட ஈட்டுக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இந்த நிகழ்ச்சியை ஒளிபரப்பியமைக்காக சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்துக்கு எதிராகவும் இந்த நஷ்ட ஈட்டுக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.



இதேவேளை, அமைச்சர் ரவி கருணாரத்ன தொடர்பான குற்றச்சாட்டுக்களை பத்திரிகையில் வெளியிட்டமை தொடர்பிலும், மகிந்த அமர வீர, ஜெகத் புஸ்பகுமார ஆகியோருக்கு மேலதிக நட்டஈட்டுக் கடிதங்கள் இரண்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## வர்த்தக முகாமைத்துவ பீடம்

**விரிவாக்கல்/ வெளிவாரிப்பட்ட பாடநெறிகள் வணிகம்/ வியாபார நிர்வாகம் - 2003/2004**

''அனைவரும் பட்டதாரியாவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம''

கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடத்தால் வியாபார நிருவாகமாணி (BBA), வணிகமாணி (BCOM) பட்டநெறிகளுக்கு இட்டுச் செல்லும் டிப்ளோமா பாடநெறிக்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பல்கலைக்கழக அனுமதி பெறத்தகுதியுடைய அனைத்து பிரிவினரும் (கலை/ வர்த்தகம்/ விஞ்ஞானம்) இப்பாட நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.**

விண்ணப்பப்படிவம் மற்றும் பாடத்திட்ட விடயங்கள் பற்றிய விபரங்களை ரூபாய் ஐம்பதிற்கான (ரூபா 50/=) காசுக்கட்டளையினை ''நிதியாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை" என்னும் பெயரில் எடுக்கப்பட்டு நேரிலோ அல்லது (செங்கலடி தபால் நிலையத்தில் மாற்றத்தக்க வகையில்) சுய விலாசமிடப்பட்ட, முத்திரை ஒட்டிய 9" 6" அளவுள்ள தபால் உறை ஒன்றுடன் இணைப்பாளர், வெளிவாரிப் பாடநெறி, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, வந்தாறு மூலை, செங்கலடி எனும் விலாசத்திற்கு 05.03.2004 திகதிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 19.03.2004 இற்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.**

பதிவாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை,
வந்தாறுமூலை,
செங்கலடி.
13.02.2004.
தொடர்புகள்: 065 - 2240737

பச்சை மண்ணும் சுட்டமண்ணும் ஒட்டாது என சொல்வார்கள். அந்த நாட்களில் தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக்கட்சிக்காரர்களும், ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழரசுக் கட்சிக்காரர்களும் தேர்தல் காலத்தில் இப்படித்தான் சொல்லிக்கொள்வார்கள். தேர்தல் வந்தால் ஊரே இரண்டாகப் பிரிந்துவிடும். ஆனந்தசங்கரிக்கும் சம்பந்தன் தலைமையிலான தமிழர் விடுதலைக்கூட்டணியினருக்கும் இடையில் நடைபெற்றுவரும் அரசியல் போரைப்பார்க்கும் போது இனிமேல் இவர்கள் பச்சை மண்ணும் சுட்டமண்ணும் தான் என்பது தெளிவாகிறது.தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர்

விருப்பத்தைப்போல தமிழ் தேசியகூட்டமைப்பின் பலத்தையும் உடைக்க வேண்டும் என்பதற்காக நகர்த்தப்படும் காய்நகர்த்தல்களே ஆனந்தசங்கரியின் நடவடிக்கைகளாகும். வெளிப்படையாக சொல்வதாக இருந்தால் இந்தியாவும் ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி கூட்டணியும் ஆனந்தசங்கரியை நன்றாகவே பயன்படுத்துகிறார்கள். தமிழ் கட்சிகள் ஒரே அணியில் போட்டியிடுவதும் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவைப்பெற்று அவை அதிக ஆசனங்களைப் பெறுவதும் சந்திரிகாவின் கூட்டணியாலோ அல்லது இந்தியாவினாலோ ஜீரணிக்க முடியாத ஒன்றுதான். அதற்காவே

**தமிழர் விடுதலைக்கூட்டணி சின்னத்தின் கீழ் எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு போட்டியிட முடியாத தடைகளை ஏற்படுத்தியிருக்கும் ஆனந்தசங்கரி யாழ். மாவட்டத்தில் சுயேட்சையாக போட்டியிட இருக்கிறார்.**

கூட்டுச்சேர வேண்டும் என நாம் எந்த ஒரு கூட்டத்திலும் தீர்மானிக்கவில்லை என தெரிவித்திருக்கிறார். 2001ம் ஆண்டு தமிழ் தேசியக்கூட்டமைப்பில் சேரவேண்டும் என்ற தீர்மானத்திற்கு ஆனந்தசங்கரியும் ஆதரவளித்திருந்தார். அதற்கமைய அன்றிலிருந்து தமிழ் தேசியக்கூட்டமைப்பில் தமிழர்

செயலாளர் நாயகம் சம்பந்தன் உட்பட கட்சி உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராசா, ரவிராஜ், சந்திரநேரு உட்பட தமிழர் விடுதலைக்கூட்டணி பிரதிநிதிகள் எவரும் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற முடியாது. அவ்வாறு இடம்பெற்றால் நீதிமன்றத்தின் ஆணையை மீறிய குற்றத்திற்கு ஆளாகி அதற்குரிய பலாபலன்களை அனுபவிப்பீர்கள் என்றும் அச்சுறுத்தியிருக்கிறார். தமிழர் விடுதலைக்கூட்டணியின் கீழ் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்திருப்பவர்களின் விண்ணப்பங்கள் அனைத்தையும் தனக்கு அனுப்பிவைக்க வேண்டும்



என்றும் ஆனந்தசங்கரி செயலாளர் சம்பந்தனுக்கு உத்தரவிட்டிருக்கிறார். தமிழர் விடுதலைக்கூட்டணி சின்னத்தின் கீழ் எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு போட்டியிட முடியாத தடைகளை ஏற்படுத்தியிருக்கும். ஆனந்தசங்கரி யாழ். மாவட்டத்தில் சுயேட்சையாகப் போட்டியிட இருக்கிறார்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிட முடியாது என்பதை உணர்ந்த கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிகளிடையே எந்தக் கட்சியில் என்ன சின்னத்தில் போட்டியிடுவது என்ற சர்ச்சை உருவாகியிருக்கிறது. இக்கட்டுரை வெளியாகும் போது இந்த சர்ச்சைகளுக்குத் தீர்வு காணப்பட்டுவிடும். கடந்த 25வருடங்களுக்கு மேலாக தமிழர் தாயகப்பிரதேசத்தின் தேர்தல் களத்தில் ஆதிக்கம் செலுத்திவந்த உதயசூரியன் இம்முறை மறைந்துவிட்டது தமிழ் மக்களின் உள்ளங்களில் ஒரு நெருடல்தான். ஆனந்தசங்கரி தாக்கல் செய்த மனுமீது கொழும்பு நீதிமன்றம் வழங்கிய இடைக்கால தடை உத்தரவை நீக்குமாறு தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் சம்பந்தனும் ஜோசப்

# ஸ்ரீலங்கா நீதிமன்றத்தில் நீதியை எதிர்பார்த்திருக்கும் சம்பந்தன், ஜோசப் பரிதாபத்திற்குரியவர்கள்.

சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம் மட்டுமல்ல ஆனந்தசங்கரியும் தமிழர் விடுதலைக்கூட்டணி கட்சியிலோ அல்லது அக்கட்சியின் சின்னமான உதயசூரியன் சின்னத்திலோ தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

தமிழர் விடுதலைக்கூட்டணி செயற்பட முடியாத அளவிற்கு



அக்கட்சியை நீதிமன்றம் வரை கொண்டு சென்ற ஆனந்தசங்கரி அக்கட்சி உறுப்பினர்கள் எவரும் தலைவரின் அனுமதி இன்றி அரசியல் நடவடிக்கையில் ஈடுபட முடியாது என்ற நீதிமன்ற உத்தரவையும் பெற்றிருக்கிறார். தமிழர் விடுதலைக்கூட்டணி மட்டுமல்ல தமிழ் தேசியக்கூட்டமைப்பும் செயற்பட முடியாதபடி எந்தெந்த வழிகளில் தடைகளைப் போட முடியுமோ அத்தனையையும் ஆனந்தசங்கரி செய்து வருகிறார். அதில் அவர் வெற்றியும் பெற்றுவருகிறார். ஆனந்தசங்கரிக்கு இவ்வளவு தைரியம் எங்கிருந்து வந்தது? தனிமனிதனாக ஆனந்தசங்கரி செயற்படுகிறாரா? அல்லது பெரிய அரசியல் சக்தி ஒன்றின் பின்னணியிலிருந்து செயற்படுகிறாரா என்ற கேள்வி சாதாரண ஒரு மனிதனுக்கும் ஏற்படுவது இயல்புதான்.

பொதுத்தேர்தல் ஒன்று நடைபெற்றால் தமிழர் தேசியக்கூட்டமைப்பு அதிக ஆசனங்களைப்பெற்று ஆளும் கட்சியை தீர்மானிக்கும் சக்தியாக தமிழ் தேசியக்கூட்டமைப்பு வரலாம்.தமிழ்தேசியக் கூட்டமைப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படப் போகிறவர்கள் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் தான். அதன் மூலம் புலிகள் பலம் பெற்றுவிடுவார்கள் என இந்தியா அஞ்சியது. இதற்காகவே தேர்தலை தவிர்க்குமாறு கூட ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு இந்தியா அழுத்தம் கொடுத்தது. அந்த அழுத்தங்களுக்கு அப்பால் ஜே.வி.பியின் அழுத்தத்திற்கு தலைசாய்க்க வேண்டிய நிலையில் இருந்த ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் தமிழ்தேசியக் கூட்டமைப்பு பற்றி ஒரு அச்சம் இருந்து வந்தது. தேர்தலையும் நடத்த வேண்டும், இந்தியாவின்

தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் இருக்கும் கட்சிகளுக்கிடையே மோதல்களை உருவாக்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ் தேசியக்கூட்டமைப்பு 2001 டிசம்பர் 5ம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலுக்கு முன்பே ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. கடந்த தேர்தலில் ஆனந்தசங்கரியும் தமிழ்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுடன் சேர்ந்துதான் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றார். அப்போது போடாத நிபந்தனைகளை இப்போது விதிப்பதேன்? தமிழர் விடுதலைக்கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம் சுரே' பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி ஆகியன இணைந்து கூட்டமைப்பை உருவாக்கி ஒரே அணியாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் கீழ் உதயசூரியன் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடுவது என்ற முடிவை 2001 டிசம்பருக்கு முதலே தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய செயற்குழு ஏகமனதாக எடுத்திருந்தது. அந்தக் கூட்டத்திற்கு அப்போது சிரே'ட உபதலைவராக இருந்த

விடுதலைக்கூட்டணி ஓர் அங்கமாக செயற்பட்டு வருகிறது. தமிழ் தேசியக்கூட்டமைப்பிலிருந்து விலகவேண்டும் என தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய செயற்குழு தீர்மானிக்காத வரைக்கும் 2001ல் எடுத்த தீர்மானம் செல்லுபடியானதாகும்.

அந்த வகையில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் சம்பந்தனும் ஏனைய உறுப்பினர்களும் தமிழ் தேசியக்கூட்டமைப்பில் இணைந்து செயற்படுவதைத் தலைவரோ அல்லது வேறு எவரோ கட்டுப்படுத்த முடியாது. ஆனால் இப்போது திடீரென புதிய புதிய நிபந்தனைகளை ஏன் ஆனந்தசங்கரி விதிக்கிறார் என்பதே தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வி. தமிழ் மக்கள் அனைவரும் ஓரணில் பலம் பொருந்திய சக்தியாக வருவதை விரும்பாதவர்களின் கைபொம்மையாக ஆனந்தசங்கரி ஆடுகிறார் என்பது இப்போது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அரசியல் கட்சியைப் பொறுத்தவரை மத்திய செயற்குழு பொதுச்சபை ஆகியவற்றிற்கே




ஆனந்தசங்கரியே தலைமை தாங்கினார் என்பதும், அந்தத் தீர்மானத்திற்கு அமைய கடந்த பொதுத்தேர்தலில் யாழ். மாவட்டத்தில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியிலில் போட்டியிட்டு ஆனந்தசங்கரி வெற்றி பெற்றார் என்பதும் ஆனந்தசங்கரி மறந்துவிடக்கூடிய காரியங்கள் அல்ல.

ஆனால் ஆனந்தசங்கரி கடந்த வாரம் செயலாளர் ஆர்.சம்பந்தனுக்கு எழுதிய கடிதத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் சின்னத்தில் போட்டியிடும் அனைவரும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை விதித்திருக்கிறார். நடைபெறப்போகும் பொதுத்தேர்தலில் வேறு கட்சிகளுடன்

தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் உள்ளது. ஆனால் ஆனந்தசங்கரி செயலாளர் சம்பந்தனுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்கும் போது சகல அதிகாரமும் தனக்கே இருப்பதாகக் கூறியிருக்கிறார். வேறு கட்சிகளினால் கூட்டப்படும் கூட்டங்களில் கலந்து கொள்வதாக இருந்தால் முன் கூட்டியே எனது எழுத்துமூல அனுமதியைப் பெற்ற பின்பே கலந்து கொள்ள முடியும் என்றும் வேறு அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து கூட்டங் களைக் கூட்டுவதற்கு தங்களுக்கு அதிகாரம் இல்லை என்றும் ஆனந்தசங்கரி தெரிவித்திருக்கிறார்.

ஆனந்தசங்கரியின் கூற்றுப்படி தமிழர் விடுதலைக்கூட்டணியின்

**(இரா.துரைரத்தினம்)**

பரராஜசிங்கமும் மேன்முறையீட்டு மன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளனர். வேட்புமனுத் தாக்கல் செய்யும் இறுதி தினமான பெப்ரவரி 24ம் திகதிக்கு முன் மேன்முறையீட்டு மனு மீதான தீர்ப்பு கிடைக்கப்போவதில்லை. ஸ்ரீலங்கா நீதிமன்றத்தில் நீதியை எதிர்பார்த்திருக்கும் சம்பந்தன் ஜோசப் போன்றவர்கள் பரிதாபத்திற்குரியவர்கள்தான்.

**பயங்கரவாதத் தடைச்சட்டம் அடுத்த வாரம் தொடரும்.**

# புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு ஆயுள் இரண்டு பூர்த்தி!

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டு இரு வருடங்கள் நிறைவாகின்ற சூழ்நிலையிலும் சிறிலங்கா அரச தந்திரோபாயங்கள், பேரினவா த கூச்சல் என்பவற்றால் அவ்வுடன்படிக்கை தமிழ் மக்களுக்கு நிறைவான பலன் எதனை யும் வழங்காது ஏமாற்றத்தையே உண்டு பண்ணியுள்ளது. இவ்வாறான உடன்படிக்கையை கைச்சாத்திட்ட காலம் தொடக்கம் எதிர்த்து வந்த ஜனாதிபதி தந்தபோது தங்கமுலாம் பூச எத்தனிக்கிறாரா என்று எண்ணத்தோன்றுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களும் சிறிலங்காவின் பிரதமமந்திரி ரணில் விக்கிரசிங்கா அவர்களும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புரிந்துணர்வுடன்படிக்கையை கடந்த 22-02-2001 ஆம் திகதி கைச்சாத்திட்டனர். கைச்சாத்திட்ட நாள் தொடக்கம் இற்றை வரைக்கும் அது முழுமையான ஆரோக்கியமான அனு கூலங்களை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தவில்லை.

புரிந்துணர்வுடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் விடுதலைப்புலிகள் இவ் ஒப்பந்தத்தை முறையாகக் கடைப்பிடிக்க மாட்டார்கள். வேண்டுமென்றே மீறி விடுவார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் தென்னிலங்கை பேரினவாத சக்திகளால் எழுப்பப்பட்டது. சர்வதேச சமூகத்திடமும் ஆரம்பத்தில் சந்தேகப் போக்கு காணப்பட்டது.

எனினும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை மக்கள் போராட்டமாக வியூகமமைத்த தேசியத்தலைவர் அவரது மதி யூகத்தால் புரிந்துணர்வுடன் படிக்கையை செம்மையாகக் கடைப்பிடிப்பதில் கண்ணியமாக, கட்டுக்கோப்புடன் செயற்பட்டார்.

## பேரினவாதக் கறையான்கள் அரிக்குமா?

இதன் வெற்றிக்கரத் தை உணர்ந்த சர்வதேச சமுகப்பிரதி நிதிகள் விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை அங்கீகரித்ததுடன் வன்னி வரை வந்து தமிழ் மக்களின் பிரச்சினைகள்ள அலசி ஆராய்ந்து மெய்யுணர்ந்து கொண்டனர். ஆனால் சிறிலங்கா அரசு நிறைவான உடன்படிக்கையாக அமுல்



படுத்தாது இழுத்தடிப்புக்களை மேற்கொண்டது.

**உடன் படிக்கையின் விதி 2.2.ன் பிரகாரம்:-** உடன்படிக்கை அமுல்படுத்தப்பட்டு 30 நாட்களுக்குள் வணக்கத்தலங்களில் உள்ள ஆயுதப்படைகள் அவ்வழிபாட்டுத் தலங்களைவிட்டு வெளியேற வேண்டும்.

**விதி 2.3.ன் பிரகாரம் :-** சமாதான உடன்படிக்கைகை சாத்திடப்பட்ட நாள் முதல் பாடசாலை கட்டிடங்களிலிருந்து படையினர் வெளியேற வேண்டும். இது 160 நாட்களுக்குள் நடைமுறை செய்தல் வேண்டும்.

**விதி 2-4ன் பிரகாரம்:-** சகல பொதுக்கட்டிங்களிலிருந்தும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அவை திருப்பி உரியவர்களிடம் கொடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள உடன் படிக்கை முழுமையாக அரசாங்கத்தால் அமுல் படுத்தப்படவில்லை. இராணுவ அழுத்தங்கள், நெருக்கு வாரங்கள் என்பன தொடர்கதையாக அமைந்தனவே தவிர ஆக்கபூர்வமான காரியம் எதுவும் நிகழவில்லை. உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களின் குடிமனைகள் சிங்களப் படையினரின் ஆக்கிரமிப்புக்குள் சிக்கிய ஒரு அவலம் தொடர்ந்து காணப்படுகின்றது.

விடுதலைப்புலிகளுக்கும் அரச பிரதிநிதிகளுக்குமிடையில் சர்வதேச அரங்கில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களில் இவ்விடயம் தொடர்பாக விடுதலைப்புலிகளால் எடுக்கப்பட்ட போதும் ஆக்கபூர்வமான அனுகூலங்களை சிறிலங்கா அரசு வெளிப்படுத்தவில்லை.

மாறாக தமிழ் மக்களின் அன்றாட வாழ்நாள் பிரச்சினையை அறியாத இந்திய இராணுவத்துறையைச் சேர்ந்த நம்பியார் உயர் பாதுகாப்பு வலயத்தின் பிரச்சினைக்குத் தீர்வுகாண மேற்கொண்ட விஜயம் அவரது அறிக்கை என்பன சிறிலங்கா அரசு மீதான சமாதான நம்பிக்கையைப் பலவீனப்படுத்தியது.

படையினர் கட்டுப்பாட்டுப் பகுதியில் நிராயுதபாணிகளாக அரசியற்பணிகளில் ஈடுபட்ட விடுதலைப் போராளிகள் அரச படையினரால் பல்வேறு துன்புறுத்தல், கொலை அச்சுறுத்தல் போன்ற சம்பவங்களும் இடம் பெற்றன.

யாழ் நெடுந்தீவில் சமாதானச் சூழலைப் பேணுவதற்காக மூன்று விடுதலைப் புலிகள் தமது உயிரை ஈகை செய்தனர். பெண் போராளிகள் இடுப்புப்பட்டி அணிந்து சென்ற காரணத்தினால் சிறிலங்காப் படையினரால் இம்சிக்கப்பட்டனர். இதன் உச்சகட்டமாக கடந்த 14-02-2003 அன்று சர்வதேச கடற் பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளின் வணிகக் கப்பல் தாக்கி அழிக்கப்பட்டது.

இதன் போது லெப். கேணல் செந்தமிழ், லெப்.கேணல் அன்புகுமரன், லெப்.கேணல் கஜேந்திரன், லெப்.கேணல் கதிர், மேஜர்நிர்மலன், மேஜர் நிமால், மேஜர் வீரநாதன், மேஜர் கன்னியநாடான், மேஜர் மணியரசன், மேஜர் வள்ளுவன், கப்டன் செழியன் ஆகிய, போராளிகளும் நாட்டுப் பற்றாளர் மோகனும் வீரகாவியமானார்கள்.

சிறிலங்கா அரசின் மிகப்பெரிய போர் நிறுத்த மீறலான இச்சம்பவம் தமிழழ விடுதலைப்புலிகள் தரப்பில் மிகப்பெரிய ஆத்திரமூட்டக்கூடிய துயரச் சம்பவமாக நிகழ்ந்த போதும் தேசியத்தலைவர் அவர்கள் சமாதானத்தின் மீதான நம்பிக்கையை காலம் தேவை உணர்ந்து செம்மையாகக் கடைப்பிடித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

மொத்தத்தில் புரிந்துணர்வுடன் படிக்கை என்ற போலி வேடம் தரித்துக் கொண்டு சர்வதேச வலைப்பின்னலை உருவாக்கி அதில் விடுதலைப்புலிகளை ராஜதந்திர ரீதியாக சிக்க வைப்பதில் பிரதமர் அக்கறை காட்டினார் என்பது வெளிப்படை. அத்துடன் அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், சீனா போன்ற வல்லரசு நாடுகளின் உதவியுடன் சிறிலங்கா படைத்துறையை வலிமைப்படுத்



தும் நகர்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ் மக்களின் இயல்பு வாழ்வை ஏற்படுத்துவதில் பூச்சியமாக செயற்பட்ட சிறிலங்கா அரசு ஜனாதிபதியிடமிருந்த நிறைவேற்று அதிகாரமே புரிந்துணர்வுடன்படிக்கையை அமுல் படுத்துவதற்கான தடைக்கற்கள் என்ற சாட்டுப் போக்கை வெளியுலகிற்கு காட்டியது. இவை ஒரு புறமிருக்க புரிந்துணர்வு உடன்படிக்கை கைச் சாத்திடப்பட்ட நாள் முதல் அதனை ஜனாதிபதியும் இதர பேரினவாத சக்திகளும் முழுமையாக எதிர்த்து வந்தனர்.

விடுதலைப்புலிகளுக்கு வடக்குக் கிழக்கைப் பிரித்துக் கொடுக்கும் ஒரு சூழ்ச்சி உடன்படிக்கை எனவும் ஜனாதிபதியால் குற்றச் சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டதுடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசையும் அனுசரணை வழங்கிய நோர்வே, கண்காணிப்புக்குழுத் தலைவர் மீதான அதிருப்தியீனங்களும் வெளிப்பட்டன. இறுதியில் கண்காணிப்புக் குழுத்தலைவரை அழைத்துக் கொள்ளுமாறு நோர்வே அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார் ஜனாதிபதி.

ஆனால் தற்போது பேரினவாதக் கட்சியான ஜே.வி.பியுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி செய்து கொண்ட கூட்டு உடன்படிக்கை, ஐக்கிய தேசிய முன்னனி அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி தன்வயப்படுத்தியமை, நாடாளுமன்றக் கலைப்பு போன்ற ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கைகள் புரிந்துணர்வுடன்படிக்கை செத்து விடும் என நம்பிக்கையீனமடைந்துள்ள நிலையில் புரிந்துணர்வுடன்படிக்கையைத் தொடர்ந்து பேணப்போவதாக ஜனாதிபதி அறிவித்திருப்பது ஆறுதலளிக்கிறது. தேர்தல் காலத்தில் தங்கமுலாம் பூசும் நடவடிக்கையாக இது அமையலாம் என எண்ணத் தோன்றுகிறது. விடுதலைப்புலிகள் சமாதானத்தில் பற்றுறுதியுடன் செயற்படுவதால் விடுதலைப்பு லிகள் தரப்பால் உடன்படிக்கை மீறப்படும் அல்லது முறிந்து விடும் என்ற ஐயத்திற்கு இடமில்லை.

பதினான்காவது நாடாளுமன்றத் தேர்தல் அறுவடைகள் ஆளும் கட்சிக்கு சாதகமாக அமையுமானால் புரிந்துணர்வுடன்படிக்கை தொடர்ந்து அமுல் படுத்தலில் சிரமங்கள் இருக்காது.

**வேணிதன்**

மாறாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி கூட்டு முன்னணி ஆட்சியமைக்கும் பட்சத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் கையொப்பம் செல்லுபடி அற்றதாகவே கருத இடமுண்டு. இந்நிலையில் சர்வதேச சமுகத்தின் அழுத்தங்கள் அக்கறை மீண்டும் ஆளும் தரப்பு மீது ஏற்படும் பட்சத்தில் புரிந்துணர்வுடன்படிக்கை தொடரக்கூடிய வாய்ப்புள்ளது. எனினும் கடந்தகால இழுத்தடிப்புக்கள் தமிழ் மக்களின் இயல்பு நிலை தடைகள் என்பவற்றை ஏற்படுத்தாது இயல்பு நிலையைத் தோற்றுவித்து விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு ஆட்சிக்கு வரும் தரப்பிற்கு உரியது. அப்போதுதான் உடன்படிக்கை உயிர் வாழ இடமுண்டு. இப்போது ஈராண்டு நிறைவாகும் இக்கட்டத்தில் மரண வாசலில் நிற்பதாகவே அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

எதிர் காலத்தில் ஜே.வி.பி போன்ற பேரினவாதக் கறையான்களால் புரிந்துணர்வுடன்படிக்கை செல்லரித்துப் போகக்கூடாது என்பதே தமிழ் மக்களின் அவாவாகும்.

---

## சொன்னாலும் குற்றம்



தேனகத்தில் காந்தமணி கிலுக்கி குந்தகம் செய்த கோயில் குருக்கள் ஒருவரை நம்மட பொடியனுகள் கையும் மெய்யுமாகப் பிடித்து வைத்து பாடம் புகட்டி எச்சரித்துள்ளனர். ஏன் தெரியுமா?

ஊருக்குள் ஒற்றுமையைச் சீர்குலைத்து சின்னச் சின்ன ஆசைகளில் ஈடுபட்டமையினால்தான் அந்த ஐயாவுக்கு அப்படியொரு தண்டனையாம்.

உன்னைத் திருத்து உலகம் திருந்தும் என்பதை மறந்து உபதேசம் ஊருக்கு எண்டு ஒலிபெருக்கிகளில் ஊர், ஊராய் பகல்வேடம் காட்டிய இந்தப் பெரிய மனிசன் இப்படிச் செய்வாரா என்று சனங்கள் கதைக்குதுகள்.

மாவட்டத்தை விட்டு மலையகத்தில் ஜால வித்தைகளைக் காட்டப் போவதாக அவரின் சீசர்களிடம் இப்போது சொல்லுகிறார்.

இரும்பில் மட்டுமே காந்தம் ஒட்டும். ஆனால் ஐயாவைக் கண்டால் பலர் ஒட்டி ஒதுங்குவதற்கும் காரணம் இல்லாமல் இல்லையென மக்கள் கதைக்கிறார்கள்.

# விடுதலை உணர்வு ஆசான்களின்

இன்றைய எமது தமிழீழ தேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழ் மக்களுக்கும் மற்றும் நாளுக்கு நாள் இப் புனித பூமியிலே உருவாகிக் கொண்டிருக்கின்ற தமிழ் மக்களுக்கும் தமிழீழ விடுதலை உணர்வானது மேலும் வலுப் பெற வேண்டும். இன்றைய நிலையிலே எம் தமிழீழத் தேசியத் தலைவரின் சிறப்பான வழிகாட்டலில் நடாத்தப்பட்டுக் கொண்டு வருகின்ற எமது போராட்டம் ஏன் ஏற்பட்டது எதற்காக ஏற்பட்டது என்கின்ற ஒரு அறிவும் அது பற்றிய எண்ணக்கருவும் இல்லாமல் எம் தேசத்திலே எத்தனையோ இளைஞர்கள் யுவதிகள் ஏன் பெரியவர்கள் கூட தம் வாழ் நாளினை கழித்துக் கொண்டு வருகின்றார்கள் இது யாருடைய குற்றம்? இவை எம் சமூகத்திலும் சூழலிலும் நம் பெற்றோர்களிலும் நம்மைக் கல்வியறிவு புகட்டிய ஆசான்னளிலும் உள்ள குற்றமே ஆகும்.



எம் தேசத்திலே விடுதலை என்னும் தொனிப் பொருள் ஏற்படக் காரணம் எம் இனத்தின்உரிமைகள் மறுக்கப்பட்டு உடமைகள் சிதைக்கப்பட்டு உறவுகள் துண்டாடப்பட்ட வேளையில் தான் எமக்கு விடுதலை எனும் அரும் பதத்திற்கு அர்த்தம் விளங்கி சீறி எழுந்தபுலிகளாய் அன்னிய துரோகிகளையும் சுட்டெரிக்க வீர சபதம் எடுத்தனர் எம் தமிழ் அன்னையின் குழந்தைள். ஆனால் இப்போராட்டம் தமிழ் உணர்வு வீர சுதந்திரம் போன்ற உன்னத உணர்வு இவற்றோடு நின்று விடக் கூடாது எம்தேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அனைவருக்கும் ஏற்பட்டு சுதந்திர சுவாசக் காற்றினையும் இழந்த எம் இன உறவுக ளின் கனவுகளினையும் நனவாக்க முன்வர வேண்டும் ஆனால் இவை நனவாக எம் தமிழீழ ஆசிரிய குழாத்தினரும் முன்வர வேண்டும்.

எனெனில் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் இவர்கள் ஒரு சமூகத்திற்கு தேவையான ஒழுக்கமுள்ள பிரஜைகளினை உருவாக்கி சமூகத்தின் கரங்களில் ஒப்படைப்பவர்கள் எனவே தான் முதலில் ஆசிரியரின் உள்ளார்ந்த மனங்களில் விடுதலை உணர்வும் சுதந்திர தாகமும் ஏற்பட வேண்டும். இதைத்தான் எமது தமிழீழ விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுத் துறை துணைப் பொறுப்பாளர் இளங்கோ கடந்த மாதம் நாவற்குடா இந்து கலாசார மண்டபத்தில்



நடைபெற்ற நிகழ்வொன்றில் கூறுகையில் எம்தமிழீழமண்ணில் உள்ள 15சத வீத மாக ஆசிரியர்கள் விடுதலை உணர்வுட னும் இருந்திருப்பாராயின் இன்று நாம் விடுதலை பெற்றிருப்போம். எம்தமிழ்இனம் தலை நிமிர்ந்துவாழ்ந்திருக்கும் என்று கூறுகின்ற தன்மையினைக் காணலாம்.

இன்னும் சிறிலங்கா தேசத்தில் உள்ள சிங்களப் பாடசாலைகளினை எடுத்துக் கொண்டால் அங்கு பாடசாலைக்கல்வியின் ஊடு சிங்கள பேரினவாதக் கருத்துக்களும் மதச் சார்பான வலுப் பெற்ற கருத்துக்களினையும் இப்பாடசாலைக் கல்வி சூடு ஊட்டுவதினைக் காணலாம். இதனால் அப்பாடசாலையினை விட்டு விலகும் மாணவர் தமது தேச இறமையினை காற்பாற்ற வேண்டும். எனினும் இன துவேச கருத்துடன் இராணுவத்தில் இணைந்து தமிழர்களினை விரோதியாக கொண்டு போராட துணிகின்றனர். இது இன்னும் தொடர்கின்றது நாளையும் தொடரும். ஆனால் எம் தமிழீழ ஆசிரியர்கள் அவ்வாறு இல்லை இன்று பாடசாலைகளிலும் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களிலும் ஆண்டு தோறும் ஏற்படுத்தப்படும் சுற்றுலாவில் இவ் ஆசிரியர்கள் எதை கொண்டு காட்டு கின்றார்கள் என்று பார்த்தால் அன்றைய சிங்கள மன்னர்கள் ஆக்கிரமித்து சிதைந்து போன பாழடைந்த கட்டிடங்களையும் அவர்களின் பாவனையில் இருந்து ஒரம்கட்டப்பட்ட எச்சங்களினையும் காட்டி ஓ என்று சந்தோசம் கொள்கின்றார்கள் இது இக்காலத்தின் தேவைதானா.

ஏன் எமது வடகிழக்கில் தேச விடுதலைக்காக களமாடி வீரச்சாவினை தழுவி மாவீரர் துயிலும் இல்லங்களில் நெடும் மீளா துயிலில் தூங்கிக் கொண்டிருக்கின்ற மாவீரர் சின்னா பின்னமான எம் இன உறவுகள் வாழ்ந்த இடங்களினையும் எம் இன மக்கள் புதை குழிகளாய் மண்ணோடு மண்ணாய் போன இடங்களினையும் ஏன் அப் பாடசாலை மாணவர்களிற்கு காட்டமுன்வருவதில்லை.

கடந்த கால வரலாற்றை ஆராய்வ தென்பது எதிர் காலத்திற்கு ஒளியூட்டவே.

## இ. வரதராஜன்

# மனதிலும் உதயமாக வேண்டும்

எனும் கருத்து செயலுருப்பெற ஆசிரியர்கள் ஒத்துழைக்க கூடாது என்பதற்காகவா?

எம் வட தமிழீழத்திலும் தென் தமிழீழத்திலும் எம் தேச விடுதலைக்காய் மண்ணோடு வித்தாகிப் போன மாவீரர் துயிலும் இல்லங்கள் இன்று எத்தனையோ அலங்கரிக்கப்பட்டு காட்சியளிக்கின்றன. இன்று உலக நாடுகளிலே தமது நாட்டுக்காய் உயிர் நீத்த மாவீரர்களிற்கு கொடுபடாத மதிப்பும் மரியாதையும் எம் தமிழீழ விடுதலைப் புலிகள் வழங்குகின்றார்கள்.

''மாவீரர் துயிலுகின்ற இல்லமே நாம் வணங்கத் தக்க தேவாலயம்''

எனும் தலைவனின் கூற்று இதற்கு சான்று பகர்கின்றது. அதுமட்டுமா இன்று எமது தமிழர்களின் வரலாற்றுப் பெருமை சேர்க்கும் பல இடங்களை அன்னியன் ஆக்கிரமித்துள்ளான் என்பதனை சுற்றுலா மூலம் காட்டு கின்றார்களா அதுவும் இல்லை.

இன்னும் இலங்கை அரசாங்கத்தினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட சமூகக் கல்விப் புத்தகத்தில் பிழையான சம்பவங்களினை மாணவர்களிற்கு சுட்டிக் காட்டி நமது தமிழருடைய பூர்வீகத்தினையும் பெருமையினையும் காட்ட முற்படுகின்றார்களா அதுவும் இல்லை. இன்று எத்தனையோ ஆசிரியர்கள் வெலி ஓயா என்றும், தெதுறு ஓயா என்றும் பாடம் கற்பித்துக்கொண்டும் இன்றும் இருக்கின்றார்கள் அதனுடைய தமிழ் அறிய முற்படுகின்றார்களா இல்லை.

ஏன் தமிழீழக் கல்வி மேம்பாட்டுக் கழகத்தினால் வன்னியில் அச்சிடப்பட்ட சமூகக்கல்வி 6ம் ஆண்டு 7ம் ஆண்டு 8ம்,9ம்,10ம், ஆண்டு புத்தகங்களினை கற்க முற்படுகின்றார்களா அதுவும் இல்லை? அத்தோடு எமதுபோராட்டத்தில் மண்ணோடு வித்தாகிப் போன ஒரு மாவீரனுக்கு இன்று சில நகரப் பாடசாலைகளிலும் கல்விக் கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி, ஆசிரிய பயிற்சி கல்லூரி, தேசிய பாடசாலைகளில்

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

# இலங்கைத் தமிழ் சிறுகதையின் வளர்ச்சிப் போக்கு

## த.சசிவதனி
## மட்/கிரான் மகா வித்தியாலயம்

கடந்த வாரத் தொடர்ச்சி...............

மறுமலர்ச்சிச் சங்கம் 1943 ஆம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்டது. இது தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களுக்கு மறுமலர்ச்சி என்னும் பத்திரிகையை வெளியிட்டு செந்தமிழில் பல சிறுகதைகள் வெளிவரக்களம் அமைத்துக் கொடுத்தது. இவ்வாறு காணப்பட்ட மறு மலர்ச்சி சங்கம், மறுமலர்ச்சிப் பத்திரிகை என்பன இலங்கைத் தமிழ் சிறுகதை. எழுத்தாளர்களை புதியதோர் அருவியில் கலந்து சொல்நெறியில் வீறு நடை போட வைத்தது. இக் காலத்தில் பத்திரிகைகள் என்ற வகையில் வீரகேசரி , தினகரன், சஞ்சீவி, மல்லிகை என்ற பத்திரிகைகள் வாயிலாக அடித்தள மக்களையும் கவர்ந்திழுக்கும் வகையில் தேன் தமிழில் சிறுகதைகளை பிரசுரம் செய்தன. ஈழத்து சிறுகதை வளர்ச்சியில் பத்திரிகைகள் ஆற்றிய பங்கு விதந்து போற்றத்தக்கது. இலங்கையை யே களமாகக் கொள்ள வேண்டும். என்றும் மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளே பிரதிபலிப்புக்களாய் அமைய வேண்டும் என்றும் சீர்திருத்தத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் பயன்படவேண்டும் என்ற கருத்துக்களும் இக்காலப்பகுதியில் இலங்கைத் தமிழ் சிறுகதைகளில் முனைப்புப் பெறத் தொடங்கலாயின .இக்காலத்தில் அ.செ. முருகானந்தம், வரதர் கனக செந்திநாதன், அ.ந. கந்தசாமி, சொக்கன் பேன்ற பலர் கதைகளையும் எழுதி மறுமலர்ச்சிக் குழுவிலும் அங்கம் வகித்தனர். உதாரணமாக அ.செ. முருகானந்தம் வண்டிச் சவாரி மனித மாடு, எச்சில் இலை வாழ்க்கை, காளி முத்துவின் பிரஜாவுரிமை, மண்வாசனை போன்ற சிறுகதைகளையும் அ.ந. கந்தசாமி இரத்த உறவு, நாயிலுங் கடையர். ஐந்தாவது சந்திப்பு என்ற கதைகளையையும் எழுதினார். இலங்கைத் தமிழ்ச் சிறுகதை முன்னோடிகளுக்கு அடுத்த பரம்பரையினரான மறுமலர்ச்சி எழுத்தாளர்களின் சிறுகதைகளில் இலங்கை பற்றிய தேசிய உணர்வு பிரக்ஞை பூர்வமாக முகிழ்க்கத் தொடங்குவதைக் காணமுடிகின்றது.

இலங்கையில் சுதந்திரத்தை அடுத்து வந்த காலப்பகுதி பல்வேறு அரசியல் சமூகப் பிரச்சினைகளு க்குக் களம் அமைத்துக் கொடுத்தது. இன ரீதியான பிரச்சினைகளும் சமூக ரீதியான முரண்பாடுகளும் விசுவரூபம் எடுத்து போராட்ட உணர்வுகள் மேலோங்கத் தொடங்கின. இந்நிலையில் எழுத்தாளர் மத்தியில் அரசியல் சமூக ரீதியான விழிப்புணர்வு தளிர் விட சமூகத்தின் அடிமட்டத்தில் இருந்து எழுத்தாளர் தோன்றி சிறுகதைத் துறைக்கு பங்காற்றினர். 1950 களில் தோன்றிய சிறுகதைகளில் மாக்ஷிச உணர்வு, முற்போக்கு என்பன முக்கியம் பெற்றது. இதனால் சாதி எதிர்ப்பு, அரசியல் கொடுமைகள் என்பவற்றைக் கருவாகக் கொண்டு செ.கணேசலிங்கன் எழுதிய ஒரே இனம் என்ற சிறுகதை யும் டொமினிக் ஜீவா எழுதிய பாதுகை என்ற கதையை யும் வெளிவந்தன். இவர்களுடன் கே.டானியல், என்.கே.ரகுநாதன் நீர்வை பொன்னையன் போன்றோரும் தமக்கென ஒரு கோட்பாட்டை வரிந்து கொண்டு சமூதாய மாற்றம் பற்றி உணர்வை நிலை நிறுத்தி எழுதினர். இன்னும் சிலர் எத்தகைய கோட்பாடுகளையும் வரித்துக் கொள்ளாமல் இலக்கிய வாதிக்குரிய மனிதாபிமான உணர்வின் அடிப்படையில் சமுதாயத்தின் பல்வேறு கோலங்களையும் பிரச்சினைகளையும் இலக்கிய உணர்வுடன் புலப்படுத்த முனைந்தவர்களில்.வ.அ. இராசரெத் தினம், எஸ் பொன்னுத்துரை, நந்தி, பெ.முத்துலிங்கம், மு.தளையசிங்கம், கே.வி. நடராசன், பித்தன், அ.ஸ.அப்துல் ஸமது முதலியோர் முக்கியமானவர்கள். ஐம்பதுகளில் சிறுகைத் துறையில் ஏற்பட்ட இத்தகைய புதிய போக்கு அரசியல் விளிப்புணர்வும், சமூதாயச்சார்பும், கொண்டதாக வளர்ச்சி யுற்ற. முற்போக்குச் சிந்தனைகளின் அடிப்ப டையில் தேசியம், மண்வாசனை என்ப வை முன்னரை விட மேலும் வலுப்பெறத் தொடங்கின. இலக்கிய ம் சுவைப்பதற்குரிய ஒன்று மாத்திரமன்றி அது சமுதாயத்தின் ஒரு பயன்பாட்டுக் கருவியுமாகும். என்ற உணர்வும் ஐம்பதுக ளிலிருந்து மிளிரத் தொடங்கியது.

1960களில் எழுச்சியின் வளர்ச்சியை நிதர்சனமாகக் காண முடிகின்றது. அறுப துகளிற் காணத்தக்க தாக விளங்கிய சிறப்ப ம்சம் இலங்கைப் பல்க லைக்கழகங்களின் பங் களிப்பாகும். தாய் மொழி மூலம் பல்கலைக்க ழகக் கல்வியைப் பெற த் தொடங்கிய புதிய பர ம்பரையினர் கல்வியைப் பெற்றுக் கொண் டிருந்த காலத்திலே சிறுகதைத் துறையில் பங்கேற்க தொடங்கினர். எடுத்துக் காட்டாக செ.கதிர்காமநாதன், செ.யோகநாதன், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், யோ.பெனடிக் பாலன், பவானி ஆழ்வாப்பிள்ளை,குந்தவை முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். பல்கலைக்கழகத்துக்கு வெளியிற் சண்முகம், சிவலிங்கம், மருதூர்க்கொத்தன், தி.ஞான சேகரன், புலோலியூர் க. சதாசிவம் ,ஜோர்ஜ் சந்திரசேகரன் முதலியோர் சிறுகதைத் துறையில் ஈடுபட்டு வந்தனர்.

1970~1980 வரையான காலத்தில் ஈழத்து சிறுகதை உலகில் புதியதொரு பரம்பரை பிரவேசித்தது.அவர்கள் மண்வாசனை கொண்ட சிறுகதைகளை எழுதினர். எடுத்துக் காட்டாக தெணியான், முருகபூபதி, மண்டூர் அசோகா,உமா வரதராஜன், போன்றோரின் சிறுகதைகளைக் குறிப்பிடலாம். அடுத்து மலையக மக்களின் பிரச்சினைகளைக் கருவாகக் கொண்டும் சிறுகதைகள் எழுதப்பட்டன. இதற்கு உதாரணமாக மாத்தளைசோமு, சாரல் நாடன் போன்றோரது கதைகளைக் குறிப்பிடலாம். இத்துடன் கலையழகுடனும் சிறுகதைகள் எழுதப்படுகின்றன. எடுத்துக்காட்டாக நந்தினி சேவியரின் சிறுகதைகளும் எஸ். எல். எம். கனிபா எழுதியமக்கத்துச் சால்வை என்ற சிறுகதைகள் தோற்றம் பெற்றன.

1980ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கையில் ஏற்படத் தொடங்கிய பல்வேறு நெருக் கடிகளினால் சமுதாயத்திற் காணப்படும் பல்வேறு நிலை ப்பாடுகளும் சிறுகதையில் இடம் பிடிக்கத் தொடங் கியுள்ளன. இதற்கு முன்னைய காலகட்டத்தை விடவும் சிறுகதையின் பொருட்பரப்பு விரிந்தது. இதனால் சிறுகதையாசிரியர்கள் தம்மைச் சுற்றி நிகழும் அவலங்க ளையும், சிறுமை, தியாகங்களையும், வாழ்வின் கோலங்களையும் மானுடத்தின் உயிர்ப்புகளையும் தம் சிறுகதைகளில் வெளிக்கொணர்ந்துள்ளனர் .பொருளாதார ரீதியாக புலப் பெயர்ச்சி அவலங்களிலிருந்து தப்புவதற் காக வெளிநாடுகளை நோக்கிய வெளியேற்றம், அடக்கு முறைகளுக்கு ஆளாகும் நிலைமைகள் போராட்ட உணர் வுகள், வாழ்க்கை பற்றிய விழுமியங்களின் தடுமாற்ற நிலை, பெண்ணிலைவாதம் முதலான அம்சங்கள் இக்கால ச் சிறுகதையில் மையப்பொருளாக புரையோடி உள்ளது.

1990ஆம் ஆண்டு அதாவது தற்போதைய சமகாலத்தில் இலங்கையில் நடந்த இனப்படு கொலைகள் மற்றும் இனரீதியான முரண்பாடுகள், மற்றும் சிறுபான்மையினர் பெரும்பான்மையினரால் அடக்கியாள ப்படல் மற்றும் கற்பழிப்புச் சம்பவங்களும் அனாதை களாக்கப்பட்ட சிறுவர்களின் துஷ்பிரயோகங்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்தை மையமாக வைத்து நடந்த செம்மணி படுகொலைகள் என்பவற்றை மையமாகக் கொண்டு அதன் விளைவுகளையும் கருவாகக் கொண்டு ரஞ்சகுமார் எழுதிய காலம் உனக்கு ஒரு பாட்டு எழுதும் என்ற சிறுகதையும் கோளறு பதிகம், கவறகோயா முதலிய சிறுகதைகளையும் கூறலாம்.

மற்றும் இக்கால சமுதாயத்தில்நிலவிய பெண்ணுரிமை, பெண்ணடிமை என்பவற்றை வலியுறுத்தும் பெண்ணிலைவாத சிறுகதைகள் தோற்றம் பெற்றன.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)




கந்தர்:- என்ன மச்சான் ஜே.வி.பி யும், பொதுஜன ஐக்கிய முன்னணியும், சேர்ந்த கூட்டு முன்னணி சரியான சின்னம் எது எண்டு தெரியாம கொஞ்ச நாள் திண்டாடுணாங்க.

கலந்தர்:- தாமரப்பூவில தொடங்கி வண்ணத்துப் பூச்சியாக அலைந்து வெற்றிலயில நிக்கிறாங்க...

கந்தர்:- வெத்தில மடிச்சு குடுத்த பொம்புள நாட்டில மக்கள் நம்பல்ல எண்டு பாடப்போறாங்க...

கலந்தர்:- வெத்திலயா, யானையா எண்டத மக்கள் தீர்மானிப்பாங்க தானே.....

கந்தர்:- வெத்தில ஆட்சி அமைச்சா நாங்க பாக்கு வெட்டிய கையில எடுக்கத்தான் வேணும்....

கலந்தர்:- அப்ப எங்கட ஆக்கள் சுண்ணாம்பாக மாறுவாங்க........

கந்தர்:- சுண்ணாம்பா, பாக்கா எண்டத பாப்பமே.........

இந்தியாவும் ஈழத்தமிழரும்


# மத்தியஸ்தம் வகிக்க வந்த ராஜீவை சண்டையில் குதிக்க வைத்த ஜே.ஆர்.

> ''புயலாக எழுந்த பேராபத்துக்களை எல்லாம் மலையாக நின்று எதிர்கொள்ள, இரும்பையொத்த மன உறுதி எனக்குத் தேவைப்பட்டது. இந்தச் சோதனை மிகுந்த நெருக்கடியான வரலாற்றுக் கட்டங்களில் எனக்குப் பக்கபலமாக - மனித மலைகளாக உறுதியோடு நின்ற மாவீரர்களை, நான் என்றும் மறக்க முடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராத உறுதிதான் எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நிற்கின்றன.''
>
> *- விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.*

இந்தியாவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அக் காலகட்டத்தில் இடம்பெற்றுவந்த தேன்நிலவிற்கு முற்றுப்புள்ளி வைத்த ஒரு நிகழ்வாகவே, புலேந்திரன் குமரப்பா உட்பட 12 போராளிகள் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்ட சம்பவம் அமைந்திருந்தது.

இந்த விடயத்தில் இந்தியா பொறுப்புடனும், நிதானத்துடனும் நடந்துகொள்ளத் தவறியதே, பிற்காலத்தில் இந்தியப்படைகள் ஈழத்தில் ஒரு மாபெரும் அவலத்தைச் சந்திக்க பிரதான காரணமாக அமைந்திருந்தது என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள். இது இந்தியா விட்ட மாபெரும் வரலாற்றுத் தவறு என்று, இந்தியாவின் சரித்திரத்தை வரைந்த பல ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஜே.ஆரினதும், அத்துலத் முதலியினதும் சூழச்சி வலையில் இந்தியா



தெரிந்துகொண்டே விழுந்திருந்த சந்தர்ப்பம் என்றும் இந்தச் சம்பவம் பற்றி பலர் கண்டணம் வெளியிட்டிருந்தார்கள்.

'An Independent view from London' என்ற புத்தகத்தில் 'புறுர்ஸ் போலிங்' என்ற ஆய்வாளர் இந்தச் சம்பவம் பற்றி இவ்வாறு எழுதியிருந்தார்:

''அத்துலத் முதலி, ஸ்ரீலங்காவின் தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த 1984 முதல் 1989ம் ஆண்டு காலம் வரை, அவர் ஸ்ரீலங்காவின் அரசியலில் முக்கிய பாத்திரத்தை வகித்து வந்தார். ஊடகத்துறையுடன் நேரடியான தொடர்புகளை வைத்திருந்த ஒரே அமைச்சரும் அத்துலத் முதலியாகவே இருந்தார். மிகவும் புத்திசாலியான இவர் பல சந்தர்ப்பங்களில் இரக்கமற்ற ஒரு மனிதராகவும் நடந்துகொண்டிருந்தார். 1987ம் ஆண்டு சமாதான ஒப்பந்தத்தின் போது, பாக்கு நீரினையில் கைதுசெய்யப்பட்ட சில விடுதலைப் புலிகளை இந்தியப்படைகள் ஸ்ரீலங்காப் படைகளிடம் கையளிக்கவேண்டும் என்பதில் அத்துலத்முதலி மிகவும் பிடிவாதமாக இருந்தார். இந்தச் சம்பவத்தில் பல விடுதலைப் புலிப் போராளிகள் தற்கொலை செய்துகொள்ள, இந்தியப் படைகளுக்கு எதிராக புலிகள் நேரடி யுத்தத்தில் இறங்கும் சூழ்நிலை அங்கு உருவானது. இந்த விடயம் பற்றி நான் அத்துலத் முதலியிடம் பேசும் பொழுது, 'நிலமை இப்படி மோசமாக மாறிவிடும் என்பதை நீங்கள் முன்னரே உணர்ந்து, இதனைத் தவிர்த்திருக்கவேண்டும்' என்று தெரிவித்தேன், அதற்கு அத்துலத் முதலி, ''உண்மையிலேயே என்ன

~ நிராஜ் டேவிட் ~

நடக்கவேண்டும் என்று நாங்கள் ஏற்கனவே எதிர்பார்த்திருந்தோமோ, அதுதான் நடைபெற்றது. இந்தியாவை எங்கள் பக்கம் திருப்புவதற்கு ஒரு சரியான சந்தர்ப்பத்தை நாங்கள் பலகாலமாகவே எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தோம் என்பதே உண்மை'' என்று பதிலளித்திருந்தார்.''


இவ்வாறு 'புறுஸ் பேலிங்' தனது அந்தப் பத்தியில் தெரிவித்திருந்தார். இந்தப் பத்தியை, THE SUNDAY TIMES ஆங்கிலப் பத்திரிகை 02.05.93 இல் மறுபிரசுரம் செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

ஜே.ஆரும், அத்துலத் முதலியும் எவ்வளவு கெட்டித்தனமாக இந்தியாவை தமது வலையில் விழச் செய்திருந்தார்கள் என்பது இதில் இருந்து புரிகின்றது.

## சிங்களத் தரப்பே காரணம்:

இந்திய இலங்கை ஒப்பந்தத்திலும் சரி, அதன் பின்னர் விடுதலைப் புலிகளுக்கும், இந்தியாவிற்கு இடையில் முறுகல் நிலை உருவானதிலும் சரி, முக்கிய பங்கு வகித்த நபர் என்று பல தரப்பினராலும் விமர்சிக்கப்படும் ஒரு நபர் இலங்கைக்கான இந்தியத் தூதுவராக அக்காலகட்டத்தில் பணியாற்றிய ஜோதின்ரா நாத் தீட்ஷித் (ஜே.என்.தீட்ஷித்). இவர், பின்னர் தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றபின், தனது பதவிக் காலத்தில் இடம்பெற்ற பல அரசியல் தவறுகள் பற்றி மனம் திறந்து வெளிப்படுத்தியிருந்தார். இந்தியாவிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பகை மூண்டது பற்றி, தீட்ஷித் வழங்கியிருந்த செவ்வி ஒன்றில், இந்தியப்படையின் காலத்தில் சாமாதானம் குழம்பியதற்கு சிங்களத் தரப்பே காரணம் என்று தெரிவித்திருந்தார். 1994ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14ம் திகதி வெளிவந்த THE SUNDAY LEADER ஆங்கிலப் பத்திரிகையில் தீட்ஷித்தின் செவ்வி பிரசுரமாகி இருந்தது. அவர் அந்தச் செவ்வியில் இவ்வாறு தெரிவித்திருந்தார்:

''1987ம் ஆண்டு செப்டெம்பர் மாதக் கடைசியில் இருந்து அக்டோபர் மாத நடுப்பகுதி வரை, சமாதான முயற்சிகளில் பாரிய ஒரு தேக்கநிலை காணப்பட்டது. சமாதான முயற்சிகளுக்கு எதிராக சிங்களத் தரப்பினால் ஏற்படுத்தப்பட்ட தடங்கல்களே அதிகமானதாக இருந்தது. தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து வழங்குவதற்கு இழுத்தடிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. அதிகாரப் பரவலாக்கத்தையும், நிதி கையாள்கை சம்பந்தமான தீர்வுகளையும் திட்டமிட்டு ஸ்ரீலங்கா அரசாங்கம் இழுத்தடித்து வந்தது. ஆகவே, 1983 காலப்பகுதியில் இருந்த நிலமையை நோக்கியே சமாதான முயற்சிகள் சென்றுகொண்டிருப்பதாக தமிழ் மக்கள் சந்தேகப்பட ஆரம்பித்திருந்தார்கள். இது



அப்பொழுது இடம்பெற்றுக்கொண்டிருந்த ஒரு முக்கியமான பிரச்சினை.

ஆனால் இந்தியாவை புலிகளுக்கு எதிரான யுத்தத்தை நோக்கித் திருப்புவதற்கு பிரதானமாக ஒரு சம்பவம் நடைபெற்றிருந்தது. 17 இளைஞர்களை கொழும்புக்கு கொண்டு வரவேண்டும் என்ற விடயத்தில் அத்துலத் முதலி மேற்கொண்டிருந்த பிடிவாதமே இந்தப் பிரச்சினை ஆரம்பமாவதற்கு மிகவும் பிரதான காரணம் என்று கூறவேண்டும். அவர்கள் இந்தியப் படைகளினது பாதுகாப்பிலேயே தொடர்ந்தும் வைக்கப்பட்டிருக்கவேண்டும். சில விடயங்களில் எம்மால் இணக்கம் காண முடிந்திருந்தது. ஆமாம், ஜே.ஆர். சில அரசியல் நகர்வுகளுக்கு சம்மதித்திருந்தார். ஆனால், அத்துலத் முதலி சில சதித்திட்டங்களை தன்னகத்தே கொண்டு செயற்பட முனைந்ததால்தான், இந்தியாவிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பிரச்சினைகள் உருவானது. ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் விருப்பத்திற்கு மாறாக அத்துலத்முதலி நடந்துசொள்ள முயன்றதால்தான், அந்த இளைஞர்கள் அநியாயமாக நஞ்சருந்தி தற்கொலை செய்துகொள்ள நேரிட்டது. இந்தச் சம்பவம் மிகவும் துக்ககரமான ஒரு சம்பவம் என்பதுடன், புலிகளின் தலைமைத்துவத்தை மிகவும் கோபமடையவும் வைத்த ஒரு சம்பவம் என்றே கூறவேண்டும். அவர்களைப் பொறுத்தவரை இது ஒரு நம்பிக்கைத் துரோகமான ஒரு செயலாகவே பார்க்கப்பட்டது. ஒரு வகையில் இது உண்மையும் கூட.'' இவ்வாறு தீட்ஷித் தனது செவ்வியில் குறிப்பிட்டிருந்தார்.

இதில் இருந்து, ஸ்ரீலங்கா அரசாங்கம் இந்தியாவை எப்படி திட்டமிட்டு தனது வலையில் விழ வைத்திருக்கின்றது என்பதை உணரக் கூடியதாக இருக்கின்றது.

இதேபோன்று, 13.11.1994 அன்று வெளியான THE ISLAND பத்திரிகையில், 'தேசிய சமாதானப் பேரவையில் தலைவரும், பிரபல சிங்கள ஊடகவியலாளருமான ஜெகான் பெரேரா இவ்வாறு தெரிவித்திருந்தார்: ''ஆரம்பம் முதலே ஜெயவர்த்தனாவும், அவரது லெப்டினட்களும் இந்த ஒப்பந்தத்தை எப்படி முறியடிப்பது, இந்தியாவை எப்படி ஏமாற்றுவது என்று திட்டமிட்டபடியே இருந்தார்கள். இதற்கான முயற்சிகளை அவர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் மேற்கொண்டபடியே இருந்தார்கள். படிப்படியாக அவர்கள் மேற்கொண்டு வந்த முயற்சிகள் இறுதியில் அவர்களுக்கு வெற்றியைப் பெற்றுத்தந்தது. ஈழப் போராளிகளைச் சமாளிப்பதற்கும், சிதைப்பதற்கும் இந்தியாவின் உதவியைப் பெற்றுக்கொள்ளும் விடயத்தில் ஜேஆரும், லலித்தும் ஆரம்பம் முதலே திட்டமிட்டு செயலாற்றி வந்திருந்தார்கள். ராஜீவை அவர்கள் மிகவும் தந்திரமாக தமது பொறியில் விழ வைத்திருந்தார்கள்.'' இவ்வாறு ஜெகான் பெரேரா தனது பத்தியில் எழுதியிருந்தார்.

இந்தியாவை புலிகளுக்கு எதிராக திருப்பிவிட்ட தனது தந்திரம் பற்றி ஜே.ஆர் பல சந்தர்ப்பங்களில் பெருமிதம் வெளிப்படுத்தியிருந்ததும் நோக்கத்தக்கது. அவர் ஒரு தடவை பாராளுமன்றத்தில் இதனை புன்முறுவலுடன் தெரிவித்திருந்தார்.

''குஸ்திக்கு மத்தியஸ்தம் வகிக்கவென்று வந்த ராஜீவே கடைசியில் கோதாவில் குதிக்கும்படியாக ஆகிவிட்டது'' என்று நகைச்சுவையாக தெரிவித்திருந்தார்.

## தலைவர் பிரபாகரனின் செவ்வி:

இந்தியப் படைகள் புலிகளால் தோற்

**துரோகங்களின் அத்தியாயங்கள் - 46**

கடிக்கப்பட்டு இந்தியாவிற்கு திருப்பி அனுப்பப்பட்ட பின்னர், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் 'டைம்ஸ்' சஞ்சிகைக்கு வழங்கிய ஒரு செவ்வியில், இந்தியாவுடன் யுத்தம் மூண்டதற்கான காரணத்தை குறிப்பிட்டிருந்தார். பிரபல இந்திய பத்திரிகையாளர் அனிதா பிரதாப்பிற்கு அவர் வழங்கியிருந்த செவ்வி 08.04.1990 இல் வெளிவந்த TIMES' சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அந்தச் செவ்வியில் அவர் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில், 'ஒப்பந்த காலத்தில் ஸ்ரீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டிருந்த எமது போராளிகள் பன்னிருவரை விடுவிக்க இந்தியா தவறியிருந்தது. அவர்களுடைய பரிதாப கரமான மரணம் இந்தியாவுடன் மோத வேண்டும் என்ற முடிவுக்கு எம்மைக் கொண்டு சென்றிருந்தது.

இவ்வாறு தலைவர் பிரபாகரன் தனது செவ்வியில் குறிப்பிட்டிருந்தார்.

இந்தியா விட்ட தவறால், விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியஸ்தர்கள் 12 பேர் அநியாயமாக பலியானதுதான், புலிகள் இந்தியாவிற்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதற்கு காரணமாக இருந்தது. இந்தியாவை நம்பி ஆயுதங்களை ஒப்படைத்திருந்த விடுதலைப் புலிகளைக் காப்பாற்றும் பொறுப்பில் இருந்து இந்தியா தவறி இருந்தது. ஸ்ரீலங்கா அரசு விரித்திருந்த வலையில் இந்தியா தெரிந்துகொண்டே விழுந்தது.

இது இந்தியாவை நம்பியிருந்த ஈழத்தமிழர்களுக்கு இந்தியா செய்திருந்த மிகப்பெரிய துரோகம் என்பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை.

*(துரோகம் தொடரும்)*



# மட்டக்களப்பில் மக்கள் குறைதீர்க்கும் எழுச்சி சங்கமம்

தமிழரே புலிகள் புலிகளே தமிழர் என்ற உன்னத உண்மையை பிரகடனப் படுத்திய வீரம் விளை நிலமான மட்டக்களப்பில் அந்த உண்மையை மேலும் வலுவூட்டக் கூடிய பல்வேறு எழுச்சித் திட்டங்கள் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தொடர்ந்து இடம் பெற்றுக் கொண்டு வருகின்றன.

பொங்கு தமிழ்ப் பிரகடனமாக கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த ஜனவரி 21ம் திகதி ஒரு இலட்சத்திற்கு அதிகமான மக்கள் குழுமி இருந்து தமது வலது கைகளை நீட்டி



''தமிழரே புலிகள் புலிகளே தமிழர்'' என்பதை சர்வதேசத்திற்கு வெளிக்காட்டியதுடன் மட்டும் தமது பணி முடியவில்லை, என்பதைக் கோடிட்டுக் காட்டும் ஒரு அங்கமாக கடந்த 13ம் திகதி தொடக்கம் 15ம் திகதி வரை மூன்று நாட்கள் மட்டக்களப்பு மாநகர சபைப் பகுதிக்குட்பட்ட கிராமமான பாலமீன் மடு கிராமத்தில் மக்கள் எழுச்சி சங்கமம் எழுச்சியுடன் இடம் பெற்றது.

விடுதலைப் புலிகளின் அரசியல் போராளிகள், திணைக்கள அதிகாரிகள், ஊர் மக்கள் எல்லோருமே ஒன்றாக இணைந்து அந்த மூன்று நாட்களும் பாலமீன் மடு, திராய்மடு பகுதிகளில் பல்வேறு சிரமதானங்கள், மரம் நடுகை திட்டங்கள் ஊரில் தீக்கப்படாத குறைகளை இனம் கண்டு தீர்த்து வைக்கப்பட்ட இறுதி நாளில் பல்வேறுபட்ட தமிழ்ப் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளையும் நடாத்தினர்.

இந்த எழுச்சி சங்கமத்தின் மூலமாக மீண்டும் ஒருமுறை தமிழரே புலிகள் புலிகளே தமிழர் என்பது நிரூபணமாகியது.

மட்டக்களப்பு நகர்ப்பகுதி அரசியல் துறைப் பொறுப்பாளர் சேனாதிராசா தலைமையில் இடம் பெற்ற இந்த மக்கள் எழுச்சி சங்கமமானது மக்களை மகிழ்வித்தது.

உண்மையிலேயே மட்டுநகர் பகுதியை அண்டிய கிராமமாக இருந்தும் கூட அங்குள்ள மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வந்தமை அன்றுதான் காணக்கூடியதாய் இருந்தது.

ஆனால் இங்கு இடம் பெற்ற மக்கள் எழுச்சி சங்கமமானது அங்குள்ள அடிப்படை வசதிகள் சிலவற்றை நிவர்த்தி செய்துள்ளது என்பது உண்மை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் சங்கமம் இடம் பெற்று மூன்று தினங்களுக்குப் பின் கடந்த 19ம் திகதி அம்பாறை மாவட்டத்தில் தமிழின உயிர்க்கொலை நாள் மிகவும் உணர்வு பூர்வமாகவும் எழுச்சியுடனும் ஆலையடி வேம்பு தர்மசங்கரி விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது

இந்த நாளானது கடந்த 1986ம் ஆண்டு பெப்ரவரி 19ம் திகதி உடும்பன்குளம் எனும் இடத்தில் வைத்து சிறிலங்காப் படையினரின் வெறியாட்டத்தினால் புடுகொலை செய்யப்பட்ட 103 தமிழ் மக்களின் நினைவு நாளாகும்.

இந்த நாளை அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் பெருமன்றம் தமிழின உயிர்க் கொலை நாளாகப் பிரகடனப் படுத்தியது.

அம்பாறை மாவட்ட தமிழ் கிராமங்கள் தோறும் ''விழ விழ எழுவோம் விடுதலை பெறுவோம்'' என்ற வாசகங்களைத் தாங்கிய மக்கள் ஊர்வலமாக வந்து ஆலையடி வேம்பு

**பாத்திரன்**

[illegible]மசங்கரி விளையாட்டு மைதானத்தை [illegible]ந்து நின்று எழுச்சிக்கோசங்களை [illegible]ன்முழங்கச் செய்தனர்.

தமிழரே புலிகள் புலிகளே தமிழர் என்பதை உலகிற்கு மட்டக்களப்பு பொங்கு தமிழில் நிரூபித்துக் காட்டிய மக்கள் ''விழ விழ எழுவோம் விடுதலை பெறுவோம்'' என அம்பாறை மாவட்டத்தில்



சபதம் செய்தமையானது அங்குள்ள அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

ஆயுதப்போராட்டம் மட்டும் கடந்த இரண்டு வருடங்களாக ஓய்ந்துள்ள இவ்வேளையில் அரசியல் தீர்வுக்கான போராட்டம் இன்று சர்வதேசத்தைக் கூர்மைப்படுத்தியுள்ளது.

நாம் எப்போதும் விழிப்புடன் செயல்பட வேண்டும். என்பது காலத்தின் கட்டாய தேவையாகும், இன்று சமாதானப் பேச்சுக்களைத் தள்ளி விட்டு தமது சுயலாப தேவைக்காக தேர்தலை நடாத்தும் சிறிலங்கா தேசத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து நாம் பூரண விடுதலை பெற வேண்டுமானால் எமது பலம் இனறியமையாதது. எமது பலத்தை அதிகரிக்க வேண்டியது தமிழனாய்ப் பிறந்த ஒவ்வொருவரின் தார்மீகக் கடமையாகும்.

அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை ஒவ்வொரு தமிழனும் சிந்திக்க வேண்டும்.

தமிழினத்தின் விடிவு தமிழர்களின் பலத்தில் மட்டுமே தங்கியுள்ளது என்பதை எமது தேசியத் தலைவர் உலக நாடுகளுக்கு நிரூபித்து காட்டியுள்ளார்.

இவ்வாறான நிலையில்தான் 14வது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் 2ம் திகதி இடம் பெறப்போகின்றது.

இந்தத் தேர்தல் இதுவரை இடம்பெற்ற 13தேர்தல்களையும் விட மிகவும் முக்கியமான ஒரு தேர்தலாகக் கருதப்படுகின்றது.

எமது உரிமைப் போரின் உண்மை உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கிய இவ்வேளையில் இத்தேர்தல் இடம் பெறுவதால் தாயக மண்ணில் வாழும் ஒவ்வொரு தமிழ் வாக்காளனும் நன்கு சிந்தித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதன் மூலம் மீண்டும் ஒரு முறை உலக நாடுகளுக்கு ''தமிழரே புலிகள் புலிகளே தமிழர்'' என்பதை நிரூபித்துக் காட்டி உலக மனசாட்சியைத் திறப்பதற்கு தூண்டு கோலாக இந்தத் தேர்தல் அமையும்.

தேர்தலில் எந்த ஒரு தமிழ் மகனும் பேரினவாதக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடாமல் பேரினவாதக் கட்சிகளைப் பகிஷ்கரித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களை ஆதரிப்பதன் மூலம் எதிர் வரும் பொதுத்தேர்தலில் ஆட்சியமைக்கவுள்ள சிங்கள அரசைத் தீர்மானிக்கும் பெரும் சக்தியாகவும் மாற முடியும்.

தமிழர்களின் போராட்டமும் எந்த வடிவில் முன்னெடுக்கப்பட்டாலும் அந்தப் போராட்டங்கள் அனைத்துக்கும் பங்களிப்புச் செய்யக்கூடிய உண்மையான சுயநலமற்ற தமிழர்களாக அனைவரும் மாறும் போதுதான் எதிர்பார்த்த இலக்கை நாம் அடையலாம்.

எனவே தமிழர்கள் தமிழர்களாக செயல்பட வேண்டியது அவசியம் என்பதைப் புரிந்துகொள்வோம்.

---

பகிரங்கமடல்

அலைமகன் எழுதும் பகிரங்கமடல்.



## உணர்ந்து விட்டாரா சித்தார்த்தன்

**புளொட் தலைவர் சித்தார்த்தனுக்கு!**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட நீங்கள் விருப்பம் தெரிவிப்பது இப்போது தான் சித்தார்த்தன் உணர்ந்துவிட்டார் என எண்ணத் தோன்று கிறது.

மக்களே புலிகள் புலிகளே மக்கள் என்னும் தமிழ் மக்களின் தேசப்பிரகடனத்துக்கு அமைய தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெளிக் கொணர வேண்டிய காலகட்டமிது. இக்கால சூழலில் கடந்தகாலத் தவறுகளை ஒரு மூலையில் ஓதுக்கி வைத்து விட்டு சித்தார்த்தன் போன்றோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைவது வெறும் நாடாளுமன்ற ஆசனத்தைக் கைப்பற்றும் குறுகிய இலாபங்களுக்காக அமைந்து விடக் கூடாது. தமிழ்த் தேசியத்தை வலிமைப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே அமைய வேண்டும்.

கடந்த காலங்களில் உங்கள் கட்சியின் உறுப்பினர்கள் தமிழினத்தின் மீது மேற்கொண்ட துரோகத்தனமான சம்பவங்களை நினைவூட்டி குற்றம் சுமத்துவது எனது நோக்கமல்ல. பேரினவாதக் கட்சியின் பிடியிலிருந்து விலகி தமிழ்த் தேசியத்திற்கான பணியினை முன்னெடுக்க வேண்டும். அப்போது தான் தமிழ் மக்கள் சித்தார்த்தனும் திருந்தி விட்டான் என்று கூறுவார்கள்.

இல்லா விட்டால் தவறுகளை தணல் மூட்டிக் காட்டுவார்கள். நம் தமிழினம், கூட்டமைப்பில் இணைவதென்றால் நிபந்தனையோ, நிபந்தனை வன்னியில் இரு ஆசனம் மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் தலா இரு ஆசனம். நாடாளுமன்றத் தில் நான்கு ஆசனம் மட்டும் கிடைக்க வேண்டும். அதுதான் புளொட் கட்சியின் இலட்சியமா? அது அருவருப்பான வார்த்தைகள் என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது. நமக்குத் தேவை நாடாளுமன்ற நாற்காலியல்ல. நமது உரிமைக்காக, விடுதலைக்காகப் போராடும் விடுதலைப் புலிகளைப் பலமடையச் செய்து தேசியத் தலைவரின் காலத்தில் உரிமையை, சுதந்திரத்தை அடைவதேயாகும்.

அதற்காக அனைத்தினையும் துறக்க அனைவரும் தயாராக வேண்டுமோ? அதற்கு ஆம் என்ற பதில் தமிழ் இனத்தில் உருவாக வேண்டும். அதுவே அலைமகனின் எதிர்பார்ப்பு. தேர்தலுக்கு மட்டும் கூட்டு, தேர்தல் முடிவடைந்ததும் சிங்கள கட்சிகளுக்கும், சிறிலங்கா அரசுக்கும் ஆதரவு பேசிடும் போக்கு இப்படி ஒரு போக்கு. சித்தார்த்தன் குழுவுக்கு வரக்கூடாது. தமிழ் மக்களிடையே நாமும் தமிழ் தேசத்திற்கான சேவகனாக வந்து விட்டோம் என்பதை முதலில் பகிரங்கப் படுத்துங்கள்.

*இங்ஙனம், அலைமகன்*

## யுவதியே கவனம் தேவை!

யுவதியே இவைகள் உனக்குந்தான்
சட்டை கிழித்து சேட்டை பண்ணி
வெட்டிப் புதைத்தவன் தான் வேலியில்
-நின்று
அட்டைப்படந் தந்து அழகாய்ச்
-சிரிக்கிறான்.
காமச் சிரிப்புத்தான் கவனம்

நீ அவன் ஓலை கிழிக்க தயாராகு
உன் விழி நெருப்பாகட்டும்- சந்ததி
வாழ்வு சிறப்பாகட்டும் அதைவிட்டு
கட்டிலில் கிடந்து சக்தியில் ஒரு பாட்டு
சிரசவில் ஒருபடம் என்று கனவுலகில்
-மிதக்காதே.

பணம் தான் வீணாப்போகும் மனந்தான்
-தடுமாறும்
வேறெந்த மாற்றமும் உமக்கு வராது
கனவுலகை மறந்து மனவுலகை ஒரு
-நிலை
எடுத்து விடுதலைத் தீயாக நீ மாறு

அப்போது எம் வசந்தமான விடுதலை
-கிடைக்கும்
நாம் எம் சந்ததியுடன் கனவுலகில்
-மிதப்போம்
கடற்கரையில் உலாவருவோம்- ஏன்
நிலா வரை உலாப் போவோம்.

சேனாதிராஜா

## ஏன் பொட்டு வைக்கிறார்கள்

தமிழ் பெண்களை இனம் காட்டும் விடயமாக நெற்றிப் பொட்டு திகழ்கிறது.



ஆனால் தற்சமயம் பொட்டு வைப்பது சிலருக்கு அநாகரிகம் என்றாகி விட்டது.

இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு ஒன்று சூழ்நிலை, தமிழ் என்று காட்டிக் கொண்டால் பிரச்சினை வருமோ என்ற நிலை, மற்றையது ஃபஷன் கெட்டு விடும் என்ற போக்கு.

எது எப்படி இருப்பினும் இந்தப் பொட்டு வைப்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

தொடுகை வைத்தியத்தைப்பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்த வைத்திய முறை பலரையும் ஆச்சர்யப்பட வைப்பது உண்மை.

உண்மையில் இந்த வைத்தியத்தின் தத்துவம் யாதெனில் எமது உடம்பிலுள்ள நரம்பு முடிச்சுக்களை உணர்ந்து அதைத் தொட்டுத் தூண்டி விடுவதாகும். இந்த முடிச்சுகளை "சக்கரம்" என்றும் குறிப்பிடுவர்.

அதே போல் தான் இரு புருவங்களுக்கு மத்தியில் சற்று மேல் ஆஞ்ஞை என்ற சக்கரம் உள்ளது. அந்த இடத்தில் பொட்டு அல்லது வீபூதி வைக்கும் போது ஓர் அழுத்தம் ஏற்படுகின்றது. அந்தச் சக்கரத்தில் பீட்யூட்டரி என்ற சுரப்பி சுரக்கிறது.


பொட்டுவைப்பதால் அழுத்தம்பெற்ற சுரப்பியால் அறிவும் மன உறுதியும் ஏற்படுகிறது.

வசியப்படுத்துபவர்கள் இந்த நெற்றிச் சக்கரத்தைத்தான் குறிவைத்து தங்கள் பார்வை வீச்சைச் செலுத்துவார்கள். ஆனால் இந்த இடத்தில் பொட்டு அல்லது வீபூதி இருந்தால் அவர்களது வசியம் ஏற்படாது.

எனவே சாதாரணமாக நாங்கள் வைக்கிற இந்தப் பொட்டில் இத்தனை அம்சங்கள் அடங்கியிருக்கின்றதல்லவா?

பொட்டுவைக்கத் தயங்குபவர்களே! இனியாவது பொட்டு வைக்கத்தவறாதீர்கள்.


## கண்கள் அழகு பெற



கண்களுக்கு நல்ல அழகையும், சிறந்த ஒளியையும் பெறவேண்டுமானால், ஆப்பிள் பழத்தை நறுக்கி சுத்தமான தேனில் நனைத்துச் சாப்பிட வேண்டும.; சில வாரங்களில் உங்கள் முகத்தைக் கண்ணாடியில் பார்த்தால் நீங்களே உணருவீர்கள்.

# தற்கொலை செய்பவர்களில் அதிகமானவர்கள் பெண்களே

இலங்கையைப் பொறுத்த வரை பல இடங்களில் பெற்றோர்களை பிள்ளைகள் முதியோர் இல்லங்களுக்கு அனுப்புதல் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதனால் பல



தாயுள்ளங்கள் வாழ்க்கையை வெறுத்து கண்ணீர் சிந்துகின்றனர். மனைவியின் சொல்லைக் கேட்டு கணவன் தன் தாயைப் புறக்கணித்து தாயினால் தொந்தரவு என அநாதை இல்லங்களுக்கு அனுப்பி விடுகின்றனர். பெண் பிள்ளைகளும் தாய் மீது கொஞ்சம் கூட நெஞ்சில் இரக்கமின்றி கணவனின் சொல்லைக் கேட்டு வயதானவர்கள் வீட்டில் இருந்தால் தங்கள் சுதந்திரம் கெட்டுப் போகும் என நினைக்கிறார்கள். பத்துமாதம் கருவறையில் வாடகையின்றி வைத்திருந்தவள் பல துன்பங்களுக்கு மத்தியில் பட்டினியாய் கிடந்து உங்களை வளர்த்தெடுக்க என்ன கஷ்ரப்பட்டிருப்பாள் என்பதை பிள்ளைகள் உணர மறுக்கிறார்கள்.

நாம் உலகில் கண்ணால் கண்ட தெய்வம் அம்மா. கடவுளை யாரும் பிறந்தவுடன் நேரில் கண்டதாக சரித்திரமில்லை. அம்மாவே கண்கண்ட தெய்வம். அவள் கூறும் வார்த்தைகளே என்றும் பொன்மொழிகள். அன்பின் ஊற்று பெருமையின் சிகரம். அன்றைய காலங்களில் பெண்கள் பெற்றோரைத் தங்கள் கூடவே வைத்திருக்க விரும்புவார்கள். வயதானவர்கள் வீட்டிலிருந்தால் தங்களுக்கு உதவியாகவும் வீடு எப்போதும் கலகலப்புடனும் இருக்குமென நினைத்தார்கள். பேரப்பிள்ளைகளுக்கோ பாட்டி வீட்டில் இருந்தால் ஒரே குதூகலம்தான், ஆனால் இப்போது அப்படியல்ல. நவீன உலகில் எல்லாப் பெண்களும் தனிமையில் வாழ நினைக்கிறார்கள். கணவன் பிள்ளைகளோடு மட்டும் வாழ்ந்தால் போதும் என்பது கருத்தாக உள்ளது. பணத்தைக் காட்டி பணத்திற்கு அடிமையாக்கி தாய்மார் எல்லோரையும் அநாதை இல்லங்களுக்கு அனுப்பி பணத்தினாலே பாசத்தை ஊட்டும் காலமாகி விட்டது. தாய் இறந்தால் மட்டும் பிள்ளைகளும் உறவுகளும் போட்டி போட்டுக் கொண்டு இது என் அம்மா, இது என் மாமி எங்களுக்குச் சொந்தமான உடல் என்று இறந்த உடலுக்குப் போராடுகிறார்கள். உயிரோடிருக்கும் போது வராத சொந்த பந்தங்கள் பாசத்திற்காக ஏங்கிய போது, கண்ணீர் சிந்தி அழுத போது அநாதையாகக் கழிக்கப்பட்டு தாயைச் சுமையென ஒதுக்கிய உறவுகள் இப்போது இறந்த உடலுக்குப் பெட்டி எடுப்பதுக்கும் எட்டுக்கும், முப்பத்தியொன்றுக்கும்

**எஸ். சுமதி**

பணப் ரிமாற்றம் செய்து போலி வேஷம் போட்டு தாயில் பாசமென பணத்தைக் காட்டி நடிக்கும் போலி உறவுகள். பெற்றோர்களே! நீங்கள் சற்று சிந்திக்க வேண்டும். பிள்ளைகளுக்காக நீங்கள் உங்களை இழக்கக் கூடாது. சுதந்திரத்தை இழப்பது நல்லதல்ல. பிள்ளைகளுக்கே முழுச் சொத்தையும் வைக்காதீர்கள். இன்பமே வாழ்க்கையல்ல. எப்போதும் எல்லோரிடமும் இன்பம் நிலை பெறுவதுமில்லை. துன்பமும் வரும். இளமையுடன் நாம் இருப்பதில்லை முதுமையும் வருவதுண்டு வசதியோடு நாம் வாழ்வதில்லை. இலையுதிர் காலமும் உண்டு. காய்க்கும் காலமும் உண்டு என்பதை நாம் மறக்கக் கூடாது. வயதாகிவிட்டால் பிள்ளைகளுக்கு பெற்றோர் பெரும் சுமை போல் தோன்றுவார்கள். எனவே முதுமைக் காலத்தில் உங்களைப் பாதுகாத்துக் கொள்ள உங்களிடம் பணமிருப்பது சிறந்தது. எல்லாமே என் பிள்ளைக்கு எனக் கூறி சொத்துக்களை இழந்து விடாதீர்கள். உங்களுக்குத் தேவையான பணத்தை வங்கியில் போட்டு வையுங்கள்.

# அரிவையர் அலை

## சீஸ்றோஸ்



**தேவையான பொருட்கள்**

சீஸ் - 1 ரின் (சிறியது)
மாஜரின் - 1மே.க நிரப்பி
கோதுமை மா - $^{1}/_{4}$ கி.கி
வேக்கிங் பவுடர் -1தே.க (நிரப்பி)
தண்ணீர் - அளவிற்கு
உப்புத்தூள் - அளவிற்கு
தனி மிளகாய்தூள் - அளவிற்கு
தேங்காய் எண்ணெய் - $^{1}/_{2}$ போத்தல
கோதுமை மா- 2 மே.க நிரப்பி (பலகைக்குப் பூசுவதற்கு.)

**செய்முறை**

கோதுமை மாவுடன் வேக்கிங் பவுடர் கலந்து நான்கு முறை அரித்துப் பாத்திரத்தில் போட்டு மாஜரின், சீஸ் என்பவற்றை இட்டு நன்கு பிசிறிச் சேர்த்துக் கொண்ட பின்பு அளவிற்குத் தண்ணீர் விட்டுக் கையிலொட்டாத பதத்திற்கு அழுத்தமாகப் பிசைந்து குழைத்து வைத்துக் கொள்க.

பின்பு மாப்பூசிய பலகையில் குழைத்த மாக்கலவையை மெல்லியதாக உருட்டி சிறு வட்டங்களாக வெட்டியெடுத்துக் கொதிக்கும் எண்ணெய்யில் இட்டுப் பொன் நிறமாகப் பொரித்தெடுத்து அளவிற்கு உப்புத்தூள், தனி மிளகாய்த்தூள் என்பவற்றைச் சேர்த்துப் புரட்டி போத்தலில் அடைத்து வைத்துப் பரிமாறலாம்.

தர்மலிங்கம் -சுபாஜினி
கோவில் குளம், ஆரையம்பதி.

## உலர்ந்த உணர்ச்சிமயமான தோலைச் சிவப்பாக்க...!

உலர்ந்த, உணர்ச்சி மயமான தோல் உடையவர்கள் ஒயில் கலப்புடைய கிரீம்களை முகத்தில் தடவினால் முகத்தில் பருக்கள் தோன்றும்.

இதைத் தவிர்க்க பேபி சோப்பைமட்டுமே குளிக்க உபயோகிக்க வேண்டும். தினசரி மூன்று தடவைக்குக் குறையாமல் பேபி லோஷனை முகத்தில் தடவி வர வேண்டும். இரவில் எலுமிச்சம் பழச்சாறும் மில்க் கிரீமும் கலந்த கலவையை முகத்தில் தடவிச் சில நிமிட நேரம் ஊற வைத்துக் கழுவி விட்டுப் படுக்கைக்குச் செல்ல வேண்டும். இதர கிரீம்களையும், லோஷன்களையும் எண்ணெய், கிரீம் கலந்த சாதனத்தை அடியோடு விலக்க வேண்டும்.



காலையில் தூங்கி எழுந்ததும், நல்லெண்ணெய்யில் 10 சொட்டு கையில் விட்டு, 10 சொட்டுத் தண்ணீரையும் சேர்த்து, இரண்டு கையாயும் சூடு பறக்கத் தேய்த்தால் கையில் நுரை போல் கிளம்பும். அதை முகத்தில் கீழிருந்து மேலாகத் தடவி உலர வைத்த பின், பயற்றம் பருப்பு மாவு போட்டுக் குளித்தால் நாளடைவில் முகம் பட்டுப் போல் மென்மையாகும்.

## மனைவி

மனைவி அன்புடையவளாகவும் நலன் விரும்பியாகவும், பாரபட்சமற்றவளாகவும், நம்பிக்கையுடன் எதையும் தேர்ந்தெடுத்தலில் திறமையுள்ளவளாகவும், சிக்கனமானவளாகவும், விட்டுக் கொடுப்புள்ளவளாகவும், நற்பண்புகள் நிறைந்தவளாகவும், அமைதியானவளாகவும், மனஉறுதியுள்ளவளாகும், தெளிவுள்ளவளாகவும், சீராட்டி பாராட்டுபவளாகவும், பாராட்டுக்குரியவளாகவும், அமைந்திருக்க வேண்டும். இவ்வளவும் அமைந்த பெண் வாழ்க்கைத் துணையாய் அமைந்தால் ஒருவனுடைய வாழ்க்கை ஒரு "பூஞ்சோலை" தான்.

திருமதி. மா. வேலுப்பிள்ளை
நிலாவெளி, திருகோணமலை.

## காதல்

இதயத்தைத் தவிர, காதல் குடியிருப்புக்கு இடமில்லை.
- புறூக்

இன்பத்தில் இனியதும் துன்பத்தில் கொடியதும் காதல்.
- பெய்லி

வாழ்வில் ஆரம்பம் காதல். வாழ்வின் அந்தமும் அது தான்.
- டிஸ்ரேலி

ஆணின் காதல், அவன் வாழ்க்கையில் ஒரு அங்கம். பெண்ணின் காதல் அவளின் முழு வாழ்வும்.
- பைரன்

எதிர்பார்த்து விதைப்பதை காதல், ஒரு போதும் அறுவடை செய்யாது.
- ரோஷெட்டி

உலகின் வார்த்தைகளுக்கு கட்டுப்படாத ஒரே மயக்கம் காதல் மயக்கம் தான்.
- கண்ணதாசன்

இனிமையான ஸ்வரம் கொண்ட சங்கீதம் தான் காதல்.
- பர்னஸ்

உண்மைக்காதல் அனைத்திற்கும் பரஸ்பர மதிப்பே காதல்
- பாக்கிங்ஹாம்

காதலை விலை கொடுத்து வாங்க முடியாது. தானேதான் பெற வேண்டும்.
- மில்டன்

காதல் என்பது கல்யாணத்தின் சூர்யோதயம்.
- ஷேக்ஸ்பியர்

காதல் பெண்களை உயர்த்தி வைக்கிறது. அவர்களுக்குப் பலமும் சக்தியும் அழிக்கிறது. ஆனால் ஆண்களைப் பலவீனப்படுத்தி விடுகிறது.

## திரை பிம்பங்கள்

# தமிழ்த் தேசிய சிக்கல்களை சொல்லும் குரல் - தென்றல்

## திரை ஆய்வு - தென்றல்

பல்லாண்டுகாலம் தமிழன் அனுபவித்த காவிரி நதிநீர் உரிமை இன்று பறிபோய் விட்டது. அண்டை நாடுகளுடன் நதிநீர் பகிர்வு ஒப்பந்தம் செய்துகொள்கிறது இந்தியா. ஆனால் இந்தியாவுக்குள் கர்நாடகம் தமிழ்நாட்டுக்கு தண்ணீர் தர மறுக்கிறது. தமிழ்நாடும் இந்தியா வில்தானே இருக்கிறது. அது ஆற்றுப் பிரச்சி னை அல்ல. ஒரு நாள் இந்தியா மட்டுமல்ல யாருமே எதிர்பார்க்காத புரட்சி ஒன்று அந்த மண்ணில் உருவாகும். தமிழனுக்கு காவிரி நதிநீர் கிடைக்கும்போது இந்திய அரசின் விருதைப் பெற்றுக்கொண்டால் தான் தமிழ்மக்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

- பறை இசை அனைத்து இசைகளின் தாய் இசை உடல் உழைப்பின்றி கம்பியை மட்டும் நீட்டி இசை வாசிப்பது அவர்களுக்கு சுகமானது தவிலை தூக்கி, தப்பை தூக்கி உடலை வருத்தி இசையைச் சொல்வது தமிழனின் கலை. கர்நாடக இசைக்கு அளிக்கும் முக்கியத்துவம் தாய் இசையான பறைக்கும் அளிக்கப்பட வேண்டும்.

- தமிழன் பூமியை வைத்து விவசாயம் செய்தால் பார்ப்பனர்களாகிய நீங்கள் சாமியை வைத்து விவசாயம் செய்கிறீர்களா? தமிழ்நாட்டு ஆலயங்களில் தமிழில் தான் குடமுழுக்கு நடத்த வேண்டும். இதை தடுத்தால் இதோ நாங்கள் உயிரை விடுகிறோம் என்று கோபுரத்திலிருந்து கீழே குதித்து தற்கொலை செய்யும் 3 தமிழ் இளைஞர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்ட ஆதிக்க சக்தியான காஞ்சி சங்கர மடம் மீதான சாடல்.

எட்டாண்டுகளுக்கு முன்பு ஆதிக்கச் சாதியினரின் மனோநிலையை எதிர்த்தால் கட்டைவிரல் வெட்டப்பட்டதால் தந்தைக்காய் போராடிய இளைஞன் தூக்கு மேடையில் நிற்கிறான்... தன் மரணத்திற்கு முன்பாக தன் முப்பாட்டன் காலத்தைச் சொல்ல வைக்கும் பறை இசையை முழக்கிச் சாயும்- நான் செத்தாலும் மீண்டும் பிறப்பேன்..அதுவரை என் பறையைப் பாதுகாப்பாக வைத்திருங்கடா என்று சொல்லிச் சாயும் தமிழ் இளைஞன்.

- விவசாயத்தைப் பாழ்படுத்திவிட்டு அக்கறையற்றுக் கிடக்கும் தமிழனின் அவலம். இவை எல்லாம் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறனோ, தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணியோ அல்லது தமிழ்நாட்டின் தலைமறைவு இயக்கமோ உருவாக்கியுள்ள குறும்படம் அல்ல. வைரமுத்து, அறிவுமதி, பழனிபாரதி, தாமரை, நா.முத்துக்குமார், யுகபாரதி என்ற தமிழ் உணர்வுக் கவிஞர் பட்டாளம் ஒட்டுமொத்தமாய் இறங்கி பாடல்களை எழுதியுள்ள இந்தப் படம்.... இன்று தமிழ் நாட்டின் திரையரங்குகளில் வெற்றிக் கொடி கட்டிப் பறக்கும் தென்றல் தான். மேலே நாம் எழுதியுள்ளவை. படத்தில் பகிரங்கமாகச் சொல்லப்பட்டுள்ள சில காட்சிகளின் சாரம்சமே. தமிழர் திருமணத்தை தனது "சொல்ல மறந்த கதை"யில் பழ. நெடுமாறன் மூலம் நடத்தி வைத்த தமிழ் இயக்குநர் தங்கர்பச்சானின் உருவாக்கத்தில் உருவாகியுள்ள படம்தான் தென்றல்.


கண்ணன் மீது நெஞ்சுக்குள்ளேயே காதலாகிக் கசிந்துருகி வாழ்ந்த ஆண்டாள் போன்ற ஒரு பெண்ணின் கதை இது. சமூகத்தின் மீது பெருங்கோபம் கொண்ட புரட்சி எழுத்தாளர் நலங்கிள்ளியின் மேல் பள்ளிப் பருவத்திலிருந்தே அபிமானம் கொண்ட பெண் தாமரைச் செல்வி. தீவிபத்தில் தன் விதவைத் தாயை இழந்து அநாதையாகிப் போகிறாள். பெருஞ்செல்வர் வீட்டில் அடைக்கலம் கிடைக்கிறது. அந்த வீட்டுப் பையன் தன்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுகிறான். ஆனால் தன் பிரியமுள்ள எழுத்தாளனே தன் கணவன் என்று வாதிடு கிறாள். ஆனாலும் திருமணம் நடந்து விடுமோ என்ற சூழலில் வீட்டை விட்டு வெளியேறி எழுத்தாளனைத் தேடுகிறாள். அவரோ தமிழில் குடமுழுக்குப் போராட்டதில் ஈடுபட்டதற்காக வேலூர் சிறையிலே இருக்கிறார்.

தோழியின் அறந்தாங்கி கிராமத்துக்குச் செல்கிறார். ஆனால் தோழி மலேசியா சென்றுவிட வேலை தேடி திருச்சி செல்கிறாள். தன் தோழி பரிந்துரைத்த திலகவதி அம்மாள் வெளியூர் சென்றிருக்க பாலியல் தொழில் தரகர் ஒருவரிடம் சிக்குகிறாள். பாலியல் தொழில் நடக்கும் விடுதிக்கு அழைத்துச் செல்லப்படு கிறாள் நாயகி. அங்கே ஒரு விலைமாதுவை எதிர்பார்த்து காத்திருக்கிறார் அவளது எழுத்தாளர்.. அவரைக் கண்ட சிலிர்ப்பில் தான் சொல்ல வந்ததை அவரிடம் சொல்ல இயலாத நிலையில் தன்னையே இழக்கிறார். அதற்கு அவர் பணம் கொடுக்கும்போதுதான் தன்னை விலைமாது என்று அவர் நினைத்திருக்கிறார் என்பது. திருச்சியில் அடைக்கலம் கொடுத்து நடைபாதை சகோதரியுடன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்குகிறாள். பஞ்சாலையில் வேலைக்குச் சேர்கின்றனர். அவளுக்கும் கரு உண்டாகிறது. தான் ஏமாற்றப்படவில்லை என்றும் தனது பிரியமுள்ள எழுத்தாளரின் கரு என்பதால் அதை ஒரு வரமாகவே எண்ணுவதாகவும் கூறுகிறாள். குழந்தையையும் பெற்றுப் படிக்கவைக்கிறாள். பழனியில் வாழும் அவளது குழந்தை சூழ்நிலை ஒன்றில் எழுத்தாளரிடமே வந்து சேர்கிறது. பின்னர் இறுதியில் அந்தக் குழந்தையைத் தேடி நாயகி சென்னைக்கு வருகிறாள். பின்னர் என்ன நடக்கிறது... என்பதே கதை. சமூக அக்கறை கொண்ட எழுத்தாளர் என்பதை நிருபிப்பதற்காகத்தான் நாம் முதலில் சொன்ன காட்சிகளையும் தங்கர்பச்சன் சேர்த்துள்ளார். தங்கர்பச்சானின் தமிழ்ச் சமூக உணர்வை நாம் எப்படித்தான் கொண்டாடப் போகிறோம்?

எழுத்தாளராக நடித்துள்ள பார்த்திபன், நிஜ எழுத்தாளர் ஜெயகாந்தனின் வாழ்க்கைச் சாயலைக் கொண்டிருக்கிறார். ஜெயகாந்தன் தொடக்க கால வாழ்வில் தீவிர இடதுசாரி சிந்தனையாளராக இருந்தவர். அந்த இடதுசாரி சிந்தனைகளுக்கு மாற்றாக தமிழ்த் தேசியத்தை தங்கர் நிரப்பியுள்ளார்.

தந்தை பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ், திருவள்ளுவர், பறை இசை என்று வாழ்கிற தமிழ் எழுத்தாளனாக பார்த்திபன் நடிக்கவில்லை. தமிழ்நாடு விடுதலைக்குப் போராடிய தமிழரசன் பாத்திரத்தை அரவிந்தன் படத்தில் ஏற்றிருந்த பார்த்திபன் எழுத்து ஆயுதத்தை ஏற்றிருக்கிறார் என்கிறபோது சொல்ல வேண்டி a j தோபாவேசமான உள்ளுக்குள் அன்பான எழுத்தாளர். இளம் வயது முழுக்க மகிழ்ச்சியையும் கனவையும் சுமக்கும் இளம் பெண் ஒரு கட்டத்தில் சோகத்தையே வாழ்க்கையாகச் சுமக்கிற பாத்திரமாக உமா. தன் வாழ்க்கைப் பயணம் எதை நோக்கி என்று புரியாமலே செல்கிற பாத்திரம். பறை இசைப் பாடலுக்கான வைரமுத்துவின் வரிகளும், புட்பவனம் குப்புசாமியின் ஆவேசம் பொங்கி வழியும் குரலும் லாரன்சின் நடிப்பும் வித்யாசாகரின் இசையில் தமிழனாய் பிறந்தவனைக் கட்டிப்போட்டே தீரும். பறை இசைப் பாடல் காட்சி ஒரு குறும்படம் என்று ஆனந்தவிகடன் படம் பிடித்து எழுதியுள்ளது மிகையல்ல. வயிற்றில் வளர்கிற தன் குழந்தைக்கு, அப்பாவைக் காட்ட முடியாத நிலையிலிருக்கும் உமா, பொதுக்கூட்டத்தில் பேசும் பார்த்திபனை ஒரு ஏக்கப் பார்வை பார்த்துவிட்டு, ஒலிபெருக்கி அருகே தன் நிறைமாத வயிற்றை வைத்து, கேட்டுக்கோ உங்கப்பா குரலை... இதைத்தவிர உனக்குச் சொத்து ஏதும் நான் தரலை..என்று நெகிழும் காட்சியிலும் தங்கரின் காட்சியமைப்பில் நம்மை நெகிழ வைக்கிறது. பார்த்திபன்-உமா மகனாக நடித்துள்ள சிறுவன், தங்கர்பச்சானின் மகனின் துள்ளல் விளையாட்டுகள் தூரிகையாய் இருக்கிறது. யதார்த்தமாய் நடித்துள்ளார்.

படத்தின் கதையமைப்பு, சொல்லியிருக்கும் உத்தி ஆகியவற்றில் தங்கரின்



நெறியாள்கை திறமையான தமிழ் இயக்குநர்கள் இங்கேயும் உலாவுகிறார்கள் என்கிற பெருமையை நமக்குச் சொல்லுகிறது. தமிழ்த் தேசியச் சிக்கல்களை செல்லுலாய்டில் ஆவணமாகப் பதிவு செய்துள்ள தங்கருக்கு நமது நெஞ்சம் நிறைந்த பாராட்டுகள்.

அதே நேரத்தில் கதைப் போக்கில் பட த்தில் ஆங்காங்கே வந்து போகும் நெருடல்கள், படத்தைப் பெண்ணியத்துக்கு எதிராக கொண்டு போய்ச் சேர்க்கிற அபாயம் என்றெல்லாம் இருக்கிறது. அதையும் தங்கர் கவனத்தில் கொள்ளட்டும். புரட்சித் தமிழன் சத்யராசை வைத்து ஒன்பது ரூபாய் நோட்டு படத்தை தொடங்கியிருக்கும் தங்கர் தொடர்ந்து தமிழரின் குரலாய் வெள்ளித் திரையில் வலம் வர வாழ்த்துகிறோம்.



# வாசகர் இதயம்

அன்பின தமிழ் அலையே!

நாள்தோறும் வசந்தம் வீசி
மனிதனை ஊக்கப்படுத்தும் அலையே
தூங்கிக் கொண்டிருக்கும் மனிதனை
துயில் எழுப்பி உற்சாகமூட்டும் அலையே
கலை விகடம், அரசியல், வீரவரலாறு, சிறுகதை
ஆக்கங்களால் மக்களைக் கவரும் அலையே
இதயம் நிறைந்த இன்பமுடன்
இனிது நீ வருக வளர்க.

எஸ்.என். கவிச்சுரவி.

**தமிழ் பேசும் மக்களின் உணர்வலையான தமிழ் அலையே!**

ஓராண்டு அகவை கொண்டாட இருக்கும் உனக்கு இவரின் வாழ்த்துக்கள் முதலில் மேலும் வெற்றிகரமாய் வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கும் உன்பணி என்றும் எமக்குத் தேவை:, தமிழுக்குத் தேவை.

வார இதழான தமிழ் அலையின் ஒவ்வொரு பக்கமும் சுவை, சுவாரஸ்யம் நிறைந்தது. ஆனால் எனக்கு ஒரு சின்ன ஆதங்கம் பெண்கள் பகுதியான அரிவையர் அலை பகுதியில் மாற்றங்கள் தேவை. காலத்திற்கேற்ற மாற்றம் தேவை.

பெண்களுக்கு விழிப்புணர்வூட்டக்கூடிய ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கொண்ட அரிவைய ர் அலை வெகுவிரைவில் எதிர்பார்க்கலாமென நம்பிக்கையுடன் விடைபெறும் இவள்.

வே.தமருகா றொபட்
கல்லடி வேலூர்.

**வாழிய நீ தமிழ் அலையே!**

தமிழ் அலையை வாசித்தும், நேசித்தும் வருகிறேன். தமிழ் அலையின் பொருட்சுவை, சொற்சுவை, கவிச்சுவை அழகு, காவியச்சுவை, தமிழ்ச் சுவை, தனியாத சோக வீரச் சுவை கண்டு வாழிய நீ தமிழ் அலையே என வாழ்த்தும்.

இரத்தினம்-தவராஜா.

**அன்பின் தமிழ் அலையே வணக்கம்.**

நான்கு திசைகளிலும் அலைபாயும் அன்பான தமிழ் அலையே! உனது வரவு கண்டு மகிழும் வாசகர்களில் நானும் ஒருத்தி. நீ தரும் அம்சங்களில் சிறுவர் சிகரம், அரிவையர் அலை, பகிரங்க மடல், காத்திரன் பதில் ஆகியவை என்னை மிகவும் கவர்ந்தவை. மேலும் இந்தியாவும் ஈழத்தமிழரும் என்ற தொடரை வாசிக்க உள்ளமெல்லாம் புல்லரித்தது. கவிதைக்களமோ உடலெங்கும் பரவி சிலிர்க்க வைக்கிறது. எமக்கு அறிவூட்டும், பாடத்தைப்புகட்டும் தமிழலையே நீடூழி வாழ்க

எஸ்.என்.சாந்தி, மணற்சேனை
சங்கமன் கண்டி

**அன்பின் அபிமான தமிழ் அலையே! வணக்கம்.**

உனது வாராந்த தொடரை நான் படித்து வருகிறேன். அதிலும் தேடலும் பகிர்வும், புல்லுமலை முதல் புணானை வரை, மாவீரர் வரலாறு திரைவிம்பம் என்பவற்றை முதலில் படிப்பேன். அவை என்னை மிகவும் கவர்ந்தவை. அறியாத பல வரலாற்றுப் பாடங்களை அறிந்து கொள்ளக் கூடியவை. இது போல இன்னும் பல சுவையுடன் கூடிய அறிவுக் களஞ்சியமாய் வண்ண மலராக வாரமலர் வலம் வர வாழ்த்துகிறேன்.

கா.சோதி பலாச்சோலை.





# பால் குடிக்காத பூனை

விஜயநகரத்தில் எலி, பெருச்சாளிகளின் தொல்லை தாங்காமல் பொதுமக்கள் மிகவும் துன்புற்றார்கள் அரசரிடம் சென்று முறையிட்டார்கள்.

குடிமக்களின் தொல்லைகளை நீக்குவதற்காக அரசர் பாரசீக நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான பூனைக்குட்டிகளை வரவழைத்து, வீட்டுக்கு ஒரு பூனையைக் கொடுத்து, அதற்குப் பால் ஊற்றி வளர்ப்பதற்காக, வீட்டுக்கு ஒருபசுவும் அளித்தார்.

எல்லோருடைய வீட்டிலும் பசுவின் பாலைக் குடித்து பூனைகளை வளர்த்து, எலிகளைத் துரத்திப் பிடித்து அவற்றை அழித்துக் கொண்டிருந்தன. ஆனால், மக்கள் எலும்பும் தோலுமாக வாழ்ந்தனர்.

தெனாலிராமனோ பசுவின் பாலைக் கறந்து, தானும் தன் மனைவி மக்களும் குடித்து மகிழ்ந்து, பூனையைப் பட்டினியாகப் போட்டான்.



சில மாதங்களுக்குப் பிறகு, அரசர் தாம் அளித்த பூனைகளைப் பார்வையிட எண்ணி, ஒரு குறிப்பிட்ட நாளில், அரண்மனை வளாகத்துக்குப் பூனைகளைக் கொண்டுவருமாறு உத்தரவிட்டார்.

அவ்வாறே ஒவ்வொருவரும் தாங்கள் வளர்த்த பூனைகளைக் கொண்டு வந்தனர். பூனைகள் எல்லாம் கொழு கொழு என்று வளர்ந்து இருந்தன. ஆனால், அதை வளர்த்தவர்களோ எலும்பும் தோலுமாகக் காணப்பட்டனர்.

அரசர் ஒவ்வொருவருடைய பூனையையும் பார்த்துக்கொண்டு வரும் போது, மெலிந்த பூனை ஒன்றைக் கண்டு, ''இது யார் வளர்த்த பூனை?'' என்று கேட்டார்.

அருகில் நின்று கொண்டிருந்த தெனாலிராமன் ''நான் வளர்த்த பூனை!'' என்று கூறினான்.

அரசர் கோபமுற்று, உன்னுடைய பூனைக்குப் பால் கொடுக்காமல் ஏன் பட்டினியாகப் போட்டிருக்கிறாய்?'' என்று கேட்டார்.

''அரசே என் பூனை பாலைக் கண்டாலே குடிக்காமல் ஓட்டம் பிடிக்கிறது, அதற்கு நான் என்ன செய்வேன்?'' என்றான் தெனாலிராமன்.

அதைக்கேட்ட அரசர் வியப்படைந்து, ''பால் குடிக்காத பூனை எங்கேயாவது உண்டா? நீ கூறுவது உண்மையானால், உனக்கு நூறு பொன் பரிசு அளிப்பேன்'' என்றார்.

பாலைக் கொண்டு வரச் செய்து, அந்தப் பூனையின் முன்னே வைக்கும்படி கட்டளையிட்டார் அரசர்.

பாலைக் கண்டதும் பூனை ஓட்டம் எடுத்தது.

காவலர்கள் அதைப் பிடித்து வந்து பார்த்தபோது, அதன் வாய் வெந்து புண்ணாகி இருப்பது தெரிந்தது.

''அடே சுயநலமி, பாலைச் சுடவைத்துப் பூனைக்கு வைத்தாயா? அதுதான் சூடு கண்ட பூனை பாலைக் கண்டதும் ஓட்டம் பிடிக்கிறது. அதன் வாய் வெந்து புண்ணாகி இருப்பதும் தெரிகிறது'' என அரசர் கோபத்தோடு கூறினார்.

''மன்னர் பெருமானே! என்னை மன்னிப்பீர்களாக! பூனைக்குப் பால் வார்த்து, வளர்ப்பதைக் காட்டிலும், குடிமக்களுக்குப் பாலும் உணவும் கிடைப்பதற்கு வழி செய்வதே அரசரின் கடமை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றான் தெனாலிராமன்.

தெனாலிராமனின் பரந்த மனப்பான்மையைப் பாராட்டி, வாக்களித்தபடி நூறு பொன் பரிசையும் அளித்தார் அரசர்.

உடனே பூனைகளை எல்லாம் காட்டிற்குள் விரட்டி விடுமாறு கட்டளையிட்டார்.

## நாளாந்தம் பழக்கத்தில் கொண்டு வாருங்கள்.

01. ஊக்கத்துடனும் துணிவுடனும் எந்த ஒரு காரியத்தையும் தொடங்குதல் வேண்டும்
02. கற்பனைத் திறமையுடன் எதையும் பார்க்கும் தன்மை.
03. ஆழ்ந்து சிந்தித்து வேலைகளை ஒழுங்குபடுத்துதல்.
04. சிந்தனையைச் சிதறிவிடாது ஒருமுகப்படுத்திக் கவனமாகச் செயல்பட வேண்டும்.
05. நேரத்தையும், பணத்தையும் திட்டமிட்டுச் செலவு செய்தல்.
06. எப்போதும் சுறு சுறுப்புடனும் ஊக்கத்துடனும் இருந்தல்

ப. ஸர்மினி
முனைக்காடு.

# தெரிந்து கொள்ளுங்கள்

01. ஜிப்ரால்டர் ஜலசந்தி எந்த இரண்டு கண்டங்களைப் பிரிக்கிறது?
ஐரோப்பா- ஆபிரிக்கா

02. ஐ.நா.சபையின் சர்வதேச விவசாய அபிவிருத்தி அமைப்பு எந்த ஆண்டு முதல் செயல் படத்தொடங்கியது?
1977ம் ஆண்டு முதல்

03. இந்தியாவில் பாயும் நதிகளில் அதிகமான நீர்ப்பெருக்கு கொண்ட நதி எது?
பிரம்மபுத்திரா

04. மின் அஞ்சல் முறை இந்தியாவில் எந்த ஆண்டுஅறிமுகம் செய்யப்பட்டது?
2001ம் ஆண்டு

05. எந்த மன்னரின் ஆட்சிக் காலத்தில் பஞ்ச தந்திரக் கதைகள் எழுதப்பட்டன?
விக்கிரமாதித்தன் ஆட்சிக் காலத்தில்

06. நோபல் பரிசுக்கு மாற்றாக கூறப்படும் வேறு பரிசு?
ரைட் லைவ்லிஹுட் விருது


07. எந்தக் கருவி மூலம்வெப்பக் கதிர் வீச்சை அளவிடுகிறார்கள்?
ரேடியோ மைக்ரோ மீட்டர்

08. தாராப்பூர் அணுமின்நிலையம் எப்போது தொடங்கப்பட்டது?
1969ம் ஆண்டு

09. டாஸ்மேனியா தீவு எந்தக் கடலில் அமைந்துள்ளது?
பசுபிக் கடலில்

10. சோஷியல் காண்ராக்ட் (SocialContract) என்ற நூலை எழுதியவர் யார் தெரியுமா?
ரூசோ

முனையூர் யோகராசா



யோ. ரெனிஸ்காந்தன்
தரம் 8M
திருப்பழுகாமம்

## விடுகதைகளும் விடைகளும்

01. தொட்டாச்சினிங்கிக்கு 90கால் அது என்ன?

02. ஓடிவரும் மனிதன் ஒளியில் தெரிவான் அவன்யார்?

03. இடி இடிக்கும் போது மின்னல் மின்னியது அது என்ன?

04. வெள்ளை வயலில் கறுத்த நெல் விதைத்து வாயால் பொறுக்குதல் அது என்ன?

05. தங்கக் கட்டி தவறி விழுந்தால் போச்சி அது என்ன?

06. இலையுண்டு கிளை இல்லை காய் உண்டு விதை இல்லை பட்டை உண்டு கட்டை இல்லை கன்று உண்டு பசு இல்லை அது என்ன?

07. இளமையில் பச்சை குமரியில் சிவப்பு கிழவியில் கறுப்பு பருப்பில் ஒரு வெடிப்பு அது என்ன?

08. வாசம் இல்லாத பூ வாடாத பூ அது என்ன?

09. பச்சை நிறத்தழகி பவள வாயழகி சொன்ன கதையை திருப்பிச் சொல்வாள் அவள் யார்?

### விடைகள்

01. மரவட்டை
02. நிழல்
03. பட்டாசு
04. புத்தகத்தில் உள்ள எழுத்தை வாசித்தல்
05. முட்டை
06. வாழை
07. ஈச்சை
08. சேவல்பூ
09. கிளி

அழகையா உதயலிங்கம்
இருட்டுச்சோலை மடு

## சிட்டுக் குருவியே



சிட்டுக் குருவி ஓடி வா
சிந்து பலதைப் பாடி வா
ஓடிக் கொண்டு என்னிலே
உறவு கொள்ளப் பறந்து வா



உண்டு பழங்கள் என்னிடம்
உண்ணத்தானே ஓடி வா
சொண்டு வைத்துப் பருகிட
சுவையாய் பாலும்
வைத்துள்ளேன்.



பஞ்சு இறகைக் கொண்டு வா
பார்த்து நானும் மகிழ்ந்திட
கொஞ்சி மகிழ வேண்டுமே
குருவி நீயும் விரைந்துவா



தம்பி உன்னை அழைக்கின்றான்
தயவாய்ப் பறந்து வந்திடு
விம்மித் தம்பி அழுகின்றான்
விரைந்து வாயென் குருவியே

செல்வி அகிலேஸ்வரன்- சுகேசனா
தரம் 3J
மட்/ கோட்டமுனை க.வி

## கண்

1) மனித கண்ணில் 6 கட்தசைகள் இணைந்துள்ளன.
2) மனித கண்ணின் சுவர் 3 படைகளினால் ஆனது.
3) கண்ணின் விட்டம் அண்ணளவாக 2.5 சென்ரி மீற்றர் ஆகும்.
4) கண்ணின் உச்ச விட்டம் 8 மில்லி மீற்றர் ஆகும்.
5) கண்ணின் இழிவு விட்டம் 1.5 சென்ரி மீற்றர் ஆகும்.
6) கண்ணின் ஒளி, உறுத்துணர்ச்சி, கலங்கள் ஆன படை விழித் திரையில் காணப்படுகிறது.
7) கண்ணில் ஏற்படும் நோய்கள் சில- நீள் பார்வைக் குறைபாடு, நிறக்குருடு, குறும்பார்வைக் குறைபாடு, பீற்றோவின் புள்ளி என்பதாகும்.



# 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான வினாக்களும் விடைகளும்

## மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக?

01. 12.06 < 12.08 இதைக் காட்டும் சரியான விடை
(12.06 = A, 12.08 = B)
I. A பெரிது Bயிலும்
II. A சிறிது Bயிலும்
III. A, B சமன்


02.
```
   4 [A] 7  1
- [B] 8  6 [C]
   1  6  0  2
```
A,B,C பெட்டிக்குள் வரவேண்டிய இலக்கங்கள் முறையே?

I. 4, 3, 9 II. 4, 2, 9 III. 3, 3, 9

03. $\frac{3}{10}$ ஐ தசம எண்ணாக எழுதினால்


I. 0.03 II. 00.3 III. 0.3

04. உரு A



உரு Aயில் காட்டப்பட்டுள்ள 1,2,3,4,5,6,7,8,9 என எழுதப்பட்டுள்ள அட்டைத் துண்டுகளைப் பயன்படுத்தி ஒரு பெரிய சதுரம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு உரு Bயை செய்வதற்கு உரு Aயில் இருந்து எவ் எவ் அட்டைகளைப் பயன்படுத்த வேண்டும்.

உரு B



I. 1, 5, 9, 7, 6
II. 1, 5, 6, 7, 8
III. 1, 5, 6, 2, 3

05. டிஜிற்றல் கடிகாரம் பற்றி கூறும்போது பொருத்தமில்லாத விடை
I. நியமக்கடிகாரம்
II. இலக்கக் கடிகாரம்
III. 12மணித்தியாலக் கடிகாரம்
IV. 24மணித்தியாலக் கடிகாரம்

*. தரம் 5ச் சேர்ந்த நான்கு மாணவர்கள் தமிழ் பாடத்தில் பெற்ற புள்ளிகள் கீழே

சுதன்- 80
கமலா- 50
நிர்மலா- 40
விமலன்- 90

இதன் அடிப்படையில் ''நாதன்'' தனது நண்பனுக்கு கூறிய தகவல்கள் கீழே

A- சுதனின் புள்ளிகள் கமலாவின் புள்ளிகளை விட 32 அதிகம்.
B- நிர்மலாவின் புள்ளிகள் சுதனின் புள்ளிகளில் $^1/_2$ பங்கு
C- விமலனின் புள்ளிகள் கமலாவின் புள்ளிகளின் இரு மடங்கும் 10 அதிகமும்.
D- நால்வரின் புள்ளிகளின் மொத்தம் 260

06. மேலே உள்ளவற்றில் சரியான தகவல்கள்
I. A, B II. B, D III. B, C

07. பிழையான தகவல்கள்?
I. A,B II. A, C III. C, D

08. விமலனின் புள்ளிகளுக்குச் சமனான புள்ளிகள் பெற்ற இருவர்?
I. சுதன், கமலா II கமலா, நிர்மலா III. சுதன், நிர்மலா

09. விடுபட்ட பெட்டியில் சரியான இலக்கம் யாது?

[4|2|3] — [4|3|2]
[3|2|4] [3|4|2] [2|3|4] [ ? ]

I. 243 II. 433 III. 237

*. சுகத்திலகரத்ன 4வருடங்களில் 100M ஓட்டப்போட்டியில் எடுத்த நேரங்கள் கீழே
2000- 13 செக்கன்கள்
2001- 12 செக்கன்கள்
2002- 11 செக்கன்கள்
2003- 10 செக்கன்கள்

10. வருடா வருடம் அவருடைய ஓட்ட வேகம்?
I. குறைந்துள்ளது II. கூடியுள்ளது III. கூறமுடியாது

11. 2000ஐ விட 2003ல் எவ்வளவு நேரத்திற்கு முன்னர் ஓடி முடிக்கப்பட்டுள்ளது?
I. 4 செக்கன் II. 2 செக்கன் III. 3 செக்கன்

12. 4ஆண்டுகளின் செக்கன்களை கூட்டும் போது ஒரு நிமிடமாவதற்கு இன்னும் எத்தனை செக்கன்கள் வேண்டும்.
I. 14 II. 24 III. 4


13. வீட்டு ஈ பற்றி கூறும் போது மிகச் சரியான விடை?
I. ஈகடித்தல் II. ஈகுத்துதல் III. மொய்த்தல்

14. இது நேராக முன் செல்லாது.
பக்கவாட்டிலே நகர்ந்து செல்லும் அது.
I. அட்டை II. முதலை III. நண்டு

15. அரைப்புள்ளி அல்லது தொடரிசைக் குறி குறிப்பது.

I. : II. ; III. ,


16. இப் படம் குறிப்பது.



I. கொக்குப் பட்டம்
II. வால்பட்டம்
III. சீனப் பட்டம்

17. கொடிவகைகள் மரங்களைச் சுற்றி வளரும் போது?
I. இடஞ் சுழியாக வளரும்
II. வலஞ் சுழியாக வளரும்
III. நேராக வளரும்


18. இச்சந்திரன் குறிப்பது?



I. வளர்பிறை
II. தேய்பிறை
III. பௌர்ணமி

19. ஒரு நடுவர் எப்போதும்.
I. ஒரு ஆணாக இருத்தல் வேண்டும்.
II. பக்கச் சார்பு தன்மை உடையவராக இருத்தல் வேண்டும்.
III. நடுநிலையாளராக இருத்தல் வேண்டும்.

20.




ஒவ்வொரு சிறிய சதுரத்தினதும் ஒரு பக்கத்தின் நீளம் 1CM ஆகும். இந்தப்படத்தில் நிழற்றிய பகுதியின் பரப்பு எத்தனை சதுர சென்ரி மீற்றர் ஆகும்.
I. $12CM^2$ II. $14CM^2$ III. $16CM^2$

21. அந்திவானின் ராணி என அழைக்கப்படும் கிரகம்?
I. வெள்ளிக்கிரகம் II. சனிக்கிரகம் III. செவ்வாய்க்கிரகம்

22. மனித உடலின் சராசரி உடல் வெப்பநிலை?
I. $36^0C$ II. $37^0C$ III. $38^0C$

23. கழுவிய இரத்தினக்கல் இருக்கும் இடப்பகுதி எவ்வாறு அழைக்கப்படும்.
I. இல்லம் II. ரோளை III. தாம்பு

24. முலையூட்டிகளுக்குரிய சிறப்பியல்பு.
I. உரோமம் இருப்பது.
II. நான்கு கால்கள் இருப்பது.
III. இறகுகள் இருப்பது.




### மேலிருந்து கீழ்
01. தந்தையை இப்படியும் அழைப்பர்
02. கறுப்பு நிறப்பறவை

### இடமிருந்து வலம்
01. மூத்த சகோதரி
02. பாடசாலையில் படிப்பது

25. இக் கட்டடங்களை நிரப்பக் கூடிய சரியான சொற்கள்?
I. தாத்தா, காகம், அக்கா, படம்
II. அப்பா, அக்கா, காகம், பாடம்
III. அம்மா, அண்ணா, காகம், பாடம்

*. கோடிட்ட இடங்களுக்கு பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து வாக்கியங்களைப் பூர்த்தி செய்க?
(சிற்பி, நிருபர், கவிஞன், ஓவியன், விமானி)

26. விமானத்தைச் செலுத்துபவனை..............என்று அழைக்கின்றோம்.

27. படங்கள் வரைபவனை............என்று அழைக்கின்றோம்.

28. பாடல்களை இயற்றுபவை...............என்று அழைக்கின்றோம்.

29. செய்திகளைத் திரட்டித் தருபவரை................என்று அழைக்கின்றோம்.

30. சிலை செய்பவரை...................என்று அழைக்கின்றோம்.

தொடரும்.......

## விடைகள்

| | |
|---|---|
| 01. II | 02. II |
| 03. III | 04. II |
| 05. III | 06. II |
| 07. II | 08. II |
| 09. I | 10. II |
| 11. III | 12. I |
| 13. II | 14. III |
| 15. II | 16. III |
| 17. II | 18. I |
| 19. III | 20. II |
| 21. I | 22. II |
| 23. III | 24. I |
| 25. II | 26. விமானி |
| 27. ஓவியன் | 28. கவிஞன் |
| 29. நிருபர் | 30. சிற்பி |

*ச. ஜெயாகரன்*
*பழுகாமம்.*

## சென்ற வாரத் தொடர்ச்சி......

11. மூலதன வளங்கள் ஏராளம்.
12. தொழில் நுட்ப அறிவு உயர் மட்டத்தில் காணப்படும்.
13. வைத்தியர் ஒருவருக்கான நோயாளரின் எண்ணிக்கை குறைவாகும். ஜேர்மனி 333.

***. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பண்புகள்.**

01. ஆள் வீத தேசிய உற்பத்தியானது தாழ்ந்த பெறுமதியினைக் கொண்டது.
உதாரணம் :- நேபாளம் 180 டொலர்கள் (1995).
02. பௌதீகவாழ்க்கைச் சுட்டியானது தாழ்ந்த மட்டத்தில் காணப்படல்.(பங்காள தேசம்) 35(1995).
03. மனித அபிவிருத்திச் சுட்டியானது தாழ்ந்த மட்டத்தில் காணப்படுதல். பங்காளதேசம் 356-(1993).
04. சனத்தொகை அதிகரிப்பு வேகம் அதிகமாகும். பங்காள தேசம் 3. 56மூ -(1993) சவூதி அரேபியா 4.4மூ -(1993)
05. பிறப்பின் போது வாழ்க்கை எதிர்பார்ப்பு குறைவாகும்.
06. தாழ்ந்த எழுத்து வாசிப்பு திறன்.
07. சிசு மரண வீதம் அதிகமாகும்.
08. தனிநபரது கலோரி நகர்வு குறைவாகும்.
09. நகர்புறச் சனத்தொகை குறைவாகும்.
10. உள்நாட்டு உற்பத்தியில் கைத் தொழிலின் பங்களிப்பு தாழ்ந்த மட்டத்தில் காணப்படும்.
11. மூலதன வளங்கள் பற்றாக்குறையானது.
12. தொழில்நுட்ப அறிவு குறைந்த மட்டத்தில் காணப்படல்.
13. வைத்தியர் ஒருவருக்கான நோயாளரின் எண்ணிக்கை அதிகமாகும்.

***. அபிவிருத்தியடைந்த நாடாக விளங்குவதற்கு அந்நாட்டின் பொருளாதாரம் மாத்திரமன்றி சமூக நலன்கள் சார்ந்த நடவடிக்கைகளும் உயர் மட்டத்தில் காணப்படல் வேண்டும்.**

8. அபிவிருத்தி சார்ந்த பிரச்சினைகள்.

***. தேசிய உற்பத்தியில் பெரும் முதல் விளைவுப் பொருட்களாக இருத்தல், சனத்தொகை விரைவாக அதிகரித்தல், வேலை வாய்ப்பு இன்மை, பராபரிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படல், மூலதனப் பற்றாக்குறை, தொழில்நுட்ப அறிவு குறைவு, குறைந்த வருமான மட்டம், சுகாதாரம், கல்வி வசதிகள் குறைவு என்பன அத்தகைய பிரச்சினைகளாகும்.**

***. அபிவிருத்திச் செயல் முறையின் போது இலங்கை மூலம் கொடுக்கும் பிரச்சினைகளும், அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பின்பற்றப்படும் நடவடிக்கைகளும்.**

# ஊமைக் காதல்

அருண் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன் அவனுடைய அப்பா ஒரு நோயாளி. அம்மா வயசாளி.

இவனுக்கு இரண்டு தங்கைகளும் ஒரு ஊனமுற்ற தம்பியும் இருக்கிறார்கள். அருண் வறுமையில் வாடினாலும் கல்வியை விட்டுக் கொடுத்தவன் அல்ல. சாதாரண தரத்தில் திறமைச் சித்தி பெற்று, உயர்தர விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்றுக் கொண்டிருந்தான். சகோதரர்களும் சரித்திரம் படைக்க வந்தவர்கள் போன்று கல்வியில் சிறந்து விளங்கினார்கள்.

அருண் படித்துக்கொண்டிருக்கும் போதே அப்பா இறந்து விட்டார். குடும்பப் பாரம் முழுவதும் இவன் தலையில் இறங்கியது. ஆனால் என்ன தான் நடந்தாலும் எனது கல்வியைத் தொடர்வேன் என்று தன் தாயிடம் வாக்குக் கொடுத்துவிட்டான் அருண்.

பாடநேரங்கள் தவிர ஏனைய நேரங்களில் கூலி வேலை செய்து படிப்பிற்காகவும் மற்றத் தேவைகளுக்காகவும் உழைத்தான். நாளடைவில் தனது பாடசாலையில் அருண் ஒரு மாணவ தலைவனாகவும் வேறு பல துறைகளில் சிறந்தவனாகவும் ஆசிரியர்களின் மதிப்பையும், பாராட்டையும் பெற்று விளங்கினான்.

இந்த வேளையில் தான் அருணை ஒரு பெண் காதலிக்க ஆரம்பித்தாள். அவள் பெயர் சுஜி. இவள் சாதாரண தரத்தில் அருணின் தங்கையுடன் தான் படித்து வந்தாள். இவள் பெரிய பணக்கார படித்த வர்க்கத்தைச் சேர்ந்தவள். சில நேரங்களில் அவன் தங்கையுடன் வீட்டிற்கு வருவாள். அவளிடம் அருண் கபடம் இல்லாமல் நன்றாகப் பழகுவான். ஆனால் சுஜியோ அருணை மனசாரக் காதலித்தாள். தனது வாழ்கை முழுவதையும் அருணுக்கே அர்ப்பணிக்கக்காத்திருந்தாள்.



பி. கலிங்கன் எருவில்.

இந்த விஷயம் அருணுக்குத் தெரியாது. ஒரு நாள் பாடசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. அவ்வேளையில் சகல மாணவர்களும் சகசமாகப் பழகினார்கள். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய சுஜி அருணை தனிமையில் அழைத்தாள். ஒன்றுமறியாத அருண் சுஜியின் பின்னே சென்றான். சுஜி தன் காதலை அருணிடம் கூறினாள். அவன் திடுக்குற்றான். ''சுஜி நீயா.....! இப்படி! நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கல்ல ஏன் இப்படித் திடீரென்று மாறிவிட்டாய் சுஜி: வாழ்க்கை என்பது ஆயிரம் காலத்துப் பயிர். அது திடீரென்று அமைவதில்லை. அதிலும் நீ பெரிய இடத்துப் பெண். அந்தஸ்தில் உயர்ந்தவள். என் தாய் தந்தை சகோதரர்கள் இவங்க கனவுகளை நினைத்துப் பார். நான் ஒரு ஏழை என்னை நம்பி நான்கு பேர் இருக்கிறார்கள். எனக்கு காதல் எல்லாம் பிடிக்காது. இத மனதில வச்சுத்தானா என்கூட பழகினாய்?. சொல் சுஜி!.... இந்தா பாரு சுஜி நீ நல்ல அழகான படித்த பண்புள்ள பிள்ளை உனக்கும் எனக்கும் ஏணி வைச்சாக்கூட எட்டாது அத்துடன் என்ர இலட்சியத்தை நான் நிறைவேற்ற வேண்டும். நீ சின்னப்பிள்ளை தயவு செய்து நான் சொல்வதைக் கேள்.'' என்று அருண் தனது மனதில் உள்ளவற்றைச் சொல்லித் தீர்த்தான்.

அத்தனைக்கும் சுஜி பொறுமையுடன் நின்ற பின் ''அருண் பேசி முடித்து விட்டாயா?'' என்றுகேட்டு விட்டு அழுகையுடன் சென்றாள்.

போனவள் என்ன நினைத்தாளோ தெரியாது. பாடசாலையை விட்டு விலகிக் கொண்டாள். அருண் தொடர்ந்து படித்து பல்கலைக்கழகழகத்திற்கும் தெரிவானான்.

தான் ஒரு நிலைக்கு வந்த பின் சுஜியைச் சந்தித்து தன் முடிவைச் சொல்ல வேண்டும் என்று எண்ணியிருந்தான் ஏனோ அவனுக்கு அதை முன்னதாகவே சொல்லிவிட துணிவு வரவில்லை. ''வாழ்ந்தால் உங்களோடுதான் வாழ்வேன்'' என்று சுஜி சொன்னவள் தானேஎனக்காக அவள் எனது இலட்சியம் முடியும்வரைக் காத்திருப்பாள் என்று அருண் நம்பியிருந்தான். காலம் வேகமாக ஓடியது மருத்துவராக பட்டம் பெற்ற கையோடு அவளைக்காண ஓடி வந்தான். ஓடிவந்தும் என்ன பயன்? அவள் இன்னொருத்தனின் மனைவியாக அங்கே நின்றாள்.

அப்போது தான் அருணுக்கு தனது ஊமை நெஞ்சை வெளிப்படையாகக் காட்ட முடியாமற் போன தவறு புரிந்தது.

# எங்கள் எம்.பி இளையதம்பி

நகைச்சுவை முற்றம்

அமிர்தகழியான்

எங்கள் கிராமம் ஒரு சின்னஞ்சிறிய கிராமம். ஒழுங்கான பாதைகள் இல்லை பள்ளிக்கூடம் இல்லை. எந்தவிதமான சுகாதார வசதிகளும் இல்லவே இல்லை.

தேர்தல் காலங்களில் வேட்பாளர்கள் வந்து கிறவல் பாதையில் சதுக்புதுக் இடங்களில் கால் வைத்த தடங்களை அழிந்துப் போகாமல் எங்கள் மக்கள் ஞாபகச் சின்னமாக பாதுகாப்பாக மூடி வைத்திருக்கிறார்கள்.

பல வகையிலும் தாழ்த்தப்பட்ட எங்கள் கிராமத்தில் உயர்ந்து நிற்கும் ஒரே ஒரு மனிதன் இளையதம்பி மாத்திரந்தான்.

வாட்டசாட்டமான தோற்றம். பெல்ஸ் 'செட்டுப்போட்டு எந்நேரமும் மிடுக்காக நடப்பார்.

'கோல்ட்லீவ்' சிகரட் பெட்டியும் ஒரு லைட்ரரும் அவர் கைக்குள் அகப்பட்டு மூச்சுத் திணறும். சிகரட் பெட்டிக்குள் நீங்கள் நினைப்பது போல சிகரெட் எதுவும் கிடையாது. கோறாபீடிகள் தேவையான அளவிற்கு நிறைந்து போயிருக்கும்.

வாய் புளித்து வந்தால் பெட்டியைத் திறந்து பீடியை எடுத்து லைற்றரில் மூட்டுவார். இதை யாரவது பார்த்து விடுவார்களே என்று அவர் ஒருநாளும் வெட்கப்பட மாட்டார்.

கால்களில் பாட்டாச் சிலுப்பர். அணிந்திருப்பார். இடது காலில் கறுப்புக் கலரிலும், வலது காலில் சிவப்பு கலரிலுமாக அந்தச் சிலுப்பர்கள் காட்சி தரும். ஏன் இப்படி என்று கேட்டால் இதுதான் இன்றையப் பெஷன். ஆனால் சிறிலங்காவிற்கு இன்னும் அறிமுகமாகவில்லை. என்பார். அதிகம் படிக்காதவர்.

சின்னவயதில் வீட்டாரால் துரத்தப்பட்ட இளையதம்பி ஊரோடித்திரிந்து நீண்ட காலத்தின் பின்புதான் எங்கள் கிராமத்திற்கு வந்து சேர்ந்திருந்தார்.

"போன இடத்தில் எங்கையாவது தொழிலைத்தேடி கலியாணத்தையும் முடித்துக் கொண்டு வாழ்ந்திருக்கலாமே என்று கேட்டால்,

"எந்த வழியுமில்லாத இந்த ஊரைப்போல ஒரு சோக்கான ஊர் எங்கும் கிடையாது. என்னால் இந்த ஊரை எங்குதான் இருந்தாலும் மறக்கவே முடியாது." என்று சொல்லிச் சமாளித்துக் கொள்வார். எல்லோருடனும் மிக அன்னியோன்னியமாகப் பேசுவார். பழகுவார்.

ஒரு நாள் கிராமத்திலுள்ள ஒரு பத்துப்பதினைந்து கிழவிகளை சோடித்தெடுத்து "உங்களுக்கெல்லாம் மாசா மாசம் சம்பளம் வாங்கித் தருகிறேன் என்னோடு ரவுனுக்கு வருகிறீர்களா?" என்றார்.

தண்ணீர் வெந்நீர் இல்லாமல் கிழவிகளெல்லாம் தவியாய்த் தவிக்க, மாட்டு வண்டிலொன்றில் ஏற்றிக் கொண்டு பட்டணம் போயிறங்கி, அரசாங் மேலதிகாரிகளைச் சந்தித்து அழுதார். இவரைப் பார்த்து கிழவிகளும் ஒப்பாரி வைக்கத் தொடங்கி விட்டனர்.

மேலதிகாரி ஒருவர் பாவத்திற்கு இரங்கி, "சரி நீங்கள் போங்கள். நான் உரியவர்களைச் சந்தித்து நடவடிக்கை எடுக்கிறேன்" என்றார். எல்லோரும் வெறும் குடலோடு கிராமத்திற்குத் திரும்பினார்கள்.

ஆனாலும் அதிகாரிகளிடம் "ஐயா, கிழவிகளெல்லாம் சாப்பிட்டு மூண்டு நாளாச்சு. பாணாவது வாங்கிக் கொடுக்க பணம் தாருங்கள். அவர்களுக்கு வரும் முதல் பிச்சைக் காசை வாங்கி உங்களுக்குத் திருப்பித் தருகிறேன்." என்று கால் தொட்டுக்கும்பிட்டு வாங்கிய பணத்தில் இளையதம்பி சாரயம் குடித்து சாப்பிட்ட சங்கதி கிழவிமார்களுக்கு அறவே தெரியாது.

ஓரிரு மாதங்களில் கொண்டு சென்ற பதினைந்து கிழவிகளில் ஒருத்திக்கு பிச்சைச்சம்பளம் கிடைக்க ஏற்பாடாயிற்று.

இந்த விடயத்தை அறிந்ததும் மேலும் பல கிழவிகளும், கிழவர்களும் இளையதம்பியைச் சுற்றி அலையத் தொடங்கி விட்டனர். என்னதான் இருந்தாலும் ஒரு எம்.பி யால் முடியாத காரியத்தை இளையதம்பி தனித்துச் செய்து விட்டானே! என்று கிராமத்துக்குள் இவருக்கு நல்ல மதிப்பு ஏற்பட்டது. இதற்குப் பிறகுதான் நாங்கள் எல்லோரும் இளையதம்பியை எம்.பி என்று அழைக்கத் தொடங்கினோம். இளையதம்பியருக்கு இனியில்லை என்ற சந்தோஷம்.

இருந்தாற்போல் ஒரு நாள் இளையதம்பி சொன்னார். "இந்தக்கிராமம் எனது கிராமம். இங்கு உள்ள மக்களின் வாக்குகளை வேட்டையாட அபேட்சகர்களெல்லாம் வந்து ஆசை வார்த்தைகளைச் சொல்வார்கள். பிறகு இந்தப் பக்கமே தலைவைத்துப் படுக்க மாட்டார்கள். ஆகவே நமது கிராமத்தின் தேவைகளை நாம்தான் நிறைவேற்ற



வேண்டும். என்னை நீங்கள் பாளிமென்றுற்குப் போகாத எம்.பி யாக்கியிருக்கிறீர்கள். அதனால் உங்களுக்கு முக்கியமாகப் போக்குவரத்து வசதி இல்லாதது பெரும் குறை. இந்தத் தெருவால் பஸ் ஓட வைப்பது எனது பணி. அதைச் செய்து தருமட்டும் எனக்கு ஓய்வேயில்லை" இவ்வாறு எம்.பி இளையதம்பி ஆமி உடைத்தெறிந்து சென்ற கட்டிடத்திற்குள் கடதாசிக்கூட்டம் விளையாடிக் கொண்டிருந்தவர்களின் முன்னிலையில் சொன்னதும் அங்கிருந்தவர்களில் ஒருவன்.

"இவன் விசரன்ட கதைய விட்டுப்போட்டு துரும்ப அடி மச்சான்!" என்றான். அந்தளவில் கோல்ட்லீவ் பெட்டியைத் திறந்து கோறா பீடியொன்றை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டு இளையதம்பி வேகமாக வெளியேறிச் சென்றார்.

மாரிமழை பெய்து வெள்ளம் போட்டது. மக்கள் அல்லோல கல்லோலப்பட்டனர். தூரத்திலுள்ள பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளெல்லாம் எப்படிப் போவது! என்று திண்டாடிக் கொண்டிருந்த போது யாரும் எதிர்பார்த்திராத வண்ணம் அந்தக் கிராமத்தின் பாதையூடாக பஸ் வந்து கொண்டிருந்தது. பஸ் வாசலில் எம்.பி இளையதம்பி நின்றபடி மக்களைப் பார்த்துக் கையசைத்தபடி வந்தார்.

"எம்.பி என்றால் இளையதம்பிதான் உண்மையான எம்.பி! சொன்னது போல நம்ம கிராமத்திற்கு பஸ்ஸைக் கொண்டுவந்து விட்டார்தானே!" என்று கிராமத்து மக்கள் எல்லோருமே மகிழ்ந்து துள்ளினார்கள். பஸ் கிராமத்தை ஊடறுத்து ஓடி மெயின் வீதியைத் தாண்டிச் சென்றது. "இந்த முறை இளையதம்பியைத்தான் பாராளுமன்றம் அனுப்ப வேண்டும்" என்று எல்லோரும் சொல்லிக்கொண்டார்கள். ஆனால் இவர்களுக்கு மெயின் பாதையால் வெள்ளம் பெருக்கெடுத்து பாலம் உடைந்த காரணத்தால் வேறு வழியின்றி பஸ் தங்கள் கிராமத்தின் வழியாக ஓடியதும் இன்னும் இரண்டொரு நாளில் நின்று போய்விடும்!" என்ற விபரமும் தெரியவர இன்னும் எவ்வளவு காலம் எடுக்குமோ தெரியாது.

**இது நமது கதை நாம் பட்ட துயரக்கதை**

கறுத்து மெலிந்த தேகம்.... கழுத்திலேஒரு மெல்லிய கறுப்பு நாடா... அந்தக் கறுப்பு நாடாவிலே ஒரு வெள்ளை நிறத்திலான 'சைனட்' குப்பி.... குழந்தைகளைத்தூக்கி அரவணைத்து விளையாட வேண்டிய கரங்களில் வாக்கிரோக்கியும்... முட்டை வடிவிலான கிரனைட்டும்... அழுக்கேறிய நிறத்திலான றவுசரிலே செருகக்பபட்ட ஒரு றிவோல்வர்....

அவளுடைய ஒட்டிய பார்வைக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் திண்டாடிய அவன், மீண்டும் ஒரு புன்னகை பூத்தான்.

அவனைக்கண்டாலே புன்னகை பூக்கத் துடிக்கும் அவளுடைய உதடுகள் அவளையும் அறியாமல் விம்மி வெடித்தசோகம் இதயத்தைக் கிழித்துக் கொண்டு எட்டிப் பார்த்தது.

கண்களில் நீர் துளிர்க்க... நா தழுதழுக்க... மெல்லிய குரலில், ''மகேந்திரன், இதென்ன கோலம்....'' என்றாள்.

''.........''

மௌனம் இழையோடியது.

''இத எல்லாத்தையும் கழற்றி எறிஞ்சு போட்டு வாங்க... எங்கெண்டாலும் ஓடிப்போய் ரெண்டு பேரும் சந்தோசமாக இருப்பம்...''

இவ்வார்த்தைகளைக் கேட்ட மகேந்திரனின் கன்னங்களில் நீர்த்தாரைகள் வழிந்தன.

''நித்தியா நீ சொல்லுறது உண்மைதான். ஆனா... நானிருக்கிற நிலமயில வரேலாது. நான் வந்தா.... அது பொடியன்களுக்குச் செய்யிற துரோகம் மட்டுமில்ல... தமிழினத்திற்கே செய்யிற துரோகமாகத்தான் முடியும்.....''

வார்த்தைகள் முற்றப்பெறுமுன் நித்தியாவினுடைய தந்தையின் கார் வந்து நிற்கும்அரவம் கேட்டது.

''மகேந்திரன் அப்பா வந்திட்டார். போலக் கிடக்குது. நான் போகப் போறன்... உங்களோட கனக்கக் கதைக்க வேணும்... எதுக்கும் நாளைக்கு மாமாங்கத்தில ஏழாந் திருவிழா... அங்க சந்திப்பம்... கட்டாயம் வாங்க....''

விழிநீரைத் துடைத்தபடி சிட்டெனப் பறந்தாள்.

மாமாங்கக் கோயில் விழாக் கோலம் பூண்டு கோலாகலமாகக் காட்சியளிக்கிறது. மொத்தத்தில் இதை ஒரு குட்டிக் கொழும்பு மாநகரம் என்றே சொல்லலாம்.

எங்கும் வானளாவ வளர்ந்து பல வர்ணங்களில் பின் ஒளியாய்ப் பூத்துக் கிடக்கும் பல்பின் சோடனைகள்....

கோயில் முற்றத்தை நிறைத்து விட்டாற் போல் எழுந்து நிற்கும் சப்புறங்கள்..... ஆகாய வெளியை வண்ணவண்ணத் தாரைகளாய் மாற்றி அமைத்துக் கொண்டிருக்கும் வான வேடிக்கைகள்....

கோயில் அண்டவெளிப் பரப்பை நிறைத்துக் கொண்டு வகைவகையாக நிரை நிரையாகக் காணப்படும் கடைத்தெரு பூஞ்சிக்கடை..... அலுமினியக்கடை.... சோப்புச் சீப்புக்கடை... விளையாட்டுப் பொருட்கள் கடை...... இத்தியாதி...

ஐஸ்கிறீம் வான்களின் 'பாபு பாபு' என்னும் ஓசையும், திருப்பணிச்சபையின் ஒலி பெருக்கிச் சத்தமும், போக்குவரத்து சேவையினரின் அறிவித்தல் ஒலியும், திரண்டு வழியும் சனங்களின் இரைச்சலும், அவ்விடத்தையும் அமிர்தகழிக் கிராமத்தையும் பெருமிதம் கொள்ளச் செய்கின்றன.

அந்தச் சனத்திரளின் மத்தியிலும் நாயாக அலைந்து திரிந்த மகேந்திரன் அவனுடைய கழுகுக் கண்கள் அங்கும் இங்கும் தேடின. கால்கள் கடுத்தன. எங்கேயாவது போய் ஆறுதலாக இருக்க வேண்டும் போல இருந்தது.

தீர்த்தக் குளக் கட்டில் போய் கொஞ்ச நேரம் இருக்கலாம் என்ற எண்ணத்தில் போனான்.

அங்கே குளக்கட்டில் தனிமையில் இருந்தவாறு குளத்தில் மிதக்கும் செந்தாமரை மலரையும்... அவற்றின் மேலே துள்ளிப் பாய்ந்து விளையாடும் பனையான் மீன்களையும் ரசித்துக் கொண்டிருந்தாள் நித்தியா.

''நித்தியா....''

''ஆ... நீங்களா...!''

அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''கன நேரமா இருக்கிறாயா....?''

''ஓமோம்.....''

மேலும் கீழும் தலையசைத்தாள்.

''அப்படியெண்டா உன்னக் காக்க வைத்துப் போட்டன் எண்டு சொல்லு....''

அவளின் அருகே அமர்ந்தான்.

''என்ன.... வாய உம்மெண்டு புடிச்சிருக்கா, வாயத்திறந்து பேசன்... ஏதோ கதைக்க வேணுமெண்டு சொன்னாய்...''

''மகேந்திரன், எனக்கெண்டா இண்டைக்கும் கோயிலடிக்கு வாறத்திற்கே மனமில்லாம இருந்தது. மனதுக்குள்ள ஒரு மாதிரியா இருக்குது. நான் வரக்குள்ள கூட ஒரு கறுப்புப் பூன குறுக்கறுத்துப் போனது. சகுனம் நல்லா இல்ல.... ஏதாவது விபரீதம் நடக்குமோ எண்டு பயமாக்கி கிடக்குது.....''

''ஏன் நித்தியா, இருந்தாப்போல இந்த எண்ணம் உனக்கு?''

''ஒண்டுமில்ல... இந்த நாட்டில நடக்கிற பிரச்சினைக்குள்ள கோயிலுக்குப் போகணுமா எண்டு யோசிச்சன்....''

''தவளையும் கத்திறதான் மழையும் பெய்யிறதுதான். அதே போல் பிரச்சினையும் நடக்கிறதுதான் காரியமும் நடக்கிறதுதான். சும்மா அத விட்டுப் போட்டுப் பேசாம இரு பாப்பம். அதுவும் இண்டைக்கு ஏழாம் திருவிழா நல்ல சிறப்பாக இருக்கும். அது சரி... எங்க கழுத்தில கையில மாலகாப்பு ஒண்டையும் காணல்ல....''

''அதுவா...! காப்பு மாலையெல்லாம் கழட்டி வச்சுப்போட்டு வந்தனான்.''

# ஆடித்தீ

**13**

-நாவல்-


**-ஓ.கே. குணநாதன்-**

''ஏன் நித்தியா... கழட்டி வச்சுப் போட்டு வந்தனீ? வழமையில போட்டுத்திரியிற நீதானே!''

''இல்ல... இந்தப் பிரச்சினையால கோயிலடிக்குப் பொலிஸ்காரங்களும் வர மாட்டாங்கள். அதால கோயிலடியில ஒரே களவும் கொள்ளையுமாத்தான் இருக்கும். அதுதான் அப்படிச் செய்தன்.''

''என்ன நித்தியா, அப்பிடிச் சொல்லிப்போட்டா! போனவருசம் இந்தப் பிரச்சினைக்குள்ளதானே திருவிழா நடந்தது. ஆனா.... ஒரு களவும் நடக்கல்லதானே...!''

''ஏதோ..... நீங்க சொன்னாச் சரிதான்....''




''அப்பிடிச் சொல்லக் கூடாது நித்தியா. மற்றவண்ட பல்லவிட நம்மட முரசு திறமெண்டு உணந்து நடக்கப் பழகிக் கொள்ள வேணும். சும்மா பொலிஸ்காரங்கள் வந்தாத்தான் களவு நடக்காது என்றிருக்காம, நாம களவு நடக்காத படிக்கு நடந்து கொள்ளப் பழகிக் கொள்ளணும். அதோட... பொலிஸ்காரன் போட்டாத்தான் சட்டம். நம்மடயவன் போட்டாச் சட்டமாகாதா? நாமெல்லாம் பயந்து பயந்துதானே நம்மட சமுதாயம் இப்படிக் கிடக்குது...''

''வாங்க... வாங்க.... கோயில் பக்கமாகப் போகலாம். சும்மா கதைக்க விட்டா நேரம் காலம் தெரியாமலே கதைச்சுக் கொண்டேயிருப்பீங்க''

அவள் எழுந்தாள்.

''உண்மையைச் சொன்னா எண்ட தங்கத்திற்குக் கோபம் பொத்துக் கொண்டு வருது....''

அவனும் எழுந்து கொண்டான்.

இருவரும் கோயிலடியை நோக்கி நடந்தனர். கோயிலடியைச் சென்றடையவும் சுவாமி உள்வீதியை சுற்றி வந்துவிட்டு, வெளிவீதிக்கு வருவதற்கும் சரியாக இருந்தது.

வெளிவீதியைச் சுற்றுவதற்காக மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மாட்டு வாகனம் ஆயத்தமாக இருந்தது. அவ்வாகனத்தைச் சுமந்து செல்வதற்கு ஆயத்த நிலையில் நான்கு வாலிபர்கள் அதனருகே நின்று கொண்டிருந்தார்கள்.

நாட்டில் அமைதியின்மையும் சமாதானமுமற்று, ஒரே பிரச்சினையாக இருந்த போதிலும் வழக்கத்திற்கு மாறாக சனம் அதிகமாகவே காணப்படுகிறது.

நடப்பதற்கே இடவசதியற்று சனங்கள் முட்டி மோதிக் கொண்டே சென்ற வண்ணமிருக்கின்றன. மகேந்திரன் அச் சனத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த வேளையில் நித்தியா அவனைப் பார்த்து, ''மகேந்திரன், அங்க பாருங்க... ஏதோ பிரச்சினை நடக்குது!'' என்றாள்.

அவன் திக்குற்றவனாக நிமிர்ந்து பார்த்தான்.

சனங்கள் அல்லோல கல்லோலப்பட்டு ஓடிக் கொண்டிருந்தனர்.

அவன் ஒன்றுமே புரியாமல் திகைத்து நின்றான்.

''என்ன திகைத்துப் போய் நிற்கிறயள்... சனங்களெல்லாம் ஓடுதுகள்... வாங்க நாமளும் ஓடுவம்....''

நித்தியா அவனுடைய கைகளை இறுக்கிப் பிடித்தாள். அவளுடைய கைகள் பயத்தினால் மெதுவாக நடுங்கிக் கொண்டிருந்தன.

அவளின் நடுக்கத்தைப் பார்க்கப் பாவமாக இருந்தாலும், பயந்து ஓடுவதை நினைக்க வெட்கமாக இருந்தது. எங்கே பிரச்சினை நடக்கிறது என்று எட்டிப் பார்த்தான்.

அலங்கரிக்கப்பட்ட மாட்டு வாகனத்தைச் சுற்றிச் சனக் கூட்டம் திரண்டு நின்றது. அங்கேதான் பிரச்சினை நடக்க வேணும் அது என்ன பிரச்சினையாக இருக்க முடியும்?

நித்தியாவையும் இழுத்துக் கொண்டு அவ்விடத்தை நெருங்கினான்.

அங்கே...

பட்டு வேட்டி சரசரக்க பட்டுச் சால்வையை எடுப்பாக முடுக்காக எறிந்து காணப்பட்டார் கோயில் வண்ணக்கர். அவருடைய கண்கள் சிவப்பேறி முறுக்கு மீசை துடித்துக் கொண்டிருந்தது.

மறுபுறத்தில் மாட்டு வாகனத்தின் தண்டுகளைப் பிடித்தவாறு நான்கு வாலிபர்கள்....

''நீங்கள் சாமி தூக்கக் கூடாது என்றால் தூக்கக் கூடாதுதான்''

வண்ணக்கர் பேய் போலக் கத்தினார்.

''தூக்கினால் என்ன செய்து பொடுவீர்களோ...!''

வாலிபர்களில் ஒருவன்.

என்ன செய்வமோ....! தூக்கினால் கொலைதான் விழும்...ஓ..!'' - வண்ணக்கர்.

இரு தரப்பினரும் விட்டுக் கொடுக்காமல் நிலமை மோசமாகிப் பெரும் பிரளயமே நடந்து கொண்டிருந்தது.

தொடரும்.....

# புல்லுமலை முதல் புனாணை வரை....

## தென் தமிழீழ படுகொலைகளின் இரத்தச் சுவடுகள்

மதத்தால் வேறு பட்டாலும் இனத்தால் ஒன்றாய் தமிழனாய்ப் பிறந்தும் தமிழர்களைக் கொன்று குவிப்பதில் மிகவும் முன்முரமாக நின்றார்கள் முஸ்லிம் சகோதரர்கள். சிங்கள இராணுவத்திடம் தமிழர்களை வேட்டையாடக் காட்டிக் கொடுத்தது



மட்டுமன்றி, தாமும் சேர்ந்து தமிழர் களை வேட்டையாடினார்கள். நீங்கள் பேசும் தமிழ் மொழியால் தானே அத்தனை உயிர்களும் ''எங்களை விட்டு விடுங்கள் ஐயா'' என்று கையெடுத்துக் கும்பிட்ட வேளை கூட சுட்டும், வெட்டியும் ஆக்கினைப் படுத்திக் கொன்று குவித்தீர்கள்.

தமிழர்களை அடக்கி ஒடுக்கி அவர்களின் நிலத்தைத் அபகரித்து அவர்களை இல்லா தொழிப்பதற்காக சிங்களப் பேரினவா திகள் தீட்டிய திட்டத்தை மெருகூட் டச் செய்தார்கள் முஸ்லிம் இளைஞர்கள். பல இலட்சம் ரூபா பெறுமதியான தமிழ் உறவுகளின் பொருட்களைச் சூறையாடினார்கள்.

தமிழர்கள் இதயங்களில் பதிந்துள்ள அந்த நினைவுகளை இன்று கூட நினைத்துப் பார்த்தால் நெஞ்சம் குமுறுகிறது. பணத்திற் காக தனது ஒரே மொழி பேசும் இனத்தைக் கூட மறந்து செயற்பட் டார்கள். இந்த முஸ்லிம் கொடுமை வாதிகள்

**மட்டு நகர் பொதுச்சந்தையில் மாற்றான் படைகள் நடாத்திய படுகொலைகள்.**

சிங்களப் பேரினவாத அரசின் கூலிப்படைகள்தான் தமிழனை அழித்தொழிக்கும் நோக் குடன் தனது இனவெறி வேட்டை யை அரங்கேற்றிக் கொண்டி ருந்தார்கள் என்றால் போதாக் குறைக்கு வடகிழக்கில் எஞ்சியுள்ள தமிழ் உறவுகளை அழித்தொழி க்கும் நோக்குடன் அமைதி காப்பு என்ற போர்வையில் இலங்கை மண்ணில் காலடி எடுத்து வைத்த இந்திய அமைதி காக்கும் படை யினர் ஒன்றும் அறியாத ஏராளமான தமிழ் மக்களை கொன்று குவித்தது மட்டுமன்றி இளம் பெண்களை கதறக் கதற கற்பழித்துக் கொன்றார்கள்.


சிங்கள இராணுவத்தின ருக்கும் இந்திய இராணுவத்தின ருக்கும் எதுவித வித்தியாசமும் இல்லை என்று அனைவரும் கூறும் அளவிற்கு அவ்வளவு மோசமான பாதக வேலை களை வட தமிழீழத் திலும், தென் தமிழீழத்திலும் மேற்கொண்டார்கள் இந்திய இராணு வத்தினர்.

அவர்கள் இலங்கைக்கு காலடி எடுத்து வைத்த போது எமது தமிழ் மக்கள் நினைத்தார்கள் சிங்கள இராணுவத்தினரிடமிருந்து எம்மைக் காப்பாற்றவே எமது அயல் நாட்டிலிருந்து இந்திய இராணுவத்தினர் வந்திருக்கிறார்கள் என்று சிங்கள இராணுவத்தின் கோரப் பசிக்கு தமது தமிழ் உறவுக ளை இழந்தவர்களும் ஏனைய வர்களும் மிகுந்த சந்தோசத்துடன் காணப்பட்டனர். ஆனால் அவர்க ளின் எண்ணத்தில் இந்த அமைதிப் படையினர் மண்ணள்ளிப் போட்டா ர்கள். சில நாட்கள் நீடிக்கும் முன்

**தருவது எம்.யுவராஜ்**

னர் தமிழர்களுக்கெதிரான வேட்டை தொடங்கினார்கள்.

அகிம்சையை அகிலத்தில் நிலைநாட்ட அவதரித்த புத்தபக வானின் போதனையில் திகழும் பௌத்த மத சிங்கள இராணுவ த்தினரும், இந்திய நாட்டிற்கு அகிம்சை வழிப் போராட்டம் மூலம் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த



மகாத்மா காந்தி பிறந்த இந்திய நாட்டிலிருந்து வந்த படைகளும் எமது தாயகத்தில் இத்தனை அடாவடித்தனங்கள் புரிந்திருக்கிறா ர்கள். என்றால் அந்த புத்தர், காந்தி இவர்களின் போதனைகள், வழி முறைகள் நாதியற்றுப் போனதை, எமது வட, கிழக்கு மக்களென்ன உலக நாடுகளுமே உணர்ந்து கொண்டது.

சிறிலங்காப் பேரினவாத அரசின் சிங்கள இராணுவத்தினர் தமிழர்களை அடக்கி, ஒடுக்கி அவர் களை அழித்து தாயக விடுதலைப் போராட்டத்திலிருந்து அவர்களைப் பிரித்து தனிமைப்படுத்தி தமிழர் நிலங்களை அபகரித்து தமது சிங் கள தேசத்துடன் இணைக்கும் நோக்குடன் எமது தமிழர்களை வடகிழக்கில் கொன்று குவித்தார் கள். ஆனால் இந்திய அமைதி காப் புப்படையினர் வட கிழக்கு மரபு வழி தமிழர் தாயகம் அவர்கள் தமது உரிமைக்காகவும், தமது நிலத்திற்காகவும் இத்த னை உயிர்களை சிங்கள இராணுவத் தினரிடம் பலி கொடுத்தார்கள் என்ப தை நன்கு உணர்ந்திருந்தும். தாம் இலங்கைக்கு வந்த நோக்கத்தினை மறந்து தமது நாட்டுக்கு ஏற்பட்ட இழுக்கினை சர்வதேச சமூகத்திடம் மறைத்து தம்மை நல்லவர்கள் போல் காட்டிக் கொள்வதற்காகவே எமது வடக்கு கிழக்கில் அத்தனை தமிழ் உறவுகளையும் வேட்டையாடி னார்கள் என்றால் அது மிகையா காது.

அத்தோடு அவர்களுக்குத் துணையாக எமது தமிழ் தேச விரோ த கும்பல்கள் சிலர் செயற்பட்டனர். நாட்டுக்காக ஆயுதம் தூக்கிய நல்லவர்கள் என்று தம்மை காட்டிக் கொண்டு மாற்றான் படையிடம் எமது தமிழ் இளைஞர்களைக் காட்டிக் கொடுத்து, தமிழ் பெண்க ளின் கற்பை பறிக்க வைத்த தமிழ் தேச விரோத கும்பல்கள் இணைந்து கொண்டு பல அப்பாவி தமிழ் மக்க ளை சுட்டும் வெட்டியும் கொன்றார் கள். இதை நினைக்கும் போது அவர்களும் ஒரு தமிழ்த்தாய் வயிற்றில் பிறந்த தமிழனா? என எண்ணத் தோன்றுவ தோடு எமது தமிழினம் வெட்கித் தலை குனிகிறது.

தென்தமிழீழத்திலே மட்டக் களப்பு நகரில் ஏதாவது அசம்பா விதங்கள் நடந்தால் சிறிலங்கா கூலிப்படையினருக்கும் இந்திய கூலிப்படையினருக்கும் பொது மக் கள் மீது தங்கள் ஆத்திரத்தைத் தீர்க்கும் ஒரு தளமாக மட்டக்க ளப்பு பொதுச் சந்தை காணப்பட்டு வந்தது.

அவ்வப்போது நகரப் பகுதிக ளிலே சிறு தாக்குதல்கள் ஏதாவது நடை பெற்றால் சந்தை க்குள் காணப்படும் பொதுமக்களை பதம் பார்க்க தவறாத சந்தர்ப்பங் களே இல்லை. அந்த அளவிற்கு இவர்களின் அட்டூழியங்கள் அக்கா லத்தில் வலுப்பெற்றிருந்தன.

1987ம் ஆண்டு மார்கழி மாதம் அது அடைமழைக்காலம். 27ம் திகதி அதிகாலை மட்டக்களப்பு பொதுச் சந்தையில் கொட்டும் மழை யில் குடைகளுடன் முட்டி மோதிக் கொண்டு மும்முரமாக தங்கள் அன் றாடப் பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தவர்களும், தமது பொருட்களை விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டியவர்களுமாக காண ப்பட்டனர்.

திடீரென சந்தைக்குள் ஒரு வெடிச்சத்தம் கேட்டதுதான் தாமதம். அங்கு நின்ற அமைதி காக்கும் இந்தியப் படையினரின் துப்பாக்கிகள் அந்தப் பொது மக்களை நோக்கிச் சடசடக்கத் தொடங்கின. ஐயோ,

*சுவடுகள் தொடரும்....*

**வாசகர் கவனத்திற்கு**

தொடர்ந்து வெளிவரும் இக்கட்டுரை தொடர்பான மேலும் தகவல்கள், ஆலோசனைகள் ஏதும் இருப்பின் அறிந்தவர்கள் எமக்கு அறியத்தரவும்.


'தமிழ்அலை'
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை.

போட்டியில் பங்குபெற விரும்புவோர் விடைகளை இடமிருந்து வலம், மேலிருந்து கீழ் என வகைப்படுத்தி ஒரு தபாலட்டையில் எழுதிக் கீழே காணப்படும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை அனுப்பும் வாசகர்களில் அதிஸ்டசாலிக்கு 100 ரூபா பணப்பரிசும், பாராட்டுப்பெறும் மேலும் 10 பேரின் பெயர் விபரங்கள் அலையிலும் வெளியாகும். விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 02-03-2004 ஆகும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்ப்போம்.

*முகவரி*

**குறுக்கெழுத்துப்போட்டி-33**
**தமிழ் அலை**
**பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை**

## குறுக்கெழுத்துப் போட்டி -33



### இடமிருந்து வலம்

01. வேதாளம் மீண்டும் மீண்டும் ஏறும் மரம்.
05. சுவாமி வீதி உலா வரும்போது வீட்டு முற்றங்களில் வைப்பது. (குழம்பியுள்ளது)
07. மனதில் எதன்பொருட்டும் இது குடிகொண்டால் முகம் வாடிக் கிடக்கும். (திரும்பியுள்ளது)
09. ஆன்மா. மாட்டையும் குறிக்கும் (திரும்பியுள்ளது)
10. காதலிப்பவர்களுக்கு இவனும் தெய்வமாவான் என ஒரு கவிஞன் சொல்கின்றான்.
12. இது ஒரு வகை தாளலயம்.
13. ஆற்றில் வாழும் இது சந்தர்ப்பம் கிடைத்தால் ஆளையும் விழுங்வி விடும்.
15. பல விதமான கலை நிகழ்ச்சிகளையும் தொகுத்து ஒரே பெயரில் இப்படி அழைக்கலாம்.
16. நமது உடலை தோல் காப்பது போன்று மீனின் உடலை இது காக்கும்.

### மேலிருந்து கீழ்

01. 'றிவிரச' நடவடிக்கையின் பின், உலகே வியக்கும் வண்ணம் தாக்குதல் நடாத்தி விடுதலைப்புலிகள் தமது பலத்தை மீள நிரூபித்த இடம்.
02. இருட்டு, இரவு என்பதைக் கம்பராமாயணப் பாடல்களில் இப்படியும் சொல்வார். (குழம்பியுள்ளது)
03. இது கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம் என்கிறது ஒரு பாடல் (தலைகீழ்)
04. இவன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பார்கள்.
06. வீணை, வயலின் போன்ற இசைக் கருவிகளில் கம்பியை மீட்டி மீட்டி இதைச் சேர்ப்பார்கள் (குழம்பியுள்ளது)
11. இரும்பைக் கவர்ந்திழுப்பது.
13. வியாபாரம் அல்லது வேறு ஏதும் தொழில் தொடங்க அவசியம் இது வேண்டும்.
14. கணவனால் கைவிடப்பட்ட பெண் (தலைகீழ்)

## குறுக்கெழுத்துப் போட்டி 31ற்கான விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01. சிக்கனம் | 01. சிரமதானம் |
| 05. தொழுவம் | 02. கழுகு |
| 07. மதகு | 03. வன(ம்) |
| 09. கார(ம்) | 04. தொல்காப்பியம் |
| 10. தாடை | 06. கனகாம்பரம் |
| 11. பயம் | 08. தடை |
| 12. பிரம்மா | 11. (மகா) வலிபுரம் |
| 13. பா(ல)ம் | 14. சம்பா |
| 15. காப்பு | 17. வஞ்சி |
| 16. வல்லினம் | |
| 18. வஞ்சம் | |

## பரிசு பெறும் அதிஸ்டசாலி

**ந.டே.குணரெத்தினம்,**
**8ம் வட்டாரம்,**
**களுவாஞ்சிகுடி.**

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

01. ப. நிலக்ஷனா, ஆண்டு-7S க/மு சண்முகா வித்தியாலயம் காரைதீவு.
02. ஜே. விஜயலக்சுமி, 19,பண்டாரிகுளம், வவுனியா.
03. இ. வசந்தமோகன், தரம்- 12, கிரான்குளம்.
04. வே. நமசிவாயம், தேசிய நீர் வ.ச, மன்னார்.
05. செ. சுதர்சன், மிசன் வீதி, பெரியகல்லாறு 01.
06. சுபேத்தா சௌமியா நாகேந்திரராஜா, பிரதானவீதி, வெல்லாவெளி.
07. தர்சினி முரளிதரன், திருப்பெருந்துறை, மட்டக்களப்பு.
08. திருமதி ஜெ.ஜீ. அகிலன், தாழங்குடா.
09. ந. ஜெயச்சந்திரன், சித்தாண்டி- 02.
10. ச. பிறேமவிஜய், 10ம்கட்டைவீதி, கொம்மாதுறை.

# அமெரிக்க இராணுவம் எதிர் தற்கொலைப் போராளி
## யார் வல்லமை மிக்கவர்

சண்-தவராஜா

ஆப்கானிஸ்த்தானில் நிலை கொண்டுள்ள அமெரிக்க ராணுவத்தின் பிரையன் ஹில்போர்ட் அல்-கைடா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடனை கைது செய்யும் முயற்சியில் தாம் அவரை நெருங்கி விட்டதாகவும், இவ்வருட இறுதிக்குள் அவரை எப்படியும் கைது செய்து விடப்போவதாகவும் தெரிவித்து ஒரு சில நாட்களுக்குள் ஆப்பானிஸ்த்தானில் முதலாவது தற்கொலைத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

ஆப்கான் தலைநகரான காபூலிலிருந்து 60கிலோமீற்றர் தொலைவில் அல்-கைடா போராளிகளின் ஆயுதக்கிடங்கொன்று தொடர்பான துப்புக்களைப் பெற்று அங்கு சென்ற வேளையில் ஆயுதக்கிடங்கு வெடிக்கச் செய்யப்பட்டதில் ஆறு அமெரிக்கப் படைகள் இறந்துள்ளனர். மூவர் படுகாயங்களுக்கு இலக்காகினர். முன்னரும் இதேபோன்று பலதடவை இடம்பெற்றிருந்தாலும் இம்முறை நடைபெற்ற சம்பவம் தற்கொலைப் பாங்கினதாக அமைந்திருந்தது.

இதனை அடுத்து கடந்த வாரம் காபூல் நகரில் சனசந்தடி மிக்க தெருவொன்றில் சென்று கொண்டிருந்த கனேடிய இராணுவத்துக்குச் சொந்தமான கவச வாகனம் ஒன்றின் மீது பாய்ந்த தற்கொலைப் போராளி தனது உடம்பில் இருந்த குண்டை வெடிக்கச் செய்ததில் ஒரு படை வீரர் கொல்லப்பட்டார். பல பொதுமக்கள் காயமடைந்தனர்.

மறுநாள் இறந்த படை வீரருக்கான இறுதி அஞ்சலி நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது வெடிமருந்து நிரப்பப்பட்ட வாடகைக்கார் ஒன்று பிரித்தானிய படையினரின் இரண்டு வாகனங்களில் மோதியதில் ஒரு படைவீரனும் ஒரு பொதுமகனும் கொல்லப்பட்டனர். மூன்று இராணுவத்தினர் காயமடைந்தனர். அடுத்தடுத்து நடைபெற்ற இத்தற்கொலைத் தாக்குதல் தொடர்பாக தல்பான் பேச்சாளர் லத்தீப் ஹக்கீமி சர்வதேச தொடர்பு சாதனங்களுடன்





தொடர்பு கொண்டு பேசுகையில் இத்தாக்குதல்களுக்குஉரிமை கோரியதுடன் இது போன்று பல தாக்குதல்கள் தொடரவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆகமொத்தம் ஆப்கான் போராளிகளும் தமது இறுதி ஆயுதமாக உயிராயுதத்தைப் பாவிக்கத் தொடங்கிவிட்டனர்.

இழப்பதற்கு எதுவுமே இல்லாத நிலை ஒன்று ஏற்படும் போது மனிதன் தனது உயிரைத் துறப்பதற்குக் கூட துணிந்துவிடுவது இயற்கை. இந்த வகையில் பின்லாடனைக் காப்பதற்காக, தமது புனித ''ஜிஹா''தைத் தொடரவும் உயிர்களைத் தற்கொடையாக வழங்க ஆப்கானியர்கள் முன்வந்து விட்டனர். போரியல் வரலாற்றிலே தற்கொலைப் போராளிகளின் பண்டையகாலத்திலிருந்தே செயற்பட்டு வந்திருக்கின்றார்கள். மெய்ப் பாதுகாவலர்கள் தமிழ் தலைவனே, தலைவியைப் பாதுகாப்பதற்கென்றே உயிரை கொடையாக்குபவர்கள்.

தமிழர் வரலாற்றிலே ஆபத்து தவிகள் என்றொரு படைப்பிரிவினர் இருந்துள்ளனர். இவர்கள் தம்முயிரை ஈந்து எதிரிகளின் கவனத்தைத் திசை திருப்புவதில் வல்லவர்கள். இவர்கள் தமது தலைவனின் உயிர் பிரியும்போது அந்த இடத்திலேயே தம்முயிரையும் மாய்த்துக் கொள்பவர்கள்.

அது மட்டுமன்றி யுத்தத்துக்குப் போகும் முன் நடைபெறும் யாகத்திலே களப்பலியாகப் பலியிட எத்தனையோ இளைஞர்கள் தம்முயிரைத் துறந்துள்ளனர்.

ஜப்பானியரைப் பொறுத்தவரை அவர்கள் மத்தியிலே ''ஹராகிரி'' என்றொரு நடைமுறை உள்ளது. யுத்தத்திலோ அல்லது சண்டையிலோ தோற்றுவிட்டால் கைவாளை உயரே எறிந்து மார்பில் தாங்கி உயிரைப் போக்குவது. இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் ''ஹராகிரி'' என்ற பெயரில் விசேட படைப்பிரிவொன்று ஜப்பானில் உருவாக்கப்பட்டிருந்தது. இப்பிரிவினர் விமானங்களிலிருந்து கப்பல்கள் மீதும் ஏனைய இராணுவ இலக்குகள் மீதும், வெடிமருந்துகளைக் கட்டிக்கொண்டு குதித்தனர்.

அண்மைக்கால சரித்திரத்தில் தற் கொலைப் போராளிகளைக் களம் அனுப்பி வைத்த சரித்திரம் பாலஸ்த்தீனத்திலேயே தொடங்கியது. ஆனால் விடுதலைப்புலிகள் அந்த தந்திரத்தைக் கையாண்டு தற்கொலைப் போராளிகள் தொடர்பான ஒரு புதிய அத்தியாயத்தையே தொடக்கி வைத்தனர்.

தற்கொலைப் போராளி என்றொரு கருதுகோள் சாத்தியமா? இல்லையா? என்ற வாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் திரைப்படங்களில் திகில் ஊட்டவென சேர்த்துக் கொள்ளப்பட்ட காட்சியின் அங்கமாகவே தற்கொலைத் தாக்குதல் அமைந்திருந்தது.

தமிழ் நாடு பெரும்பாலும் ஸ்ரீபேரம்புத்தூரில் முன்னைநாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தற்கொலைப் போராளியின் குண்டு வெடிப்பில் இறந்த போது உலகத்தின் கவனம் இந்த உயிராயுதத்தின் பக்கம் திரும்பியது. (ராஜீவ்காந்தி கொலை விசாரணைகளின் போது கூட ''கொலிவுட்''டில் படமாக்கப்பட்ட திரைப்படமொன்றை ஆதாரமாகக் கொண்டு விசாரணைகள் நடாத்தப்பட்டமை வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்)

அண்மைக்காலத்தில் பாலஸ்தீனத்தில் அடுத்தடுத்து இடம் பெறும் தற்கொலைத் தாக்குதல்களில் இறுதியாக பெண்போராளிகளும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அவரது அடிவருடிகளுக்கும் எதிராக நடைபெறும் தற்கொலைத் தாக்குதல்கள் பல உயிர்களைப் பலி கொண்டு வரும் நிலையில் தற்போது இவ்வகைத் தாக்குதல்கள் ஆப்கானிஸ்தானிலும் இடம்பெறத் தொடங்கியுள்ளன.

ஈராக் விவகாரத்தினால் அமெரிக்காவில் சரிந்து வரும் தனது செல்வாக்கினை உயர்த்த சதாமின் கைது உதவியது போல், எதிர் வரும் நவம்பரில் இடம்பெறும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக பின்லாடனைக் கைது செய்துவிட ஜோர்ச்புஷ் துடியாய்த் துடிக்கிறார்.

சொந்த நாட்டிலேயே மக்களை விரோதித்துக் கொண்ட சதாமைப் போலன்றி, பின்லாடன் மிகவும் வசதியான, கண்டுபிடிக்க முடியாத மறைவிடத்தில் நண்பர்களும் தற்கொலைப் போராளிகளும் புடைசூழ வசித்து வருகின்றார். சதாமை போலன்றி முஸ்லிம் தீவிரவாத இளைஞர்களின் அபிமானமும் அவருக்குண்டு.

இரண்டேயிரண்டு மெய்ப் பாதுகாவலர்களின் உதவியுடன் நிலத்தில் இருட்டறை ஒன்றில் வாழ்ந்த சதாமை போன்று இலகுவில் பின்லாடனைப் பிடிக்க முடியாது என அமெரிக்கா அறிந்திருந்தும் அவரைக் கைது செய்யப் போவதாக இராணுவம் சூழுரைத்திருப்பது தேர்தல் வெற்றிக்கான ஒரு உத்தியே அன்றி வேறில்லை.

இதேவேளை அமெரிக்காவின் பயங்கரவாத ஒழிப்பு என்ற சர்வதேச ரீதியிலான செயற்பாடு அதற்கெதிராக தற்கொலைத் தாக்குதல் என்ற புதிய சமன்பாட்டைத் தோற்றுவித்துள்ளது.

அமெரிக்க இராணுவம் எங்கெங்கு ஆக்கிரமிப்பில் ஈடுபடுகின்றதோ அங்கெல்லாம் தற்கொலைத் தாக்குதல் நடைபெறும் சூழல் உருவாகியுள்ளது.

அமெரிக்க இராணுவம் பலம் பொருந்தியதாக, தொழிநுட்ப ரீதியாக மேன்மை கொண்டதாக இருக்கலாம். ஆனால் ஒரு தற்கொலைப் போராளியின் மனோதிடத்தின் முன் இவை அனைத்தும் தூசு என்பதையே நடப்பு நிகழ்வுகள் சுட்டி நிற்கின்றன.

---

**தமிழ்அலை ஓராம் ஆண்டு அகவை விழாவையொட்டி**
**அகில இலங்கை ரீதியாக நடாத்தப்படும் போட்டிகள்**

**01.கட்டுரைப்போட்டி** *உயர்தர மாணவ ,மாணவிகள் மாத்திரம் பங்குபற்றலாம். கட்டுரைகள் யாவும் பாடசாலை அதிபரின் சிபார்சுடன் அனுப்பப்படல் வேண்டும் (1500 சொற்களுக்கு மேற்படாமல்)*

தலைப்பு:- 1. நாம் எங்கே போகிறோம்.
2. தமிழர் உரிமையும், வாழ்வும்.
3. போரா சமாதானமா?
4. சமூக மேம்பாட்டில் தமிழ்அலையின் பங்கு

**02. கவிதைப்போட்டி** *திறந்த போட்டி சகலருக்குமானது, வயதெல்லை கிடையாது (புதுக்கவிதை அல்லது மரபுக்கவிதை)*

தலைப்பு:- புலிகளே தமிழர், தமிழரே புலிகள் (50வரி)

**03. சிறுகதைப்போட்டி** *(திறந்த போட்டி சகலருக்குமானது, வயதெல்லை கிடையாது, அவரவர் விரும்பிய தலைப்பில் சமகாலப் பிரச்சினையை மையமாக வைத்து எழுதப்படல் வேண்டும்) (ஆறுபக்கங்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.)*

குறிப்பு:- ஒவ்வொரு போட்டியிலும், பரிசுபெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் பெறுமதிவாய்ந்த பரிசுகள் வழங்கப்படும். மேலும் ஐந்து பேருக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும். இப்போட்டியில் தமிழ்அலை ஊழியர்களோ, அவர்களது பிள்ளைகள், உறவினர்களோ பங்குபெறமுடியாது. போட்டிகள் சம்பந்தமாக எந்தவித கடிதங்களும் தொடர்புகளும் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட்டுள்ளது.
நடுவர்களின் தீர்ப்பே முடிவான முடிவாகும்.

**அனுப்ப வேண்டிய முகவரி.**
**தமிழ்அலை**
**பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை.**

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் என்ன போட்டி என்பதை தெளிவாக எழுத வேண்டும்.

**மாணவர்களின் ஆக்கங்கள் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.**

முடிவுத்திகதி:- 29.02.2004

# கவிதைக் களம்

## ஈழத்தாய் சபதம்

*தொடர்கவிதை....*

### எண்பத்தி மூன்றினிலே

ஆண்ட அரசபடை- எங்கள்
அன்னையர் தங்கையர் மானம் பறித்ததும்
மூண்ட பெருந்தீயில்- செல்வம்
முற்றும் இழந்து நாம் ஏதிலரானதும்
மாண்டவர் கண்களையே- அந்த
மானமில்லாதவர் தோண்டி மகிழ்ந்ததும்
மீண்டும் நினைவலையில்- வந்து
மேவிட வெந்துயர் ஆவியைத் தீய்க்குது!

சிங்கள பௌத்தவெறி- எங்கள்
செந்தமிழ்த் தாயைச் சிதைத்த
கொடுமையை
எங்கு முறையிடுவோம்- எமக்கு
ஈழத்தையன்றியே யாதும் புகழுண்டோ!
தங்கையர், தம்பிகளே! -தமிழா
ஈழச்சரித்திரம் நாளும் படித்து நீர்
பொங்குக பொங்குகவே- ஒரு
போக்கிடமற்ற அகதிகளாயினோம்!

தொடரும்.....
எஸ்.கருணானந்தராஜா (யுகசாரதி)

## பந்தாடு!



நம்தேசிய கீதம்
உன்பெயரோடு தொடங்கும்
வா!
வந்து களமாடு!
உறைக்குள் உறங்கிக்கிடக்கும்
சுவர்வாள் நீ...!
நீளும் கொடூரங்களை
திருப்பலி எடு!
புயலாய்க் கிளம்பு
இடிமின்னலாக வெடி!
பகையினரைப் பந்தாடு
வா!
வந்து களமாடு
நம்தேசிய கீதம் நாளை
உன் பெயரோடு தொடங்கும்!

ஆர். ஞானசேகரன்
கலுதாவளை

## கொஞ்சியது போதும்!



காதலர் தினத்தைக் காத்திருந்த
கனிமொழியாள்
தனியான இடம் நாடி
தலைவனைச் சந்தித்து
இனிமையுடன் இயம்பினாள்....
''நெஞ்சமெனும் நீரோடையில்
நீந்தித் திரிந்து
பஞ்சமின்றி காதல் பயிரை
இருவருமாய்
வஞ்சமின்றி வளர்த்தோம்
அன்பரே,
கொஞ்சியது போதும்
குவலயம் வாழ்த்த
குங்குமம் நான் வைப்பதென்று?

திருமதி கீ. லோகேஸ்வரி
அக்கரைப்பற்று

## புரிந்துகொள்!



மானிடனே!
மனம் என்பது
மல்லிகை இதழிலும்
மெல்லிதழ் கொண்டது!
அதை வன்மையான வார்த்தைகளால்
சாவடிக்காதே!
ஓர் உயிரை மாய்ப்பது மட்டுமே,
கொலை என்று எண்ணிவிடாதே!
ஓர் இதயத்தை நோகடிப்பதும்,
மாபெரும் கொலை
என்பதை புரிந்துகொள்.



க.வசந்தி கிரான்.

## இது தான் எனது கவலை



*தூண்டிவிடப்படாத விளக்கு*
*தூண்டிவிடப்பட்ட போது*
*வீசிய காற்றுக்கு அணைந்ததுபோல்*
*எமது காதல் உறவும்*
*பலவருடங்கள்*
*மடல் மூலம் தொடர்ந்தது.*
*சிலநாட்கள்*
*நேரிலே சந்தித்து*
*இதயத்தை நிறைத்தபோது*
*பிரிவெனும் காற்று வந்தது.*
*எம்மைப் பிரித்துவிடுமா?*
*பிரிவைத் தாங்கிக் கொள்ளும் சக்தி*
*உனக்கும் எனக்கும் இல்லையே!*
*இதுவே என் கவலையெல்லாம்!*

*வே. தமருகா றொபட்*
*கல்லடி வேலூர்.*

## காற்றோடு பறக்கவிடு



காதல் ஒரு குளிர்காற்று!
சிலருக்கு இதமாகவும் வீசும்!
இறைவா!
என்னையும் அப்படியே
குளிப்பாட்டச் சொல்!
சிறகற்ற அந்தக் காற்றோடு
பறந்து திரிய ஆசை!
சதியென்னும் காற்றில்
என் மனக்கப்பல்
துன்பக்கடலில்
சிதறுண்டு.....
இப்போதெல்லாம்
எனது இரவுகள்...?

எஸ்.தமயந்தி
அம்பிளாந்துறை.

## பேராற்றல் காண்போம்!

ஒற்றுமையாய்க் கலந்து
உறவாடி மகிழ்ந்து
ஒற்றை மொழி பேசி
உள்ளன்பால் நேசித்தோம்!

ஒரு தாயின் பிள்ளையாக
உணவுண்டு மகிழ்ந்த நாம்
பிரிவுக்குள் வீழ்ந்தோமே
பொது உடமை இதுவாமோ!

ஏனிந்தச் சோதனை
இனவாதம் சரியாமோ
அனியாயமாய் உயிர்கள்
அழிந்து மாய்தல் தகுமோ!

ஆயுதமயம் ஆட்சியேறுமெனில்
அதனாலோர் தீங்குண்டு
பாயும் வேங்கையையும் சிலவேளை
பலம் குன்றும் நாளுண்டு!

ஆதலினால் நாமின்று
அமைதிக்காய் போரிடுவோம்
பேதமை நீங்கிப் புனித
பேராற்றல் காண்போம்.!

மூதூர் ''கலைமேகம்''

## புறப்படடா!



அன்புச் சகோதரா எழுந்திரடா– எம்
தாயகம் காக்கப் புறப்படடா!
இம்மண்ணில் பிறந்தவரெல்லாம்
மடிவது நிச்சயம் தானடா!
சிந்தித்துப்பார் சிறியவனே–
பெரும்
சீற்றம் கொண்டெழு தமிழ் மகனே!
எதிரியை அழிக்க
எதிரியின் எறிகணையை உடைக்க
எரிமலையாய் எழு!
தமிழ் மண்ணுக்காய் வீரராய்
இறந்த
மாவீரர் என்னும் சொல்லுக்கு
மாபெரும் புகழ் எழும்பு!
புறப்படடா!

மு.மதிசன்
(குணயின்பன்)

## தேடலும் பகிர்வும் 26

*தேடலும் பகிர்வும் அறிவுப் பரவலாக்கலில் பெரிதும் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது. பாடப்பரப்பில் கூட தேடல் பெரிதும் குன்றிப் போவது இன்றைய ''தேர்வு மையக் கல்வித் திட்டத்தில்'' கவலையுடன் நோக்கப்படுகின்றது. இடைநிலை, உயர்நிலைப் பள்ளிகள் மட்டுமன்றி ''பல்கலைக்கழகங்கள்'' என்ற பெயரிடப்பட்டுள்ள உயர் (?) கல்வி நிறுவனங்களிலும் இச் சூழல் குறிப்புணர்த்தப்படுகின்றது. பல்கலைக்கழகங்களின் பெயரினை அர்த்தமுடையதாக்க அங்கலாய்க்கும் ஒரு சில பட்டப்படிப்பாளர்களும், அங்கும் ''கடந்தகால வினாத்தாள் மீட்டல்'' (Review of Past Papers) தொடரும் தன்மையைச் சுட்டிக் காட்டுகின்றனர் என்று தணியும்....?*

*எல்லோரும் பயன்படுத்தக் கூடியதாக இருக்கின்ற எமது பிரதேச படிப்பகங்களிலும் பெரிதும் கிடைக்கப்பெறாத ஆவணங்களின் பகிர்வு வரிசையில், இம்முறை ''மாம்பழம்'' அவர்கள் எழுதிய ''மாம்பூக்கள்'' எனும் நூலிருந்து ஓரிருவரிகள். ''மாமதிக்கா'' வெளியீடாக 01.09.2001 இல் முதற்பதிப்பு வெளியான இந்நூலில் வீரம் விளைநிலத்தின் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் உணர்வூட்டும் கவிதைகள் ஆங்காங்கு வலுச் சேர்க்கின்றன. ''சிங்கள ஏரோது மன்னர்களின் கைகளில் சிக்கி- தமிழர்கள் சிலுவை சுமக்கிறார்கள்... ஆண்டவரே! எமக்காக இரங்கும்!'' (நன்றி:- காசிஆனந்தன்) மன்னாரில் வழிபாட்டுக் குரல் எழுப்பிய இளம் கிறிஸ்தவ துறவியாக இவரை நினைவுபடுத்தலாம். 17கட்டுரைகள் கொண்ட 176பக்க நூலிலிருந்து ஓரிருவரிகளை நன்றியுடன் பகிர்ந்து கொள்ளும் வேளை, நூலைத் தந்துதவி என்னை ஊக்கப்படுத் தும் சகோதர நட்பு உள்ளத்திற்கும் நன்றிகள். ''களம் கண்ட தமிழீழம் வளம் காணும் நேரம் இது'' என்ற கட்டுரையிலிருந்து.....*

*''....சமூக மேம்பாடோ அன்றேல் வளர்ச்சியோ காண வழி சமைப்பதென்பது அங்கு வாழும் ஒவ்வொரு மனிதனும் ஒரு நிறைவான முழு நிறைவான வாழ்வை, அதாவது அவனது ஆன்மீகம், சமூகம், அறிவியல், பொருளியல், மனநலம், உடல் நலம் சார்ந்த ஆற்றல் வளங்களை மேம்படுத்தி முழு வளர்ச்சி காணக்கூடிய ஒரு சமூக அமைப்பை உருவாக்கும் செயல்முறையே ஆகும். மனிதனின் முழு வாழ்க்கை நலனையும் தழுவியதாகவும், தொடர்ந்து செல்லும் ஒரு வளர்ச்சியாகவும், தனி மனிதனையும் சமூகத்தையும் இயற்கையையும் ஒருங்கிணைக்கும் அணுகு முறையுடன் சமூக வளர்ச்சி விளங்க வேண்டும். ஒரு நல்வளம் பேணும் திட்டம் ஒரு சமூகத்தில் வாழும் அனைவரையும் தழுவியதாக அதாவது அனைத்து மக்களது நலனையும் கருத்தில் கொண்டதாக அமைய வேண்டுமே தவிர வருவாயைத் தனது குறிக்கோளாகக் கொண்டிருக்கக் கூடாது. இப்படிக் கூறுவதனால் வருவாய் தேவையற்றதென்று பொருள் ஆகிவிடாது. இங்கே நாம் கூற விழைவது மனித நலனுக்குச் சிறப்பு முன்னுரிமை சமூக வளர்ச்சித் திட்டங்களில் கொடுக்கப்பட வேண்டும் என்பதே.*

*'' வளர்ச்சி சார்ந்த திட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும், அதா வது- முன்னேற்பாடுகள், திட்டமிடல், முறைப்படுத்தல், பங்கீடு செய்தல் அனைத்திலும்- வளர்ச்சி காணவேண்டிய மக்கள் அனைவரும் ஈடுபடுத்தப்பட வேண்டும்.''*

*இச்சிறு பகுதியிலேயே பொருண்மிய மேம்பாடும் வளர்ச்சியும், (Economic Development/ Planning), பேண்தகு மேம்பாடு (sustainable Development) தொடர்பான சிந்தனைகள் தெளிவுற எடுத்தாளப்பட்டிருப்பதைக் காண முடிகின்றது. தாயகக் கட்டுமானத்தில் சிந்திப்பவர்கள், செயற்படுப வர்கள், பயனாளர்கள் என அனைவரும் கருத்திற் கொள்ள வேண்டிய கருத்துக்கள் அல்லவா இவை?*

*மட்டு- அம்பாறை மாவட்டத்திலிருந்து கடந்த 5ஆண்டுகளுக்கும் மேலாக வெளிவரும் ''போது'' என்ற சஞ்சிகையின் புரட்டாதி- ஐப்பசி 2003 இதழை அண்மையில் பார்க்கக் கிடைத்தது. வாகரைவாணனை ஆசி ரியராகக் கொண்டு வெளிவரும் இவ் இதழில் ''கம்பதாசன்'' எழுதிய ''இன்னும் எத்தனை நாட்கள்'' என்ற கவிதையிலிருந்து சில வரிகளை இலங்கைத் தேர்தல் காலப் பொருத்தம் கருதி நன்றியுடன் பகிர்கின்றோம்.*

'' ..............................

..............................

மக்கள் ஆட்சியாம்........
அதன்
மகிமை இவ்வளவே!
தனி ஒருவரிடம்
அதன் தலைவிதி!
நிறைவேற்றதிகாரம்
நினைத்ததைச் செய்யுமாம்.

..............................

..............................

இந்நாட்டுக்குடி மக்களே
இன்னுமா தூக்கம்?
இது ஒரு துக்க நாள்
எங்கும் பிரகடனம் செய்யுங்கள்
இறுதியாக............
இடு காடு செல்லுங்கள்
அங்கு
இரங்கலுரை நிகழ்த்துங்கள்!
ஒப்பாரி வையுங்கள்
ஓவென அழுங்கள்.......
இலங்கை ஜனநாயகம்
இறந்து விட்டது.
ஆமாம், இறந்தே விட்டது.''

*தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் உள்ளத்துச் சிந்தனையிலிரு ந்து:- ''............ ஒரு பலமான அரசுக்கு ஆதாரமாக நிற்கும் உறுதியான அரச நிறுவனங்களை நாம் இப்பொழுதிருந்தே கட்டி எழுப்ப வேண்டும்.'' 25.01.1993 அன்று, தமிழீழ சட்டக் கல்லூரியில் தலைவர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து நன்றியுடன் இக்கருத்து பகிரப்படுகின்றது.*

த.வசந்




# போர் நடந்த தடங்களில்.....

**போ**ரில் இரு கைகளையுமிழந்த அந்தப் போராளியின் முன் அமர்ந்திருந்தேன். மேசையில் சாப்பாட்டுத் தட்டிருந்தது. இன்னும் ஒரு போராளி இரண்டு பொய்க்கரங்களை எடுத்துவந்து அவன் கரங்களில் போட்டு விட்டான். அந்தப் பொய்க்கரங்களில் விரல் இடுக்கில் கரண்டிகள் இரண்டைச் சொருகி விட்டான். ''என்ன மாஸ்ரர் புதினமாய் பார்க்கிறியள், சாப்பிடுங்கோ'' என்று சிரித்துக் கொண்டே கூறியவன் அருகே இருந்த மற்றொரு சாப்பாட்டுத் தட்டை என்னருகே நகர்த்தி விட்டான். இரு கைகளிலுமிருந்த கரண்டிகளால் மளமளவென அள்ளிச் சாப்பிடத் தொடங்கினான். நான் அரைவாசி உண்ணும்முன் அவன் முழுவதையும் உண்டு முடித்தான். என்ன மாஸ்ரர் சாப்பாடு சரியான சிலோ போலக் கிடக்கு'' எனக் கூறினான். என்னால் ஆச்சரியத்திலிருந்து விடுபட முடியவில்லை. அருகே நின்ற போராளி மீண்டும் அந்தப் பொய்க்கரங்களைக் கழற்றிக் கொண்டு சென்றான். கையிழந்தாலும் போராளிகளின் எண்ணங்களும் செயல்களும் வேகமானவை, நம்பிக்கை நிறைந்தவை என்பதை உணர்ந்து கொண்டேன். மன வேதனை அடைந்ததும். அந்த வேதனையை வெளிப்பாடாய் எனது கேள்வியைத் தொடுத்தேன்.


கைகள் இல்லாதது எவ்வளவு கஸ்ரமாயிருக்கும். உங்கட மனதுக்கு அது துன்பமாய்யில்லையோ? எனக் கேட்டேன். ''இது பெரிய கஸ்ரமில்ல மாஸ்ரர். இந்திய இராணுவத்தினரின் நெருக்கடியான காலங்களில் பட்ட கஸ்ரந்தான் கஸ்ரம் '' பதுங்கி இருக்கக் கூடிய இடமென்று எதுவுமில்லை. லெப்.கேணல் றீக ண்ணனுடன் இருந்த அன்றைய நாட்கள் மற க்கமுடியாது. மட்டக்களப்பில ஒட்டியென்ற ஒரு இடங்கிடக்கு. அந்த இடத்துக்கு வேற பெயர் இருந்தாலும் ஒட்டி என்றுதான் நாங்கள் சொல்லுவம். ஆறெண்டு சொல்லுறதோ சேறெண்டு சொல்லுறதோ இல்லாட்டி காய்ந்து கிடக்கிற தரையென்று சொல்லுறதோ தெரியாது. காய்ந்த தரைமாதிரிக் கிடக்கும். இறங்கினால் கழுத்தளவுக்குப் புதையும். சில நேரங்களில் கூழ்ச்சேறு மாதிரிக் கிடக்கும். இருந்தாப் போல தண்ணி அரையடி ஓரடி சேத்துக்கு மேல் பெருகும். அப்படிப் பெருகிற நேரத்தில இறங்கினா மூச்சுத் திணறிச் சாகவேண்டியதுதான். அந்தச் சேத்துக்கால அரைமைல் தூரம் போய் தெற்பைப் புல்லும் கண்ணாவும் நிறைஞ்ச இடத்துக்கு கண்ணா மரத்தில பரன் போட்டு பல மாதங்கள் ஒழிஞ்சிருந்தம். இரவிலதான் அங்கிருந்து வெளியேறி எங்கட நடவடிக்கைளைச் செய்வம். சாப்பாட்டுக்காகவும் தண்ணிக்கா கவும் நாங்கள் பட்ட கஸ்ரம் மறக்கேலாது. அதுக்கு மேலாக அட்டைக் காட்டிலபட்ட துன்பம் சொல்லேலாது. இருந்தாலும் றீகண்ணன் அந்த இடத்தை ஏன் தெரிஞ்செடுத்தாரென்பதைச் சொல்ல வேண்டும்.

சேத்துக்க இறங்கிப் போகும் போது கூழாய்க் கிடக்கின்ற சேறு நீவிச்சுக் கொடுக்கும். போனாப்பிறகு திரும்பவும் பழைய மாதிரி வந்திடும். நடந்ததுக்கான தடயமே கிடக்காது. கழுத்தளவு புதையிற அந்த இடத்துக்க யாரும் இறங்கிறதில்லை. சில இடங்களில முதலைக ளும் கிடக்கு. அப்படியான இடத்துக்க கால் வச்சால் எட்டாத தூரத்துக்கு சேத்துக்க போக வேண்டியதுதான். காப்பாற்றுவதென்பது பொய்க்கதைதான். இந்தப் பயத்தில் அதுக்குள்ள எவரும் கால் வைக்கிறல்ல. ஆமி அதுக்க இறங்கி வாறதெண்டால் கனவிலும் நடக்காத விசயம். நாங்கள் அதுக்கதான் இருக்கிற மெண்டு அறிஞ்சால் செல்லடிப்பான். இந்தியன்ர முதலைக்கெலி அந்த இடங்களாலயெல்லாம் தாழப்பறக்கும். எங்களைக் காணமலிருக்க இன்னுமொரு வேலை செய்தார். றீகண்ணன். கண்ணா மரத்தில பரன் போட்டு தெற்பைப் புற்களைப் கூடாரம் போல கூட்டிக் கட்டிவிட்டார். வீடுமதிரி உள்ளுக்க இருக்கிற எவரும் வெளியே தெரியாது. அந்த இடத்துக்கு அருகாக மெயின்றோட். காலை, மாலை, இரவு எண்டு எந்த நேரமும் இந்திய இராணுவத்தினர் போய்கொண்டிருப்பதைப் பார்க்கலாம். இரவிலதான் எங்கட நடவடிக்கை. சாப்பாட்டுச் சாமான் கொண்டு வாறது, பறனுக்குப் பலகை கொண்டு வாறது, றெக்கி பாக்கிறது எல்லாமே இரவில் தான். சேத்துக்கால வந்து பறனிலை ஏறினதும் ஆள் மாறி ஆள் உடம்பெல்லாம் கடிச்சிருக்கும் அட்டையளப் புடுங்குவோம். இரவு இரவுபகலாக நுளம்ப படிக்கிறதில கை ஓங்சுபோகும். நுளம்புக் குதமெண்டும் அந்த இடத்தைச் சொல்லலாம். சில வாரங்களுக்குப் பிறகு நுளம்பு கடிக்கிறதெல்லாம் பெரிய விசயமாய் தெரியல்ல. அட்டைகடிக்கிறதும் புடுங்கி எடுக்கிறதும் சின்ன விசயம். தண்ணிக்காகப் பட்ட துயரத்தையும் சொல்லோணும் வெளியில இருந்து தண்ணி கொண்டுவரேலாது. தண்ணிக்கும் சாப்பாட்டிற்கும் அடிக்கடி வெளியில போய் வந்தால் ஆமி கண்டுவிடுவான். அதுக்காக தகர பெரல் ஒண்டு கொண்டுவந்து சேத்துக்க புதைச்சம். மேலால கொஞ்ச சேற்றினை அள்ளிவிட தண்ணி ஊறும். அதுதான் குடிக்கிறது. அதில் தான் சமைக்கிறது. சமைக்கிறதெண்டு சொல்லேலா, ரொட்டி தட்டுறதெண்டு சொல்லலாம். அந்தத் தண்ணி ஒரு மணம். சாக்கடைத் தண்ணிகூடப் பரவாயில்லை. இது மூக்குக்குக் கிட்ட எடுக்கேலாது. போதாக் குறைக்கு வாயில வைக்கேலாத உப்பு. என்ன செய்யிறது, குடிச்சம். எல்லாத்ததையும் விட மலங்கழிப்பதற்குத்தான் ஆக்க் கஸ்ரப்பட்டம். குரங்கு தாவிற மாதிரி கண்ணாக் கொப்புகள் தாவிச் சேத்துக்க விழுந்தெழும்பின நாட்கள் பல. போர் வாழ்க்கையில இப்படித் துன்பத்தை அனுபவிச்ச எங்களுக்கு கையில்லாதது பெரிய கஸ்ரமில்ல மாஸ்ரர். என்று சொல்லி விட்டு சிரித்தான் அந்தப் போராளி. சாப்பிட்ட கை கழுவ மறந்திருந்தேன். மாஸ்ரர் சாப்பாட்டைக் குழப் பிப் போட்டேன் சாப்பிடுங்கோ'' எனக் கூறி னான். இனிச்சாப்பிட முடியாது. எழும்பிக் கைகழுவிக் கொண்டேன். இன்னும் பல துயர் நிறைந்த போர் வாழ்வை அவனிடம் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் எழுந்தது. கைகழுவி விட்டு மீண்டும் வந்து அவனருகே அமர்ந்து கொண்டேன்.

நீங்கள் இப்பிடிக் கஸ்ரப்படேக்க எங்கட சனங்கள் உதவி செய்யல்லையோ? என அடுத்த கேள்வியொன்றைப் போட்டேன். சனங்களில்லாட்டி நாங்கள் எப்பவோ முடிஞ்சிருப்பம். ஊருக்குள்ள அடிக்கடி சுத்தி வளைப்பு நடக்கும். அதால நாங்கள் ஊருக்க தங்கிறல்ல. ஒரு தடவை எங்கட போராளி ஒருவனை வீணாகப் பறிகொடுத்த சம்பவமொன்றைச் சொல்லுறன் கேளுங்கோ.

அவன் எங்கள் எல்லாரையும் விடக் கட்டை. நாங்களிருந்த இடத்துக்குப் போற போது சேறு கழுத்தளவுக்குப் புதையும். திடீரென நீர் பெருகும். இப்படியான நேரங்களில் அவனுக்கு எட்டாமல் போகும். றீகண்ணை அல்லது ராமண்ணை அவனைத் தூக்கிக் கொண்டு வருவினம். ஆமி சிலவேளை எங்கட இருப்பிடத்தைக் கண்டு பிடிச்சால் தப்புறது கடினம் என நினைச்சு அவனைக் கிராமத்துக்க ஒருநாளிரவு கொண்டுபோய் விட்டிட்டு வந்தம். அடுத்த நாளே சுத்தி வளைச்சு அவனைச் சுட்டுப் போட்டாங்கள். அதை நினைச்சால் இண்டைக்கும் மனம் கனக்கும்.

கிராமத்துச் சனங்கள் பல வழிகளில உதவி செய்ததுகள். பின்னேரத்தில எல்லாம் விறகுக்கு வாற பொம்புளையள் விறகு கொண்டு போற சீமாட்டிக்குள்ள சோத்துப் பார்சலை வச்சிச் சுத்திக்கொண்டு வந்து தருவார்கள். ஆமி நிக்கிறதெண்டால் ஏதாவது சிக்னல் எங்களுக்குக் காட்டி விடுவார்கள். சேத்துக்குள்ளால இரவில நாங்கள் வெளிக்கிட முதல் ஆமி நடமாட்டம் பற்றி எப்படியேனும் தெரியப்படுத்துவார்கள். சேத்திலிருந்து வெளிக்கிட்டு ஊருக்கு போறபோது நடந்த இடமெல்லாம் சேறு படிஞ்சிருக்கும். அதையெல்லாம் அழித்து விடுவார்கள். அவர்களின் ஆதரவுதான் எங்களை நம்பிக்கையோட போராடவச்சது. எங்களுக்கு உதவி செய்து ஆமியால சித்திரவதை செய்யப்பட்டு சுடப்பட்ட சனங்கள் நிறைய இருக்குதுகள். ''இஞ்சாருங்கோ '' இவன்ர அத்தானெல்லாம் எங்களுக்காகவே வாழ்ந்து உயிர் விட்ட சீவன்தான் '' என அருகிலிருந்த போராளியைச் சுட்டிக் காட்டிச் சொன்னான். அருள்நேசராசா என்றால் பழைய போராளிகளுக்குத் தெரியும். பங்குடாவெளிக் கிராமம்தான் இவங்கட ஊர். பசுமையான ஊர். மாட்டுப்பட்டி இல்லாத வீடில்லை . நல்ல கிராமத்துக்கான பண்பாடுகள் அங்க நிறைய இருக்குது. ஓட்டு



வீடெண்டு சொல்லி ஒன்றிரண்டு மட்டுமே இருக்கு. செத்த வீடு, கல்யாண வீடுடெண்டு என்ன நன்மை தீமை வந்தாலும் அந்த வீட்டில கிராமத்து மக்கள் எல்லாருமே நிப்பார்கள். அவ்வளவு கூட்டுணர்வும் ஒற்றுமையும். எல்லா வீட்டிலேயும் நெல்லு சொரிஞ்சு வைக்கிற கொம்பறை இருக்கு. அழகான கிராமம்.

பால் வேணுமெண்டால் பால், தயிர் விருப்பமானவர்களுக்குத் தயிர், இறைச்சி வேணுமெண்டால் கோழி இறைச்சி. விருப்பமான எதுவோ அதோட சாப்பாடு வரும். அருள்நேசராசா அண்ணன்ர மனைவி நவமணிதேவியக்கா சலிப்பில்லாமல் சமைச்சுப் போடுவா. குதூகலமான சீவன்கள். கோழி வளர்த்தவர் எங்களுக்கெண்டே நாங்கள் சாப்பிட வருவமெண்டு ஆளுக்குத் தெரியும். காலமையே சந்தைக்குப் போய் பழவகைகள் வாங்கிக் கொண்டு வந்து வச்சிடுவார். நாங்கள் சாப்பிடும் போது தானே பக்கத்தில் இருந்து பரிமாறுவார். நாங்கள் சாப்பிட்டு முடிச்சதும் தானே மாம்பழங்களைச் சீவி வெட்டித்தருவார். இல்லாட்டி அவருக்குத் திருப்தி இருக்காது.

சிங்கள ஆமிக்கு எப்படியோ தகவல்கள் கிடைத்து விட்டது. ஒருநாள் நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கேக்க ''இனி அடிக்கடி வராதேங்கடாப்பா அவன்ர நடமாட்டம் வித்தியாசமாய் கிடக்கு'' என்று கூறினார். ''ஏனண்ண உங்களுக்குப் பயமாய்க் கிடக்கா, பயமாய் கிடந்தால் சொல்லுங்கோ, வராமலே விடுறம்.'' என்று சொன்னோம். ''எனக்கேதும் நடந்தாப் பறவாயில்ல, உங்களுக்கொண்டும் நடந்திடக் கூடாது அதுக்குத்தான் சொன்னனான்'' என்று சொல்லிவிட்டுக் கண் கலங்கினார். அன்றுதான் நாங்கள் அவர் பரிமாறிச் சாப்பிட்டநாள்.

பகல்ல சாப்பிட்டிட்டு இரவில ரெண்டு மூண்டு மைல் தள்ளியுள்ள காட்டுக்குப் படுக்கப் போய்விடுவம். கிராமத்தைச் சுத்தி வயல்வெளி. வயல்வெளியைக் கடந்தால் வில்வளைவு போலமைந்த காடு. அருநேசராசாண்ணனும் இரவில் வயல் காவலுக்கு வந்து காலையிலேயே வீடு திரும்புவார். அண்டைக்கு இப்படித்தான் நாங்கள் சாப்பிட்டபின் காட்டுக்குச் சென்று விட்டோம். நேசண்ணனும் வயலுக்குப் போய் அதிகாலையில் வீட்டுக்குத் திரும்பினார். வயல்வெளி ஒழுங்கையால் சைக்கிளில் வந்தவரைப் பதுங்கியிருந்த சிங்களப் படைகள் பிடித்துக் கொண்டார்கள். முகம், மூக்கு, பல்லெல்லாம் உடைந்து விசாரணை இல்லாமலே படபடவெனச் சுட்டுத் தள்ளினார்கள். கவச வாகனத்தில் அவர் உடலைக் கட்டியிழுத்துச் சென்றார்கள். எங்களை வளர்த்த கை, கால்கள், சிதைந்தது நொருங்கிப் போக கிராமம் பேச்சற்று மௌனித்து நிற்க இழுத்துச் சென்றார்கள். காட்டிலிருந்த எங்களுக்குத் துப்பாக்கிச் சத்தம் கேட்டது. ''வெடிச்சத்தம் கிராமத்துப் பக்கம் போலத்தான் கிடக்குது.'' அத்தானுக்குத்தான் ஏதும் நடந்ததோ தெரியாது. அத்தான ஆமி சுடக்கனவு கண்டனான். '' இவன் விடிய எழும்பிச் சொன்னான்.

எல்லோரும் கிராமத்துக்கு ஓட்டமும் நடையுமாகப் போய்ச் சேர்ந்தோம். எதிர்பார்த்ததுதான் நடந்திருந்தது. இப்பிடித்தான் மாஸ்ரர்,, எங்கட கஸ்ரங்களைத் தாங்கி வளர்த்த கனசனம் முடிஞ்சது. இவர்கள் இல்லையெண்டால் எங்கட போராட்டம் இந்தளவுக்கு வளர்திருக்காது.'' எனச் சொல்லி முடித்தான் அந்தப் போராளி .

—நன்றி போரும் வாழ்வும்—

## "தமிழீழத்தைத் தெரிந்து கொள்வோம்"

344. ''விடுதலை என்பது தனியே மண்ணுக்கும் மொழிக்கும் என்பதற்கும் அப்பால் ஒவ்வொரு மனிதனின் சமூக வாழ்விலும் உளவாழ்விலும் ஏற்பட வேண்டும்.'' என்ற தமிழீழத் தேசியத் தலைவரின் அவாவின் வழிப் பிறந்த கிராமிய மேம்பாட்டு அமைப்பின் பெயர் என்ன?

''ஊரக வளர்ச்சிப்பணி''

345. தமிழீழத்தில் தமிழ் பேசும் மக்களினது தேசிய ஆன்மாவை வெளிப்படுத்தும் மக்கள் அமைப்பாக 2003ஆம் ஆண்டில் தோற்றம் பெற்ற அமைப்பு எது?

தேசிய எழுச்சிப் பேரவை

346. தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் சிங்களப் படைகளுடன் இணைந்து செயற்பட்ட வெளிநாட்டு உளவு அமைப்புக்களாக மொசாட், சின்பெத், எஸ்.ஏ.எஸ் என்பவற்றுடன் கே.எம்.எஸ். என்பதும் குறிப்பிடப்படுகின்றது K.M.S என்பதன் விரிவாக்கம் என்ன?

**Kini Mini Service**

347. 1985அக்டோபரில் தமிழக ''தேவி'' வார இதழுக்குத் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் வழங்கிய நேர்காணலில் தன்னை மிகவும் கவர்ந்த நூல்களாக இரண்டைக் குறிப்பிட்டிருந்தார். டாக்டர் மு.வரதராசன் (மு.வ) எழுதிய ''தம்பிக்கு'' என்பது அதில் ஒன்று. மற்றைய நூல் எது?

பேரறிஞர் அண்ணா எழுதிய 'ஏ தாழ்ந்த தமிழகமே'

348. மேற்குறித்த நேர்காணலில் தான் 15 வயதிலேயே தலைவர்களின் வரலாற்றைப் படிக்க ஆரம்பித்ததாகத் தேசியத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். மேலும், ''நாம் தமிழர்'' என்று உணர்வூட்டிய தமிழறிஞர் ஒருவரின் இலட்சியங்களையும் படித்ததாகவும், சுதந்திர ஈழத்திற்காக அவர் கொடுத்த குரல் நெஞ்சிலே ஆழப்பதிந்து இருப்பதாகவும் கருத்துத் தெரிவித்திருந்தார். அத் தமிழ்ப் பெரியார் யார்?

சி.பா. ஆதித்தனார்.

349. மட்டு- அம்பாறை மாவட்ட விடுதலைப்புலிகளின் ''ரசிகன்'' இசைக்குழுவினரின் (சீலனின்) இசையமைப்பிலான முதல் பாடல் ஒலிப்பேழை வெளியீடு 06.11.2003 இல் கரடியனாறு ''தேனகம்'' மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. துள்ளிசைப் பாடல்களைக் கொண்ட அத்தாயக எழுச்சிப்பாடல் ஒலிப்பேழையின் பெயர் என்ன?

''மீனிசை''


(து.கோமளமைந்தன்)

350. ''எதிரியை விட துரோகிகளே மிகவும் ஆபத்தானவர்கள்'' என்று தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் எப்போது அறிக்கை வெளியிட்டார்?

1985 டிசம்பரில்

தொடரும்..........

# காத்திரன் பதில்

? காத்திரனே வருகின்ற தேர்தலில் வீணையின் நிலை என்ன?

சி.ரவிரஞ்சித், நாவற்கேணி,
செங்கலடி.

✔ வீணை வெற்றிலையை நம்பி இருக்கிறது.

? சீதனம் வாங்கும் மாமியார் பற்றி என்ன நினைத்தீர் காத்திரனே?

எம்.சுந்தரலிங்கம்,
தம்பிலுவில்.

✔ மருமகனே மருமகனே வா வா வா உன் பணப்பையை, வலது கையால் எடுத்து வா வா வா..... என்று பாடும் மாமிமார்களை சாமிமார்கள்தான் திருத்த வேண்டும்.

? காத்திரனே! மீண்டும் ஒரு யுத்தம் திணிக்கப்பட்டு வடக்கு கிழக்கு தமிழரின் கைக்கு வந்த பின் முஸ்லிம் தலைவர்கள் யாரிடம் கரையோர மாவட்டம் கேட்பார்கள்?

சிவகலா, காரைதீவு.

✔ சிறிலங்கா அரசிடம்தானே இதை கேட்கிறார்கள் தமிழீழ அரசமைத்தால் கேட்கும் நிலை வரவே வராது.

? காத்திரனே! ஒரு ஆணும், ஒரு பெண்ணும் திருமணம் செய்யும் போது ஏன் ஊர் சொல்லி திருமணம் செய்கிறார்கள்?

அ.பிரபா, கிரான்.

✔ ஊரெல்லாம் திருமணம் செய்யாமல் ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த கொள்கையுடன் வாழ்வதற்காக.

? காத்திரனே! தாய்க்குப்பின் தாரம் தாரத்திற்கு பின் எது?

எஸ்.மி சுதா, சோதயன்கட்டு
கடுக்காமுனை.

✔ தார் றோட்டு.

? சந்திரிக்கா அம்மையார் திட்டம் போட்டு மக்களை குழப்ப முடிவு எடுத்துள்ளார் இதற்கு என்ன செய்ய வேண்டும் காத்திரனே?

கி.நிஷாந்தன்,
கன்னன்குடா~ 02

✔ சந்திரிக்காவை கிழப்ப மக்கள் முடிவு எடுக்க வேண்டும்.

? காத்திரனே! மனம் உடைந்தவர்கள் சங்கம் ஒன்றை அமைத்து ஆலோசனை வழங்கவுள்ளேன் இது வெற்றிகரமாக அமைய என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்?

வி.சகிகலா, மீனகம்.

✔ அந்த சங்கத்தில் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவை போசகராகவும், பிரதமர் ரணிலை தலைவராகவும் , கதிர்காமரை ஊடகப் பேச்சாளராகவும் நியமித்தால் வெற்றி நிட்சயம்.

? அன்பு காத்திரனே! சிறந்த கணவன் அமைவதெல்லாம் பெண்கள் கொடுத்த வரமா, இறைவன் கொடுத்த வரமா?

ரி. தாமரை, நந்தா, கதிரவெளி

✔ மாமியார் கேட்கும் சீதனத்தைபொறுத்த வரம்.

? காத்திரனே! தேடல் உள்ள வாழ்க்கை எப்படி இருக்கும்?

கானத், நி.லோஜினி,
திக்கோடை.

✔ புத்தி ஜீவிகளைப்போல் இருக்காது, பக்தி ஜீவிகளைப்போல் இருக்கும்.

? காத்திரனே! சிங்கள இராணுவத்தினருடன் தமிழ் யுவதிகள் உறவாடிச் செல்கிறார்கள் இவர்களுக்கு இந்த யுவதிகள் இரத்த உறவா?

தங்க~ நாகேந்திரன்,
கோயில்போரதீவு

✔ இரத்தம் குடித்த உறவு.

**உங்கள் கேள்விகளை:**

**காத்திரன் பதில்**
**தமிழ் அலை**
**கொக்கட்டிச்சோலை**
எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்

## இதோ மகிழ்ச்சியான செய்தி!

**மிகக்குறைந்த கட்டணங்களில் உங்கள் விளம்பரங்களை தமிழ்அலையில் பிரசுரியுங்கள்**

**புதிய விளம்பரக் கட்டண விபரம்**

| தமிழ்அலை | வார இதழ் | | நாள் இதழ் |
|---|---|---|---|
| | க.வெ. | கலர் | க.வெள்ளை |
| முழுப்பக்கம் | 5000 ரூபா | 10000.ரூபா | 4.500. ரூபா |
| அரைப்பக்கம் | 2500 ரூபா | 5000.ரூபா | 2000. ரூபா |
| காற்பக்கம் | 1250 ரூபா | 2500.ரூபா | 1000. ரூபா |
| ஒரு கொலம்(C.M) | 25 ரூபா | 50.ரூபா | 20. ரூபா |

- மரண அறிவித்தல், பிறந்தநாள் விளம்பரங்களுக்கு 10 வீதம் கழிவு
- மாவீரர்களுக்கு 20 வீதம் கழிவு

**தொடர்புகளுக்கு**

மட்டக்களப்பு நகரில்
பிரந்திய பணிமனை,
தமிழ் அலை,
இல- 240,திருமலை வீதி,
மட்டக்களப்பு

விளம்பர முகாமையாளர்,
தமிழ் அலை,
பிரதான வீதி கொக்கட்டிச்சோலை
தொலை பேசி -065-2226110

## விடுதலை உணர்வு ஆசான்களின்....

6ம் பக்கத் தொடர்ச்சி

வீரனுடைய மகத்துவத்தை உணர்த்தும் வகையில் சில நிகழ்வுகள் செய்வதனாலும் இவ் ஆசிரியர்கள் இன்றும் பயந்து ஒதுங்கி நமக்கேன் வீண் வம்பு எனும் நிலையில் இன்று எத்தனையோ ஆசிரியர்கள் எம் மத்தியில் நடைப்பிணங்களாககாலம் கழிக்கின்றனர்.

இந் நிலை எம் வடதேசத்திலும் தென் தமிழீழ தேசத்திலும் மாற வேண்டும் எம் தென் தமிழீழத்தில் கடந்த 2004-01-21ம் திகதி புதன்கிழமை கிழக்கு பல்கலை கழக சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வில் ''தமிரே புலிகள் புலிகளே தமிழர்'' எனும் நிலை உருவாகி எம்மை மீண்டும் மாற்றான் தீண்டிப் பார்க்க முடியாத நிலைக்கு எம் விடுதலைப் புலிகளை வலுப்படுத்தி உலகிலே எம் இயக்கத்தினையும் எம் தலைவனையும் போற்றிட எம் தமிழீழ ஆசிரியர்களே உணர்வுள்ள மாணவ சமூகத்தை ஆக்க முன்வாருங்கள். ஆசிரியர்களால் தமிழ் உணர்வும் நல்ல வள சமூகமும் ஏற்படுத்த முடியும் எனும் நிலையினை ஏற்படுத்திக் காட்ட முன் வாருங்கள் எம் தலைவன் வேலுப்பிள்ளை பிரபாகரன் காலத்திலும் எம் தென்தமிழீழ மூத்த தளபதி கேணல் கருணா அம்மா னின் கனவுகளும் நனவாக வேண்டும். மண்ணோடு வித்தான எம் வீர புருஷர் களது புனித கனவுகளும் நனவாகி ''புலிகளே தமிழர் தமிழரே புலிகள்'' எனும் பொங் கு தமிழ் வாசகம் செயல் வடிவம் பெறட்டும் ஆசிரியர்களே உணர்வுடனும் உணர்வு ஊட்டுபவர்களாயும் மாறுங்கள்

## இலங்கைத் தமிழ்....

6ம் பக்கத் தொடர்ச்சி

உதாரணமாக பாலேஸ்வரி எழுதிய சுடர்விளக்கு மண்டூர் அசோகா எழுதிய சிறகொடிந்த பறவைகள் பவானி ஆள்வாப்பிள்ளை எழுதிய பொரிக்காத முட்டை என்ற கதைகளையும் கூறலாம். அடுத்து புலம் பெயர் சமுதாயத்தின் பிரச்சினைகளைப் கருவாகக் கொண்ட சிறுகதைகள் தோன்றின. எடுத்துக் காட்டாக இராஜேஸ்வரி பாலசுப் பிரமணியம் எழுதிய இக்கரைக்கு அக்கரை பச்சை கற்புடைய விபச்சாரி என்ற சிறுகதைகளையும் மற்றும் களுவாஞ்சிக்குடி யோகன் (அவுஸ்ரேலியா) எழுதிய கதைகளையும் கூறலாம்.

சமூகத்தில் காணப்பட்ட சாதிப்பிரச் சினைகளைக் கருவாகக் கொண்டும் சிறுகதைகள் எழுதப்பட்டன. இவ்வாறான கதைகளை டானியல் பெருவாரியாக எழுதினார். இக்காலப்பகுதியில் மலையக மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைக் கொண்டும் கதைகளை எழுதினர்.

இலங்கைத் தமிழ்ச் சிறுகதைத் துறையில் மொழி பெயர்ப்பு முயற்சிகளும் இடம் பெற்றுள்ளன. அவ்வப்போது தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பிறமொழிச் சிறுகதைகள் மொழிபெயர்க்கப்பட்டன. சிங்களத்தி லிருந்து தமிழுக்கு பல சிறுகதைகள் மொழிபெயர்க்கப்பட்டன. நூல் வடிவில் மயிலங் கூடலூர் த.கனக ரெத்தினம் சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்த்துதவிய சேது பந்தனம் என்ற சிறுகதைத் தொகுதி குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்வாறு இலங்கை சிறுகதை இலக்கியத்தின் வளர்ச்சி காணப்படுகின்றது. இலங்கை சிறுகதை இலக்கிய வளர்ச்சிக்கு பத்திரிகைகள் சஞ்சிகைகளில் முடங்கிக் கிடக்கும் தரமான சிறுகதைகளும் பல உண்டு. பல சிறுகதையாசிரியர்கள் தம் வறுமையின் கொடுமையாலும் மற்றும் தமக்கேற்ற ஆற்றலை வெளிப்படுத்த தகுந்த ஊடகம் கிடைக்காமையும் காரணமாகும். எனவே உலகச் சிறுகதைகளோடு ஒப்பிடத்தக்க வளர்ச் சியை ஈழத்து சிறுகதை அடைந்து வருகின்றது. இதை சிறந்த சிறுகதையா கவும் உலகத்திலே மிகச் சிறந்த சிறுகதை என்ற வரிசையில் முதலிடத்தில் நிலை நிறுத்துவதற்கு சிறுகதையை இன்றும் சில படிகள் உயர்த்த வேண்டும். என்பதில் ஐயமில்லை.

# தமிழ்அலை ஓராண்டு வெற்றிக் கிண்ணம்

*கிழக்கு மாகாணத்தின் ஒரே பத்திரிகையான தமிழ்அலை முதலாம் ஆண்டு நிறைவையொட்டி தமிழீழ விளையாட்டுத்துறையின் மட்டு. அம்பாறை மாவட்ட விளையாட்டுத்துறையினரால் மட்டு. அம்பாறை மாவட்ட உதை பந்தாட்ட சங்கங்களினால் பதிவு செய்யப்பட்ட உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி*

- இச்சுற்றுப் போட்டியில் கலந்து சிறப்பிக்கவுள்ள மட்டு.அம்பாறை மாவட்ட உதைபந்தாட்டக் கழகங்கள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ இல. 46, பயனியர் வீதியில் அமைந்துள்ள மட்டு. அம்பாறை மாவட்ட விளையாட்டுத்துறை செயலகத்துடன் தொடர்வு கொள்ளவும்.
- போட்டி நுழைவு விண்ணப்பப் படிவங்களை 15.03.2004 முதல் அனுப்பி வைக்கவும்.
- இடம்:- மட்/இந்துக் கல்லூரி மைதானம்.
- காலம்:- (01.04.2004 முதல் 05.04.2004) வரை
- போட்டிகள் யாவும் விலகல் முறையில் (Knock out) இடம்பெறும்.
- போட்டிகள் யாவும் உதைபந்தாட்ட சட்ட விதிகளுக்கு அமைவாக நடாத்தப்படும். (சீருடை, காலுறை என்பன கண்டிப்பாக ஒரே நிறத்தினையுடையதாக இருக்க வேண்டும். இலக்கம் தெளிவாக இருக்க வேண்டும்
- இச்சுற்றுப் போட்டியில் பங்கு பற்றி வெற்றி பெறுகின்ற அணிகளுக்கு
  - முதலாம் இடத்திற்கு:- தமிழ்அலை முதலாம்ஆண்டு நிறைவு வெற்றிக் கிண்ணமும், பரிசில்களும் வழங்கப்படும்.
  - இரண்டாம் இடத்திற்கு:- தமிழ்அலை முதலாம் ஆண்டு நிறைவு வெற்றிக் கிண்ணமும், பரிசில்களும் வழங்கப்படும்.
  - மூன்றாம் இடத்திற்கு:- தமிழ்அலை முதலாம் ஆண்டு நிறைவு வெற்றிக் கிண்ணமும், பரிசில்களும் வழங்கப்படும்.
  - நான்காம் இடத்திற்கு:- தமிழ்அலை முதலாம் ஆண்டு நிறைவு வெற்றிக் கிண்ணமும், பரிசில்களும் வழங்கப்படும்.
  - நன் நடத்தை அணிக்கு:- தமிழ்அலை முதலாம் ஆண்டு நிறைவு வெற்றிக் கிண்ணமும், பரிசில்களும் வழங்கப்படும்.
  - இது தவிர சிறந்த வீரர், சிறந்த கோல் காப்பாளர், சிறந்த தொடர் வீரர் ஆகியோருக்கு விசேட பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படும்.
- போட்டி நுழைவுக் கட்டணமாக 250 ரூபா அறவிடப்படும்.

Regd. as a News Paper at the G.P.O.(QD/25/NEWS/2004)

## அலையின் பார்வையில்



வாழைமரத்தின் இடை நடுவிலிருந்து குலை வெளிப்பட்டிருப்பதையே படத்தில் காண்கிறீர்கள். இவ்வதிசய வாழை தாழங்குடா திருமதி.அக்னஸ் ஜோசப் அவர்களின் வீட்டுத்தோட்டத்தில் விளைந்ததாகும். (படப்பிடிப்பு:~ஜயதேவா, ராஜீ J.V.S ஸ்ருடியோ)









இப்பத்திரிகை கொக்கட்டிச்சோலை பிரதான வீதியில் உள்ள நித்திபதிப்பகத்தில் அச்சிட்டு 22- 02 -2004 அன்றுவெளியிடப்பட்டது.